DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1442 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 24, 2023

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# தமிழீழ தேசியக் கொடி நாளில் கனடாவின் பிரம்ப்ரன் நகரசபை முன்றலில் அதன் முதல்வர் பெற்றிக் பிறவுண் கொடியேற்றினார்



கடந்த 21-11-2023 அன்று, ஈழத் தமிழர்கள் 33வது வருடாந்த தமிழீழ தேசிய கொடி தினத்தை கொண்டாடும் நிலையில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர்கள் பிரம்ரன் நகர சபையின் முன்றலில் உத்தியோகபூர்வமான கொடியேற்றும் நிகழ்விற்காக கூடியிருந்தனர். அவர்களுடன் பிரம்ரன் நகர மேயர் பேட்ரிக் பிரவுண் மற்றும் கவுன்சிலர் ராட் பவர் ஆகியோர் மகிழ்ச்சியுடன் பங்கெடுத்திருந்தனர்.

1989 இல் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஈழத் தமிழர்களுக்கான கொடியின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அதனை ஆரம்பித்து வைத்தார். ஈழப்போராட்டத்தின் மத்தியில் எமது சொந்த மண்ணில் சம உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் பொதுமக்கள் போராடிய போது இந்த புதிய கொடி கொண்டு வரப்பட்டது. அத்துடன் இந்தக் கொடியானது ஈழத் தமிழர்களுக்கான அடையாளமாகவும் திகழ்கின்றது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க கொடியேற்றும் நிகழ்வு தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் வெளியிட்டுள்ள நன்றி தெரிவிக்கும் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

# Ontario Announces Comprehensive Strategy to Boost Child Care Workforce and Protect Children

## ஒன்றாரியோவில் குழந்தை பராமரிப்பு பணியாளர்களை அதிகரிக்கவும் குழந்தைகளை பாதுகாக்கவும் விரிவான திட்டம்



ஒன்றாறியோ அரசாங்கம் மாகாணத்தின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க மற்றும் விரிவான குழந்தை பராமரிப்பு பணியாளர் உத்தியை அறிமுகப்படுத்துகிறது என ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே அவர்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை அறிவித்தார்.

ஒன்றாரியோ மாகாணத்தில் இயங்கிவரும் பல்லின பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்கள் ஆகியோரோடு நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே இதனை அறிவித்தார்.

. கனடா ஒன்றாறியோ முழுவதிலும் உள்ள ஆரம்பகால கற்றல் மற்றும் குழந்தை பராமரிப்பு ஒப்பந்தத்தின் மூலம் நிதியுதவியுடன், ஒன்றாறியோவின் இந்தத் திட்டம் பதிவுசெய்யப்பட்ட ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வியாளர்களுக்கு **(RECEs)** அதிகரித்த ஊதியம் மற்றும் தகுதிவாய்ந்த கல்வியாளர்களை இணைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களை தொடர்ச்சியாகத் தக்கவைத்துக்கொள்வதற்கான பல்முனை உத்தியை வழங்கும். எனது அவர் அறிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG
Great Coverage.
BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial
Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

# விற்பனை நிலையம் தற்போது செயற்படுகின்றது




## தற்போது தயாராக உள்ள புதிய வீட்டுத் தொகுதி

பிக்கரிங் நகருக்கு வடக்கே அழகிய பங்களா இல்லங்கள் மற்றும் இரண்டு மாடி இல்லங்கள்

FROM **2,600-5,000 Sq. Ft.** ON

# 100' WIDE x 300' DEEP LOTS

விலைகள் 2.3 மில்லியன் டாலர்களிலிருந்து ஆரம்பமாகின்றன

## எமது விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்

திங்கள் தொடக்கம் வியாழன் வரை மதியம் 12.00 தொடக்கம் இரவு 7.00 வரை
வெள்ளிக்கிழமைகளின் வருவதானால் முன்பதிவு தேவை
வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் மதியம் 12.00 தொடக்கம் மாலை 5.00 வரை
விற்பனை நிலையம் அமைந்திருக்கும் விலாசம்: 21 GOLF LINKS DRIVE, AURORA

அழையுங்கள் **416-606-7462**

அல்லது **ClareHavenEstates.com** என்னும் இணையத்தளத்திற்குச் சென்று பாருங்கள்

LEARN MORE

GERANIUM
From the ground up™

geranium.com

PIVOT REAL ESTATE GROUP

Exclusive Listing Brokerage: Pivot Real Estate Group. *Prices, programs, and specifications are subject to change without notice. Renderings are artist's concept. Brokers protected. E.&O.E. November 2023.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

## 50வது ஆண்டை பூர்த்தி செய்யும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினை 'உடைத்தெறியும்' நோக்கில் 'சில' நாடுகளிலிருந்து தமிழ்நாட்டில் ஒன்றுகூடிய 'சில' 'குழப்பவாதிகள்'

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்தவர்களில் முக்கியமானவர். மறைந்த தமிழ் அறிஞரும் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் நேரடியாகப் பாராட்டப்பெற்ற குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களே ஆவார்.

அவரது ஆழமான சிந்தனையும் இதயசுத்தியோடு இயங்கியும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை பண்பாடு என்னும் 'தண்ணீர் ஊற்றி' வளர்த்த பெருந்தன்மையும் இதுவரையில் ஒருவரிடத்திலும் நாம் கண்டதில்லை.

மலேசியா, கனடா. தென்னாபிரிக்கா. பிரான்ஸ், இலங்கை. இந்தியா. ஜேர்மனி போன்ற நாடுகளில் சிறப்பான முறையில் பண்பாட்டு மாநாடுகளை நடத்தி அவற்றை வெற்றிகரமாக பாராட்டுக்கள் குவிந்த விழாக்களாக நடத்துவதற்கு முன்னின்று உழைத்த பெருந்தகை 'ஆவணக்காப்பக நாயகன்' குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களையும் அவரோடு அவ்வப்போது சேர்ந்து உழைத்த உயர்ந்த இந்த இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர்களையும் நாம் இந்த நாளில் நினைத்துப் பார்க்கின்றோம்.

கனடாவில் 1996ம் ஆண்டு பிரமாண்டமான முறையில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் மாநாட்டை நடத்திய மறைந்த தலைவர் செல்லையா அவர்கள் தொடக்கம் பின்னர் தொடர்ச்சியாக தலைமைப் பதவிகளை வகித்த அன்பர்களையும் அவற்றிலும் மேலாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகமாக கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் ஜேர்மனி வாழ் திரு துரை கணேசலிங்கம் அவர்களையும் நாம் போற்றி மகிழ்கின்றோம்.

அதனைத் தொடர்ந்து தற்போதைய தலைவராக உள்ள திரு வினாசித்தம்பி துரைராஜா அவர்களின் முயற்சியால் கனடாவின் மத்திய அரசாங்கத்தின் கீழ் வரும் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் அங்கீகரிக்கப்பட் அமைப்பாக முக்கியத்துவத்தை பெற்ற உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை பயன்படுத்தி சில 'புல்லுருவிகள்' கனடாவிலும் சதித் திடடங்களைத் தீட்டினார்கள். அவர்களில் சிலர் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டார்கள்.

இவற்றையெல்லாம் முறியடித்து திரு வினாசித்தம்பி துரைராஜா அவர்களும் திரு சிவா கணபதிப்பிள்ளை அவர்களும் தீவிரமாகச் செயற்பட்டு செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அவர்களின் பக்கத்துணையோடு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தனித்துவத்தையும் சிறப்பை பாதுகாத்தனர்.மிகுந்த பொருட்செலவில் இயக்கத்தின் 'இலட்சனை' மற்றும் பெயர் ஆகியவற்றை பாதுகாத்து கனடாவில் இயங்கும் தலைமையகக் குழுவிடம் ஒப்படைத்தார்கள்.

இவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் கொண்ட இந்த உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்றதாகும். எதிர்வரும் 2024ம் ஆண்டில் தனது 50ம் ஆண்டில் கால்பதிக்கும் உன்னத இயக்கமாகவும் மேலும் உலகின் பல நாடுகளிலும் தலைமைகத்தின் அங்கீகாரத்தோடு கிளைகளைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை 'உடைத்தெறியும்' நோக்கோடு தமிழ்நாட்டில் மாநாடு என்ற பெயரில் சிறு சிறு கூட்டங்களை நடத்தி தமிழ்நாட்டு அரசாங்கத்தையும் அறிஞர் பெருமக்களையும் பொதுமக்களையும் ஏமாற்றும் இந்த 'போலிகளை' இனங்கண்டு ஓதுக்க வேண்டும் என்ற குரலாக எமது இவ்வாரக் கதிரோட்டம் உங்களுக்காய் படைக்கப்படுகின்றது. இந்தச் செய்தி தமிழர் வாழும் நாடுகளில் இயங்கிவரும் ஊடக நிறுவனங்களின் பார்வைக்கும் சென்றடைய வேண்டும் என்றும் எண்ணுகின்றோம்.!

## House for Sale in Srilanka

Single Family - Bungalow House
Lot Size: 10 perches / 2722.5 Sq.ft.
Floor Area: 1530 sq.ft
Location: Kattuwa, Negombo (30 mins drive from Bandaranayaka International Airport)
Year built: 2016

Interior: Fully tiled and fully furnished. Living and sitting rea. 2 full bathrooms. 1 Master bedroom with ensuite. 2 bedrooms. Kitchen.
Exterior: Porch (tiled with timber look tiles). Front garden space. Outdoor kitchen with 4 burner glass stove top (open kitchen concept). Interlock paving - walkways on 3 sides.
Appliances: Solar power on grid (on roof). A/C (master bedroom). Double Door Fridge. TV with stand (32"). 4 burner glass stove top (outdoor kitchen)
Contact: 306 470 0204

## 50வது ஆண்டில் கால்பதிக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் உத்தியோகபூர்வமான பதிவுகளோடு கனடாவில் இயங்கிவரும் நிலையில்... (பின் பக்கத் தொடர்ச்சி)

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைச் செயலகம் கனடாவில் இயங்கிவருகின்றது. இந்த நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இயக்கத்திற்கான உத்தியோகபூர்வ பதிவு கனடிய மத்திய அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது. தலைமையக செயற்பாட்டுக்குழுவின் தலைவராக கனடாவாழ் வினாசித்தம்பி துரைராஜா அவர்களும் செயலாளர் நாயகமாக ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களும் வடஅமெரிக்க நாடுகளுக்கான சிரேஸ்ட உப தலைவராக கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை அவர்களும்

அகிலக் கிளைகளின் ஒருங்கிணைப்பாளர் ஜேர்மனி வாழ் இ. ராஜசூரியர் அவர்களும் கொள்கை பரப்புச் செயலாளராக கனடா வாழ் நடா ராஜ்குமார் அவர்களும் நிர்வாகச் செயலாளராக ஜேர்மனி வாழ் கிரே'ன் ஜேம்ஸ்ரன் அவர்களும் அனைத்துலக ஊடகப் பொறுப்பாளராக கனடா வாழ் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களுக்கு பக்கபலமாக உலகின் பல நாடுகளிலும் இயங்கிவரும் கிளைகளின் நிர்வாகக் குழுவினர் தொடர்ச்சியாக எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் விசுவாசமாக பணியாற்றி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளைத் தலைராக உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற கவிஞர் பெருமகனும் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர். காலஞ்சென்ற கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பெற்றவருமான பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தலைவராக இருந்து இயக்கத்தின் பெருமைதனை காத்து வருகின்றார்.

இவ்வாறான மதிப்புறும் நிலையில் நேர்த்தியான முறையில் இயங்கிவரும் எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும் சட்ட விதிகளுக்கு முரணான வகையிலும் உண்மையான விடயங்களை மூடி மறைத்தும் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டிலும் வெளிநாடுகள் சிலவற்றிலும் உள்ள "குழப்பவாதிகள்" சிலர் ஒன்று சேர்ந்து "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் மலேசியா கிளை என்ற பெயரில் சிறிய கூட்டங்களை ஆங்காங்கே நடத்தி உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கோட்பாடுகளுக்கு முரணான வகையிலும் கனடிய அரசின் சட்டங்களுக்கு எதிராகவும் அத்துடன் தமிழ் நாட்டு மக்களையும் அங்குள்ள அறிஞர் பெருமக்களை ஏமாற்றும் வகையில் நடந்து கொள்கின்றார்கள் என்பதை தமிழ் நாட்டில் வாழும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அபிமானிகளும் ஆதரவாளர்களும் அறிஞர் பெருமக்களும் இயக்கத்தின் தலைமை அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள். எனவே மேற்படி "குழப்பவாதிகளுக்கு" எதிராகவும் அதேவேளை மீண்டும் ஒரு தடவை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்திற்கு வழங்கப்பெற்ற கனடிய அரசின் அங்கீகாரத்தையும் இயக்கத்தின் நெறிகளையும் பாதுகாக்கும் வகையில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளார்கள். இதற்கான உத்தியோகபூர்வமான கடிதத் தொடர்புகள் கனடிய மத்திய அரசோடும் கனடாவிலும் தமிழ் நாட்டிலும் உள்ள சட்டவாதிகளோடு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் தமிழ் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

**கொட்டாஞ்சேனையில் வீடு விற்பனைக்கு**

கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள தொடர்மாடி கட்டடத்தில் (FLATS) ஒரு பெரிய அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. நீர் மற்றும் மின்சாரம் போன்ற அனைத்து வசதிகளும் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு:- 647 779 1712

**மணமகள் தேவை**

கனடாவில் வசிப்பவரும் கனடிய பிரஜாஉரிமை உள்ளவரும் 39 வயதுடையவருமான விவாகரத்து பெற்ற ஆண் ஒருவருக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்: 647 924 6373

**பெண் சமையல் உதவியாளர் தேவை**

ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு
பாலா மாஸ்டர்:- 416 418 8425

**வீடு வாடகைக்கு**
**House for Rent**

ஸ்காபுறோ நகரில் Midland/Steeles சந்திப்புக்கு அருகில் உள்ள 3 bedrooms/2full washrooms/separate entrance with 1 room. ஆகியன கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. More convenient area. TTC, YRT, Go station schools மற்றும் தமிழர் கடைகள் ஆகியன நடந்து செல்லும் தூரத்தில் உள்ளன
Contact : 647-994-6158

உலக செய்திகள் World News

# தமிழீழத் தேசியக்கொடி நாள் நவம்பர் 21 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட உள்ளது

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அறிவிப்பு!!

ஏறக்குறைய நான்கரை நூற்றாண்டு காலனிய ஆட்சியில் தமிழர்களிடம் கொடி இல்லை. 1989 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக்கொடியின் முக்கியத்துவத்தை முதன்முதலில் உணர்ந்த மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தமிழீழத் தேசியக்கொடியை அறிமுகப்படுத்திஏற்றிவைத்தார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றம் அக்டோபர் 24 ஆம் திகதி 2021ம் ஆண்டு பிரதமர் உருத்திரகுமாரன் தலைமையில் ஏகமனதாக தீர்மானித்து நவம்பர் 21 ஆம் திகதியை தமிழீழத் தேசியக்கொடிநாளாக பிரகடனப்படுத்தியது.

கனடா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும், அமெரிக்கா ஆகிய நாடுகளில் தேசியக்கொடி நாள் நிகழ்வுகள்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந் நிகழ்வுகளில் பறை முழக்கம், எழுச்சி நடனம், இசைக்குழு அணிவகுப்பு, தாயகப் பாடல்கள், சிறப்புரைகள் ஆகியன இடம்பெறும். அத்துடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் இளையசமுதாயத்திற்கு நடாத்தப்படும் கட்டுரைப் போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கான பரிசும், பங்கேற்பவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். கட்டுரைகளின் தலைப்புக்களாக "தமிழ்த் தேசியத்தின் குறியீடு மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்", "தமிழீழக் கொடிநாள்", "மாவீரர் நாள்" ஆகியன கொடுக்கப்பட்டன.

இலங்கைக்குச் சொந்தமான வாளேந்திய சிங்கத்தை சித்தரிக்கும் கொடியின் வடிவமைப்பில் தமிழர்கள் எவரும் பங்கேற்கவில்லை. இலங்கைக் கொடியை தமிழர்கள் எவரும் ஏற்கவும் இல்லை. இலங்கைக் கொடி, 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் ஆங்கிலேயர்களிடம் வீழ்ச்சி அடைந்ததன் 100வது ஆண்டான 1915 ஆம் ஆண்டு சிங்களப் புத்திஜீவிகளால் உருவாக்கப்பட்டது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தேசியக்கொடிநாள் பிரகடனத்தில், தமிழீழத் தேசியக்கொடி, தமிழீழத்தின் இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும் குறிக்கின்றது எனவும் மற்றும் இக்கொடி உலகம் முழுவதிலும் உள்ள தமிழீழ தேசத்தைச்சேர்ந்த அனைத்து மக்களையும் பிரதிநிதித்து வப்படுத்துகின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இப் பிரகடனத்தில் தமிழீழத் தேசியக்கொடி, தமிழீழ தேசம் அந்நிய ஆட்சியிலிருந்தும், சிங்களபௌத்த மேலாதிக்கத்திலிருந்தும் விடுதலை பெறுவதற்கும் தமிழீழ தேசம் செய்த அளவிட முடியாத உன்னத தியாகத்தை நினைவூட்டுகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடி நாள் பிரகடனத்தில் இறுதியாக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும், மீண்ட இறைமையின் அடிப்படையிலும், ஈடு செய் நீதியின் அடிப்படையிலும், சமூக நீதி நிலவும் தமிழீழத்தை அமைப்பதற்கு உறுதியுடனும், திடசங்கற்பத்துடனும் உழைப்போம்என உலகிற்கு உரத்த குரலில் எடுத்து சொல்வோம்எனக் குறிக்கின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பொம்மை நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பது வீரப்பிரதாபம் பேசி நாடாளுமன்ற சலுகைகளை மட்டும் அனுபவித்துவிட்டு போவதற்காக அல்ல

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



கடற்றொழிலாளர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு யாரும் அரசில் அங்கம் வகிக்க வேண்டிய அவசியமில்லை.

நாட்டை ஆழ்பவர்களே நாடாளுமன்ற உறுப்பினர்கள். கூட்டுப்பொறுப்போடு உழைக்க முன் வாருங்கள், மக்கள் உங்களுக்கு வாக்களித்தது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே, மாறாக வீரப்பிரதாபம் பேசி விட்டு வெறும் பொம்மைகளாக குந்தியிருப்பதற்காக அல்ல, அல்லது ஊடகங்களுக்காக உரத்து கூச்சலிட்டுவிட்டு நாடாளுமன்ற சலுகைகளை மட்டும் அனுபவித்துவிட்டு போவதற்காக அல்ல.

பொருளாதார ரீதியில் நலிவடைந்திருந்த நம் நாடு இன்று மெல்லென நிமிர்ந்து வருகிறது. தாகமெடுத்த கொக்குக்கு தாம்பாளத்தில் தண்ணீர் வழங்காமல், கூசாக்களில் நீர் இறைத்து தாகம் தீர்க்க எந்த நாடு வந்தாலும் நாம் அதை வரவேற்போம் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது தேசம், எமது மக்கள், எமது உரிமை, எமது மீள்எழுச்சி, எமது நாடு, எமது இறைமை, எமது அயலகம், இவைகளை எம் நெஞ்சில் நிறுத்தியே சர்வதேச உறவுகளை முன்னெடுத் வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தமது அயலக (இந்தியா) உறவுக்கும் தமக்கும் இடையில் சிண்டு முடிந்து விடும் அரசியல் சூழ்ச்சிகளும் இங்கு அரங்கேறி வருகின்றன, ஆனாலும் அந்த கனவுகள் ஒரு போதும் நிறைவேறாது எனவும் கடற்றொழில் அமைச்சரினால் அழுத்தமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உட்பட்ட 25 அரச நிறுவனங்கள் தொடர்பிலான வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "என்னுடைய அரசியல் என்பது எமது மக்கள் சார்ந்த நலன்களை முன்வைத்ததே அன்றி சுயலாபத்தினை முன்வைத்ததல்ல. அந்த வகையில் எமது மக்களுக்கு நல்லெண்ணத்துடன் உதவ எந்தவொரு நாடும் முன்வருகையில் அதற்கே நான் முதலிடம் கோடுப்பேனேயன்றி சுயலாபம் கருதிய பூகோள அரசியலுக்கு அல்ல என்பதையே நான் வழமையாகக் கூறி வருவதுண்டு. இதனை திரிபுபடுத்திய சிலர் (அயலகத்தின்) பூகோள அரசியலுக்கு நான் எதிரானவன் என்ற ரீதியில் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

எமது நாட்டின் தேசிய பாதுகாப்பு, பிராந்திய அண்டைய நாடுகளின் பாதுகாப்பு என்ற வகையில் அவை தொடர்பில் மிக அதீதமான அக்கறை எனக்குண்டு. இவை பூகோள அமைப்பு சார்ந்தவை தொடர்பில் முக்கியமானவை.

இந்த பூகோள அமைப்பில் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் எனக்குக் கிடைத்திருக்கின்ற அமைச்சின் பணிகளை முன்னெடுப்பதிலும் நான் எப்போதும் அவதானமாகவே இருக்கின்றேன்.

அதற்காக, பூகோள அரசியல் சொல்வதையெல்லாம் கேட்கவோ, செய்யவோ வேண்டும் என்பது பொருளல்ல. அந்த அரசியலானது எமது மக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தாமல் வெறுமனே இருந்தாலும் நல்லது, அல்லது, பாதிப்புகளை ஏற்படுத்தாமல் உதவினாலும் நல்லது என்பதே எனது நிலைப்பாடாகும்.

நான் கடற்றொழில் அமைச்சராக வருவதற்கு முன்னரே எங்கள் கடல் வளம் எமது மக்களுக்கே சொந்தமென்று களத்தில் இறங்கி காரியம் ஆற்றியவன். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக மட்டும் இருந்து கொண்டே கடற்றொழிலாளர் பிரச்சினைகள் குறித்து கரிசனையோடு உழைத்த வரலாறுகளை எமது மக்கள் அறிவார்கள்.

தென்னிலங்கை அரசியல் சக்திகள் தாம் ஆளும் கட்சியாக வென்று மக்களுக்கு சேவையாற்றவே தேர்தலில் போட்டியிடுகிறார்கள். ஆனாலும் சக தமிழ தரப்பினர் பலரும் எதிர்ப்பரசியல் நடத்தி கொக்கரிப்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இத்தகைய சாபக்கேடுதான் தமிழ பேசும் மக்களின் பிரச்சினைகள் தீராப் பிரச்சினையாக நீடித்து வரவும் காரணமாக இருந்து வருகிறது.

எனது மக்கள் என்பதே எனது மூச்சு. அந்த வகையில் ஏழு எழுத்துக்களில் தான் எனது மூச்சு இருக்கின்றது. இது எனது மக்களுக்கானது. ஆங்கில மொழியிலே லக்கி செவன் என்பார்கள். அது எமது மக்களுக்கானது.

ஆனால், ஏனைய தமிழ்த் தேசியம் சப்புகின்ற சில அரசியல்வாதிகள் என்னைவிட எமது மக்களுக்கு அரைவாசி முன்னிலையிலேயே இருக்கின்றனர். அதாவது ஏழரைகளாக இருக்கின்றனர். அதனை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையிலேயே அவர்களது செயற்பாடுகளும் இருந்து வருகின்றன.

பொதுவாக அரசியல் என்பது மாறி, மாறியே அமைந்து வருகின்றது. அது எந்த நாடுகள் என்று பாகுபாடு பார்ப்பதில்லை. ஆனால், எனது அரசியல் என்பது எனது மக்கள் சார்ந்த நலன்கனை கருதியதாக மட்டுமே இன்னமும் தொடர்கிறது.

இயக்க அரசியல் கட்சிகள் சார்ந்த சில ஒட்டுண்ணிகளும், சுயலாப அரசியல் சார்ந்த சில ஒட்டுண்ணிகளும், ஊடகங்கள் சார்ந்த சில ஒட்டுண்ணிகளும் இல்லாதிருந்தால் பிரபாகரனின் மனோ நிலையில் சில மாற்றங்கள் வந்திருக்குமோ? எனவும் சில நேரங்களில் நான் சிந்திப்பதுண்டு.

இந்த ஒட்டுண்ணிகள்தான், அவர் ஓட்டகத்தில் வந்து அடிப்பார், தங்க ரதத்தில் வந்து அடிப்பார், யானை மீதேறி வந்து அடிப்பார், பூனை மீதேறி வந்து அடிப்பார் என்றெல்லாம் அந்த காலத்தில் அவரையும் உசுப்பேத்தி, ஒருவித அதீத மாயைக் கற்பனாவாத பிம்பத்தினை அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தன. இந்த பிம்பத்திலிருந்து இறங்கிவர இயலாத நிலையும் அவருக்கு இருந்திருக்கலாம்.

இத்தகைய அதே ஒட்டுண்ணிக் கூட்டத்தில் எஞ்சிய சிலதுகள்தான் இன்றும் புனைந்த, பொய்யான என்மீதான இத்தகைய கருத்துக்களை திணித்துக் கொண்டிருக்கின்றன" என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண வரலாற்றில் இளவயதில் நீதிபதியான தமிழ் பெண் — மேலும் இரு பெண்மணிகள் வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து தெரிவு



இலங்கை நீதித்துறை வரலாற்றில் மிக இளவயது தமிழ் பெண்மணி ஒருவர் நீதிபதியாகத் தேர்வாகியுள்ளார்.




வட மாகாணம் யாழ்.மாவட்ட வரலாற்றில் மிக இளவயது தமிழ் பெண் நீதிபதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி. மாதுரி நிரோசன் எதிர்வரும் முதலாம் திகதி பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார். இந்தத் தெரிவுப் பட்டியலில் மேலும் இரு பெண்மணிகள் முறையே வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து நீதிபதிகளாக தெரிவு செய்யப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் - சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் பழைய மாணவியான மாதுரி நிரோசன் தனது 31வது வயதில் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

தமிழ் நீதிபதிகளில் யாழ்ப்பாண.வரலாற்றில் ஓர் இளம் நீதிபதியாக மாதுரி பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார்.

இந்நிலையில் நாடளாவிய நீதியில் இடம்பெற்ற நீதிபதிகளுக்கான போட்டியில், மாதுரி அகில இலங்கை ரீதியில் இவர் 12ஆவது இடத்தை பிடித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவான இளம் தமிழ் நீதிபதி என்ற சிறப்பையும் இவர் பெற்றுள்ளார்.

இந்நிலையில் பலரும் அவருக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துவருகின்றனர்.

# மன்னாரில் மாவீரர் வாரத்தையொட்டி மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிப்பு



- மன்னார் நிருபர் (23-11-2023)


மாவீரர் வாரத்தை முன்னிட்டு ஈழபோராட்டத்தில் இன்னுயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூறும் வகையில் மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளித்து கௌரவப் படுத்தும் நிகழ்வு வியாழக்கிழமை (23) காலை 10.30 மணியளவில் மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு மதிப்பளிக்கும் விதமாக குறித்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் மாவீரரின் பெற்றோரினால் பொது சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது டன் மரணித்த மாவீரர்களின் நினைவாக ஒவ்வொரு பெற்றோருக்கும் தென்னங் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

அதே நேரம் குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட மாவீரர் பெற்றோர்களுக்கு உலர் உணவு பொதிகளும் ஏற்பாட்டு குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாவீரர் பெற்றோர்கள், முன்னால் போராளிகள், அருட்தந்தையர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.





கனடிய செய்திகள் Canadian News

# தமிழீழ தேசியக் கொடி நாளில் கனடாவின் பிரம்ப்ரன் நகரசபை முன்றலில் அதன் முதல்வர் பெற்றிக் பிறவுண் கொடியேற்றினார்



கடந்த 21-11-2023 அன்று, ஈழத் தமிழர்கள் 33வது வருடாந்த தமிழீழ தேசிய கொடி தினத்தை கொண்டாடும் நிலையில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய உறுப்பினர்கள் பிரம்ரன் நகர சபையின் முன்றலில் உத்தியோகபூர்வமான கொடியேற்றும் நிகழ்விற்காக கூடியிருந்தனர். அவர்களுடன் நகரத்தின் மேயர் பேட்ரிக் பிரவுண் மற்றும் கவுன்சிலர் ராட் பவர் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

1915 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் பிரித்தானியர்களிடம் வீழ்ந்ததன் 100வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிங்கள உயரடுக்கினரால் வாள் ஏந்திய சிங்கத்தை சித்தரிக்கும் இலங்கைக் கொடி வடிவமைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் தமிழர்களின் பங்கேற்போ பிரதிநிதித்துவமோ இருக்கவில்லை.

ஏறக்குறைய நான்கரை நூற்றாண்டு காலனித்துவ ஆட்சியில், தமிழர்களுக்கு அவர்களை பிரதிநிதித்துவப்படுத்த ஒரு கொடி இல்லை. 1989 இல் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஈழத் தமிழர்களுக்கான கொடியின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி அதனை ஆரம்பித்து வைத்தார். ஈழப்போராட்டத்தின் மத்தியில் எமது சொந்த மண்ணில் சம உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் பொதுமக்கள் போராடிய போது இந்த புதிய கொடி கொண்டு வரப்பட்டது. அத்துடன் இந்தக் கொடியானது ஈழத் தமிழர்களுக்கான அடையாளமாகவும் திகழ்கின்றது.


இது தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் வெளியிட்டுள்ள நன்றி தெரிவிக்கும் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"உலகெங்கிலும் உள்ள ஈழத் தமிழர்களின் பெருமை, ஒற்றுமை மற்றும் பிரதிபலிப்பு நாளாக தமிழீழத் தேசியக் கொடி தினம் உள்ளது. ஒரு சமூகமாக நாம் இனப்படுகொலையின் நீண்ட வரலாற்றை சகித்துக்கொண்டிருக்கிறோம், மேலும் இந்த பயங்கரமான நினைவாற்றலின் விளைவுகளால் தொடர்ந்து அவதிப்படுகிறோம். நாங்கள் தேசியக் கொடியை உயர்த்தும்போது, அமைதி, நீதி மற்றும் சுதந்திரத்திற்காக ஈழத் தமிழர்கள் ஆற்றிய தியாகங்களுக்கு வணக்கம் செலுத்துகிறோம்.

நாடு கடந்த தமிழீழு அரசாங்கம் எமது மற்றும் தமிழ் சமூகத்திற்கு பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் தொடர்ச்சியாக அளித்துவரும் ம ஆதரவிற்காக அவருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம். மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் ஈழத் தமிழர்களின் தீவிர ஆதரவாளராகவும், நமது மக்கள் அனுபவித்த இனப்படுகொலைக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்காகவும் பல ஆண்டுகளாகப் போராடி வருபவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நாம் நமது தேசியக் கொடியைக் கொண்டாடும் வேளையில் எங்களுடன் இணைந்து ஒற்றுமையுடன் நின்றதற்காக பிரம்ரன் நகர மேயர் பெற்ட்ரிக் பிரவுண் மற்றும் பிராம்ப்டன் நகர சபைக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்."

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

11 – 445Milner Ave., Toronto ON M1B 2K4
TP 416-751-TGTE, Fax 416-752-tgte; email: nimal.vinayagamoorthy@tgte.org

November 21, 2023

**"Tamil Eelam National Flag Day - Flag Raising at the Brampton City Hall"**

Today, as Eelam Tamils celebrate the 33rd Annual Tamil Eelam National Flag Day, the TGTE Canadian members had gathered at the Brampton City Council for an official flag raising ceremony. We were accompanied by His Worship Mayor Patrick Brown, and Councillor Rod Power.

The Sri Lankan flag, depicting a lion with a sword was designed by Sinhala elites in 1915 on the 100th anniversary of the fall of the Kandy Kingdom to the British. There was no participation or representation of Tamils during this time.

For nearly four and a half centuries of colonial rule, Tamils did not have a flag to represent them. In 1989, the Tamil National Leader Hon. Velupillai Prabakaran was the one to recognize the importance of a flag for Eelam Tamils and had initiated it on November 21st, 1990. In the midst of the Eelam struggle when civilians were fighting for equal rights and freedom on our own land, this new flag brought an identity for Eelam Tamils.

The Tamil Eelam National Flag Day is a day of pride, unity and reflection for Eelam Tamils around the globe. We as a community have endured a long history of genocide, and continue to suffer through the consequences of this gruesome memory. As we raise our national flag, we hold our heads high and salute the sacrifices Eelam Tamils have made in seek of peace, justice and freedom.

We would like to extend our utmost gratitude to His Worship Mayor Patrick Brown for his endless support he extends to the TGTE and the Tamil Community. Mayor Brown has been an ardent supporter of Eelam Tamils and our years of struggle to voice out against the genocide our population suffered.

Our sincere thanks to His Worship Mayor Patrick Brown and the Brampton City Council for standing in solidarity with us as we celebrate our national flag.

Thank you,

V. Nimalan

Nimal Vinayagamoorthy
Member of Transnational Government of Tamil Eelam
Canada.

The TGTE is a political formation to win fundamental civil, political and human rights including the right to self determination for the Tamil people in the North and East of the island of Sri Lanka, providing a political space to articulate and realize their aspirations, that's not available to them in the island. The TGTE upholds democratic values, non-violence and abides by the laws of the countries that its elected members and the Senate represent.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் பயிர்செய்கை நடவடிக்கை வட மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது



நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தில் தென்னம் பிள்ளைகளை நாட்டும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி - இயக்கச்சி பகுதியில் வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில், தென்னம் பிள்ளைகள் நடப்பட்டு செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய, ஒரு இலட்சம் தென்னம் பிள்ளைகளை நடும் நிகழ்வு இன்று முன்னெடுக்கப்பட்டது.

வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதிஸ்வரன், தென்னை பயிர்செய்கை சபையின் தலைவர் ஏ.வீ.கே. மாதவி ஹேரத், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.







இரண்டாவது தென்னை முக்கோண வலயம் கடந்த செப்டம்பர் மாதம் 02 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய 03 மாவட்டங்களுடன், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கு தென்னை முக்கோண வலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் 03 மாதங்களுக்குள் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் தென்னம் பிள்ளைகளை பயிர்செய்கை செய்யும் நோக்குடன் இந்த செயற்திட்டம் முன்னேடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் செய்கையாளர்களுக்கு இலவசமாக தென்னம் பிள்ளைகளை வழங்கும் இன்றைய நிகழ்வின் போது, வடக்கில் மீள்குடியேற்றத்தின் பின்னர் வழங்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் இன்று மக்களின் வாழ்வாதாரமாக மாறியுள்ளதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக கௌரவ ஆளுநர் குறிப்பிட்டார். அதேபோல இன்று ஆரம்பிக்கப்படும் இந்த திட்டத்தினூடாக வழங்கப்படும் தென்னம் பிள்ளைகள், வட மாகாணத்தில் நலிவுற்றிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எழுந்து நிற்கும் என ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டார். எவ்வாறாயினும் தென்னை பயிர் செய்கையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் நன்கறிந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, நட்புசார் விவசாயத்தை விஸ்தரிக்கும் நோக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய கையடக்க தொலைபேசி செயலி ஒன்றை அறிமுகபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கௌரவ ஆளுநர் கூறினார். வடக்கில் விவசாய முதலீடுகளை மேற்கொள்ள விரும்புவோருக்கான அனைத்து ஒத்துழைப்புகளும் வழங்கப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

தென்னை முக்கோண வலயத்தை வட மாகாணத்தில் ஆரம்பிக்க ஆலோசனை வழங்கிய ஜனாதிபதிக்கு இதன்போது வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நன்றி தெரிவித்தார்.

# 23 வருடங்களின் பின்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவி சாதனை!



இம்முறை நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவி ஜஸ்ரின் ஜனனி 160 புள்ளிகள பெற்று சித்தியடைந்துள்ளார்.

2000 ஆண்டிற்கு பின்னர் அதாவது 23 வருடங்களின் பின்னர் இம்முறைதான் மாணவியொருவர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

பாடசாலைக்கு தனது ஒழுங்கான வரவு, அதிபர் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் விடா முயற்சியே தனது வெற்றிக்கு காரணமென குறித்த மாணவி தெரிவித்துள்ளார். அத்துடன் ஏனைய மாணவர்களும் தினமும் பாடசாலைக்கு சமூகமளிப்பதோடு பெற்றோர்களும் அதில் கரிசனையெடுக்குமாறும் குறித்த மாணவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பரீட்சைக்கு தோற்றிய நான்கு மாணவர்களில் மாணவன் ஒருவன் 144 புள்ளிகளை பெற்றதோடு ஏனைய இருவரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

# வடமராட்சி கிழக்கு வத்திராயனிலிருந்து தொழிலிற்காக தென்பகுதிக்கு சென்றவர் இதுவரை குடும்பத்துடன் தொடர்பில் இல்லை!



தொழிலிற்க்காக தென்பகுதிக்கு சென்றவர் இதுவரை தொடர்பில் இல்லை என அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

கடந்த 2023-10-28 அன்று ஹம்பகா மாவட்டத்தில் தங்கி நின்று வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு சென்ற வத்திராயன் வடக்கை சேர்ந்த கணேசலிங்கம் தினேஸ் எனும் 38 வயதுடைய நபரே காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது வடமராட்சி கிழக்கு வத்திராயனிலிருந்து கடந்த 28ம் திகதி கம்பகாவிற்கு சென்று தான் அங்கு சென்று சேர்ந்துள்ளேன் என்றும் அங்கு தொடர்ந்தும் வேலை செய்து வருவதாகவும் கடந்த 30-10-2023 வரை தனது குடும்பத்தாருடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

அன்றிலிருந்து இன்றுவரை அவர் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவரது மனைவி தனது கணவரை கண்டுபிடித்து தர ஆவன செய்துதவுமாறு கேட்டுள்ளார்.

POLICE OIC Maruthankerny +94 77 363 3578

# யாழ்ப்பாணம் கோண்டாவில் ஸ்ரீ ஐயப்பன் சபரிமலை தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஐயப்பன் விரதம் ஆரம்பம்



ஐயப்பன் விரதத்தின் 60 நாள் மண்டலகபிசேக பெரு விழாவில், முதலாவது நாள் விரதத்தின் மாலையிடும் உற்சவம் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் கோண்டாவில் ஸ்ரீ ஐயப்பன் சபரிமலை தேவஸ்தானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இவ் உற்சவ கிரியைகளை ஆலய பிரதம குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடாத்திவைத்ததுடன் கன்னிக் குருசாமிமார்கள், ஏனைய குருசாமிமார்களுக்கு திருமாலை அணிவித்து





விரதமானது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பலபாகங்களில் இருந்தும் வருகைதந்த குருசாமிமார்கள் தமது விரதத்தினை ஆரம்பித்தனர்.

# விடுதலைப் போராட்ட கால திரைப்படங்கள் மற்றும் நாடகங்களில் நடித்த பிரபல நடிகர் ஏரம்பு உயிரிழப்பு!





விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களது போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் முகமாக நாடகங்கள் மற்றும் திரைப்படங்கள் போன்றவற்றில் தனது கலைப் பங்களிப்பினை வழங்கிய மாணிக்கம் ஏரம்பு அவர்கள் 18-11-2023 அன்றையதினம் இறையடி சேர்ந்தார்.. இவர் சிறுவயது தொடக்கம் நடிப்பில் ஆர்வம் கொண்டு பல மேடை கதாபாத்திரங்களில் நடித்து வந்தார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களது போராட்டமானது வலுப்பெறுவதற்கு தன்னாலான கலைப் பங்களிப்பினை வழங்கி வந்தார். போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூத்துக்கள் உள்ளிட்ட நாடகங்களில் தனது பங்களிப்பை வழங்கி வந்ததுடன் அதுசார்ந்த கலைஞர்களுக்கு பல்வேறு வழிகாட்டல்களையும் செய்து வந்தார்.

அத்துடன் வெளிநாடுகளுக்கு சென்றும் தனது நாடகங்களை வழங்கி இரசிகர்களை கவர்ந்து வந்த ஒருவராக திகழ்ந்தார்.

இந்நிலையில் வயது மூப்பு காரணமாக தனது 91வது வயதில் அவர் இறையடி சேர்ந்தார்.

# எழுவைதீவு வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒழுங்கின்மை — சுகாதார சேவையை பெறுவதில் மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திற்கு உற்பட்ட எழுவைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார் அவர் ஒழுங்காக வருகை தருவதில்லை என பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது, சுமார் 700 பேர் வசிக்கும் அடிப்படை வசதிகள் அற்ற குடும்பங்கள் வாழ்ந்து வரும் தீவுப் பிரதேசமாக எழுவைதீவு விளங்குகிறது.

குறித்த பிரதேசத்தில் வெளிநாட்டில் வசிக்கும் கொடையாளி ஒருவரால் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்டது.

திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் வைத்தியர் ஒருவர் தமது பிரதேசத்துக்கு வருவதாகவும் ஏனைய நாட்களில் அவரை காண முடிவதில்லை என்பது பிரதேச மக்களின் குற்றம்சாட்டுகின்றனர்.

இரவு நேரங்களில் நோய்வாய்ப்படும் மக்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாயின் கடல் கடந்து ஊர் காவல் துறை அல்லது யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் இக்கட்டான சூழ்நிலையை அனுபவித்து வருகின்றனர்.

எழுவைதீவு வைத்தியசாலையில் வைத்தியர் தங்குவதற்கான விடுதி அமைக்கப்பட்டு கொடுத்தும் வைத்தியர் இரவு நேரங்களில் தாங்குவதில்லை.

அதுமட்டுமல்லாது குறித்த வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாத நாட்களில் முதலுதவி செய்யக்கூடி தாதியர்கள் பயிற்சி அளிக்கப்படவில்லை என்பதும் அப்பகுதி மக்களின் குற்றச்சாட்டியுள்ளனர்.

ஆகவே எழுவதீவு மக்களின் சுகாதாரத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு நிரந்தர வைத்தியர் ஒருவரை தமக்கு நியமித்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.



# புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பிரிவைச் சேர்ந்த மாணவி பெருமை சேர்த்துள்ர்

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பிரிவைச் சேர்ந்த ஜெராட் அமல்ராஜ் வனிஷ்கா என்ற மாணவி 2023ம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 196 புள்ளிகளை பெற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக புள்ளியினை பெற்று வரலாற்றில் முதற் தடவையாக யாழ்ப்பாணம் இந்து மகளீர் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளதாக யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரி இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர் சிவந்தினி வாகீசன் தெரிவித்தார்.

2023ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு எமது கல்லூரியில் இருந்து 110 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 35 மாணவர்கள் பரீட்சையில் சித்தி அடைந்து கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். அதிலும் வரலாற்றில் முதன்முதலாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக புள்ளிகளை பெற்று எங்கள் பாடசாலை மாணவி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.



பரிட்சையில் அதிக புள்ளியினை பெற்ற மாணவி கருத்து தெரிவிக்கையில், தன்னை போன்று எதிர்காலத்தில் மாணவர்கள் அதிக புள்ளிகளை பெற்று பாடசாலைக்கு பெருமையை சேர்க்க வேண்டும் எனவும் எதிர்காலத்தில் தான் விஞ்ஞானியாக வந்து இலங்கைக்கு பெருமை சேர்ப்பேன் எனவும் தெரிவித்தார்.



# யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மர்கழி இசைவிழா!

மார்கழி இசை விழாவும் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திக்கண்காட்சியும் டிசம்பர் மாதம் 27, 28, 29ம் திகதிகளில் யாழ்ப்பாண கலாச்சார மத்தியநிலையத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாணம் வணிகர் கழக தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் ஆர். ஜெயசேகரன் மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய கலை கலாச்சார பண்பாடுகளை பாதுகாக்கும் நோக்கத்துடனும் தமிழர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் மார்கழி இசை விழாவும் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்தி கண்காட்சியும் வரும் டிசம்பர் மாதம் 27, 28, 29ஆம் திகதி களில் யாழ்ப்பாண கலாச்சார மத்தியநிலைய உட்புற மண்டபத்திலே இசைவிழாவும் வெளிப்புற திடலிலே சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது.

வெளிநாட்டு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை ஏற்றுமதி அதிகார சபை மற்றும் ஏற்றுமதி துறை சார்ந்த பல அனுபவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்கள் எல்லோரையும் அழைத்திருக்கின்றோம்.

ஒரு முக்கிய விடயமாக இந்தியாவில் இருந்து சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திகளுக்கு தேவையான இயந்திரங்களை புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்களை காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வானது மார்கழி மாத இறுதியில் இடம்பெறவுள்ளதன் காரணமாக மார்கழி இசை விழா மற்றும் சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திகளுக்கான கண்காட்சி விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கான சந்தைவாய்ப்பு அதனுடன் கூடிய உற்பத்தியாளர்களுக்கு தேவையான இயந்திர கண்காட்சிகளும் இங்கே காட்சிப்படுத்தப்படவுள்ளன.

குறித்த நிகழ்வுகளில் பொதுமக்கள் பங்கு பற்றி பயன்பெற முடியும் குறித்த நிகழ்வுகளில் யாழ் மாவட்டம் மாத்திரமல்லாது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் – நெடுந்தீவில் தூக்கில் தொங்குவது போல பாசாங்கு செய்த நபர் மரக்கிளை முறிந்து விழுந்தது உயிரிழப்பு!

யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் தூக்கில் தொங்குவது போன்று மனைவிக்குப் பாசாங்கு செய்தவர் மரக்கிளை முறிந்தமையால் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய நபரே 16-11-2023 இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவுப் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மனைவியுடன் பேசியவாறு தான் தற்கொலை செய்வேன் என வேப்பமரத்தில் தூக்கிட்டு பாசாங்கு செய்துள்ளார்.

இதன் போது அந்தக் குடும்பஸ்தர் தூக்கை மாட்டியவாறு மரத்தில் இருந்து கீழே இறங்க முற்பட்ட வேளை வேப்ப மரக் கிளை முறிந்துள்ளதுள்ள நிலையில் தூக்கில் அகப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மேலும் அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# மாவீரர் நினைவு நினத்தை அனுஷ்டிக்க தடையுத்தரவு கோரிய மானிப்பாய் பொலிஸார்



மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இருந்து மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் மூன்று உறுப்பினர்களுக்கு நீதிமன்றில் தோன்றுமாறு அழைப்பு கட்டளை ஒன்று விடுக்கப்பட்டிருந்தது.

மானிப்பாய் பொலிஸாரினால் நீதிமன்றில் ஒரு விண்ணப்பம் செய்யப்பட்டது. அதாவது இந்த நான்கு நபர்களும் மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மற்றும் இறந்த உறுப்பினர்களுடைய நினைவுகூரல் நிகழ்வுகளை அவர்கள் செய்யப் போகின்றார்கள் என்றும், அதனாலே பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் என்றும், மானிப்பாய் பிரதேச சபையின் பூங்கா ஒன்றில் இந்த நிகழ்வுகளை செய்யப் போகின்றார்கள் என்றும், அதற்கு தடையுத்தரவை வழங்குமாறும் ஒரு கட்டளையை கோரி இந்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உடனடியாக கட்டளை எதையும் வழங்காத நீதிமன்று மன்றிலே தோன்றுமாறு அழைப்பு விடுத்திருந்தது. அதனடிப்படையில் முன்னாள் தவிசாளர் தவிர்ந்த ஏனைய மூன்று உறுப்பினர்களும் மன்றில் சமுகமளித்தனர் இருந்தனர். அவர்கள் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உட்பட பட சட்டத்தரணிகள் ஆஜராகி இருந்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரிக்கின்ற விதமாக சட்டத்தரணிகள் சமர்ப்பணங்களை செய்திருந்தனர். அவர்கள் எந்தவிதமான பயங்கரவாத செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை என மன்றுக்கு தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த உறவுகளை அஞ்சலிப்பது எந்தவித தவறும் இல்லை என மன்றுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அதேநேரம் பொலிஸாரின் செயற்பாடானது எதிர்வரும் கார்த்திகை விளக்கீட்டினை கூட பயங்கரவாதமாக சித்தரிக்கின்ற ஒரு தன்மையை கொண்டது. பொலிஸாரின் விண்ணப்பத்திற்கு ஏற்ப கட்டளை வழங்கினால் கார்த்திகை விளக்கீட்டினை அனுஷ்டிப்பவர்கள் கூட தண்டிக்கப்படும் வாய்ப்பு உள்ளது என மன்றிற்கு எடுத்துக் கூறப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பம் குறித்து கட்டளை ஒன்றினை ஆக்குவதற்கு நீதிமன்றம் தி-கதி ஒன்றினை நியமித்திருக்கிறது. எதிர்வரும் 20.11.2023 அன்று இந்த வழக்கு கட்டளைக்காக நியமிக்கப்பட்டுள்ளது.



# சுய முயற்சியால் நடனத்தை கற்று தேசிய ரீதியில் சாதனை படைத்த மாற்றுத்திறனாளி!






கோண்டாவில் சிவபூமி மாற்றுத்திறனாளிகள் பாடசாலையில் கல்வி பயிலும் மாற்றுவலுவுடைய மாணவனான அலெக்சாண்டர் நிதுசன்ராஜ் தேசிய ரீதியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நடனத்தில் பங்குபற்றி முதலாவது இடத்தினை பெற்றுள்ளார்.

இவர் நடிகர் விஜயின் தீவிர இரசிகர். தொலைக்காட்சியில் நடனங்களை பார்த்து சுயமாக அதனை கற்றுக் கொண்டு, மேலதிக ஆசிரியர்களின் வழிகாட்டலில் நடனத்தை கற்று இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

இவர் 6வயதில் குறித்த பாடசாலையில் சேர்க்கப்பட்டார். தற்போது இவருக்கு வயது 21. இவர் குறித்த பாடசாலைக்கு வரும்போது வாய் பேசவும் முடியாத நிலையில் காணப்பட்டார். அதன்பின்னர் பாடசாலையில் வழங்கப்பட்ட பயிற்சிகள் மூலம் பேச்சாற்றலை வளர்த்துக்கொண்டார்.

இந்த சிவபூமி மாற்றுத்திறனாளிகள் பாடசாலையில் சுமார் 120 மாணவர்கள் தற்போது கல்வி கற்று வருகின்றனர். இவர்களது வீட்டுக்கு சென்று பாடசாலைக்கு அழைத்துச் செல்வதற்கான பேருந்து வசதிகள் என்பன பாடசாலையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இங்கு கற்கும் மாணவர்களுக்கு தொழில் ரீதியான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது. கமுகு மடலில் உணவுத் தட்டு உற்பத்தி, நெய் சுட்டி உற்பத்தி, அலங்காரப் பொருட்கள் உற்பத்தி, கற்பூரம் உற்பத்தி உள்ளிட்ட பல வகையான தொழிற் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. மாற்றுவலுவுடைய அவர்களாலும் ஏனையோரை போல உழைத்து வருமானம் ஈட்ட முடியும் என்ற எண்ணத்தினை உருவாக்கும் நோக்கில் இந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக புகைப்பட கண்காட்சி



தென் இலங்கையில் உள்ள புகைப்பட நிறுவனம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட புகைப்பட விற்பனை நிறுவனத்தின் எற்பாட்டில் முதலாவது தடவையாக ஒழுங்கமைத்த யாழ்ப்பாண புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

நவீன யுத்திக்கு ஏற்ப புகைப்படக்கருவி சாதனங்கள், புகைப்பட பிரதியினை பிரதிபலிக்ககூடிய ஆல்பம் மூலம் பிரிண்ட் செய்யும் நவீன கருவிகள், இணைய சாதனம், ஆல்பம் கட்டும் முறை தொடர்பாக இக்கண்காட்சியில் நிபுணர்களால் தெளிவூட்டப்பட்டது.





இக்கண்காட்சியினை ஆரம்பித்து வைப்பதற்காக தென் இலங்கை பிரபல புகைப்பட விற்பனை நிறுவனத்தின் தலைவர் ஆர்.பி. ஜெயந்த குணவர்த்த கலந்துகொண்டு இதனை ஆரம்பித்து வைத்தார்.

இதில் கண்காட்சிக் குழுவினர்கள், புகைப்படக் கலைஞர்கள் பங்குபற்றிக் கொண்டனர்.

இக்கண்கண்காட்சி நாளை இனிதே நிறைவடையும். இக்கண்காட்சியினை கண்டுகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர்கள் கேட்டுக்கொண்டனர்.

# கனடா செல்லும் மோகத்தால் யாழ்ப்பாணத்தில் கோடிக்கணக்காக பணம் மோசடி — பொலிஸாரின் அறிவிப்பு

கனடா உட்பட பல வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் வெகுவாக அதிகரித்துள்ளன.

இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் மட்டும் இவ்வாறான பண மோசடி தொடர்பான 7 முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாடுகளின் அடிப்படையில், கனடாவிற்கு அனுப்புவதாகத் தெரிவித்து இரண்டரைக் கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்களே மோசடியில் ஈடுபடுகின்றனர். சமூக வலைத்தளங்கள் மற்றும் வட்ஸ் அப் குழுக்களில் காணப்படும் விளம்பரங்களை நம்பியே பெரும்பாலானவர்கள் மோசடியாளர்களிடம் சிக்கியுள்ளனர்.

மோசடியாளர்கள் போலியான விசா ஆவணங்களைக் காட்டி நம்ப வைத்து ஏமாற்றியுள்ளனர். வெளிநாடுகளில் உள்ளவர்கள் இங்குள்ள உறவினர்களை அழைக்க முடியும் என்ற நடைமுறையைக் காட்டியும் பல மோசடிகள் நடந்துள்ளன.

முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் பல்வேறு காரணங்களைத் தெரிவித்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் பணம் கோரியுள்ளனர். இதற்கான பணம் பல தடவைகள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.



ஒரு கட்டத்தில் முகவர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்பவர்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த மாதம் மட்டும் இவ்வாறான 10 முறைப்பாடுகள் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவாகியுள்ளன. சுமார் 6 கோடி ரூபா வரையில் மோசடி செய்யப்பட்டுள்ளமை இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முறைப்பாட்டாளர்களும் பல லட்சங்களை மோசடியாளர்களிடம் இழந்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களிலும், குழுக்களிலும் பகிரப்படும் விளம்பரங்கள் தொடர்பாகப் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும், பயண முகவர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொள்பவர்கள் சட்டரீதியாகப் பதிவு செய்யப்பட்டவர்களா என்பதைப் பொதுமக்கள் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம் என்றும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகர் ஜெகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

# பொலிசாரின் அராஜகம் கட்டுக்கடங்காது தொடர்கின்றது — சுகாஷ் சீற்றம்

வட்டுக்கோட்டைப் பொலிசாரின் சட்ட விரோத சித்திரவதைகளால் அப்பாவி இளைஞன் கொல்லப்பட்டமை மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இன்றையதினம் அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்தக் கொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றமிழைத்த பொலீசார் உடனடியாகக் கைதுசெய்யப்படுவதோடு விசாரணைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று கோருகின்றோம் - என குறிப்பிட்டுள்ளார்.




# நடிகை குஷ்பு யாழ்ப்பாணத்திற்கு வந்தால் துடைப்பக் கட்டையால் ஆசீர்வாதம் வழங்கப்படும் — எம்.வி.சுப்மிரமணியம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

**பு. கஜிந்தன்**

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் எனக் கூறிய நடிகை குஷ்பு அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தால் அவருக்கு துடைப்பக் கட்டையால் ஆசிர்வாதம் வழங்கப்படும் அத்துடன் அதைவிட கழிவு பொருட்களாலும் அவருக்கு ஆசீர்வாதம் வழங்கப்படும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளரும் வடக்கு மாகாண கடல் தொழிலாளர் இணையத்தின் தலைவருமான எம்.வி. சுப்ரமணியம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடிகை குஷ்பு அவர்கள் விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள் என தெரிவித்திருக்கின்றார். இது ஒரு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அவரது இந்த கருத்தானது எம்மவர்கள் மத்தியில் தாக்கத்தினையும் மிகுந்த ஒரு ஏமாற்றத்தினையும் தந்துள்ளது.

கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாத இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அவர்கள் இராணுவ உதவி கேட்டு இந்தியாவிற்கு சென்றிருந்தார். அந்த நேரம் இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்த பிரதமர் ராகுல் காந்தி அவர்கள், ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் தங்களை விட்டு வேறு நாடு அதாவது குறிப்பாக சீனாவிற்கு சென்று விடக்கூடாது என்ற வகையில், எங்களது நலனையும் கருத்தில் கொள்ளாது சிங்கள மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர் கேட்ட ரகசிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு ஒப்புக்கொண்டார்.

அந்த வகையிலே அவர் இலங்கைக்கு வந்து விமான நிலையத்தில் இறங்கும் பொழுது சாதாரண சிங்கள சிப்பாய் ஒருவர் அவரது பிடரியில் அடித்து அவரை அவமானப்படுத்தி கொலை செய்வதற்கு முயற்சி பண்ணினார் அது ஒரு அவமானமாக முடிந்தது. அதையும் தாங்கிக் கொண்டு மறைமுகமாக சென்று ஒரு இரகசிய ஒப்பந்தத்திலே கைச்சாத்திட்டு விட்டு சென்றிருக்கின்றார்.

நேரிலே வந்து செய்ய முடியாத இந்திய பிரதமர் அவர்கள் மறைமுகமாக அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்களுக்கு உதவி செய்வதாக காட்டி அங்கிருந்து எங்களுக்கு உணவுப் பொதிகளை போடுவதாக பாசாங்கு செய்து, எங்களுக்கு அமைதியை ஏற்படுத்தப் போவதாக ஒரு அமைதிப்படையை உருவாக்கி எங்களுடைய நாட்டுக்குள்ளே அனுப்பி வைத்து, எங்களது தேசியத் தலைவர் அதிமேதகு வேலுலப்பிள்ளை பிரபாகரன் அவர்களை டில்லிக்கு அழைத்து அங்கே அவரை அடைத்து வைத்து வற்புறுத்தி அந்த ஒப்பந்தத்திலே கையெழுத்து வாங்கினர்.

எங்களுடைய நாட்டுக்குள் வந்து விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களைந்து விட்டு அவர்களை நிராயுதபாணிகள் ஆக்கி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு ரகசியமாக கொடுத்த ஒப்பந்தத்தின் நடவடிக்கையை மேற்கொண்டார். அந்த ஒப்பந்தமானது விடுதலை புலிகளை அழித்து தருவது, தமிழ் மக்களை ஒடுக்கி அல்லது பயமுறுத்து தருவதுதான் அந்த ஒப்பந்தத்தின் சாராம்சம்.

இவ்வாறு செய்து இங்குள்ள நூற்றுக்கணக்கான யுவதிகளை கற்பழித்து, இளைஞர்களையும் கொன்று குவித்து, எங்களுடைய சொத்துக்களுக்கு நாசம் விளைவித்து, எங்களுடைய போராட்டத்தையும் நலிவடைய செய்தவர்தான் இந்த ராஜீவ் காந்தி அவர்கள்.

அப்படிப்பட்ட ராஜீவ் காந்தியை தலைவராக கொள்கின்ற இந்திய நாட்டின் நடிகை குஷ்பு அவர்கள் எங்களுடைய அதிமேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனால் உருவாக்கப்பட்டு நாட்டுக்காகவும், தமிழ் இன மக்களுக்காகவும், விடுதலைக்காகவும் போராடிய புனிதமான போராளிகளை பயங்கரவாதிகள் என வர்ணிப்பது மிகவும் வேதனையான விடயம். இந்த விடயத்தை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இப்பொழுது சீனா இலங்கையில் தென்புலத்தில் இருந்து வடபுலத்தை நோக்கி தனது நகர்வுகளை மிக வேகமாக நகர்த்தி கொண்டிருக்கின்ற காரணத்தினால் இலங்கையினுடைய இனவெறி, மதவெறபிடித்த சிங்கள மக்களை மகிழ்விப்பதற்காகவும், சிங்கள ஏகாதிபத்தியவாதிகளின் சொல்லுக்கு மதிப்பளிப்பதற்காகவும், அவர்களுக்கு இந்த செயலை செய்து விட்டால் சீனாவினுடைய வருகையை குறைக்கலாம் என்ற நோக்கத்திற்காகவும், யாழ்ப்பாணம் வரவாள்ள குஷ்பு அவர்கள் இப்படி விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக சித்தரித்து கருத்து தெரிவித்துள்ளார்.

சிங்களப் பேரினவாதிகளை மகிழ்விப்பதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு குறிப்பாக பாஜக பிரமுகர்கள் வந்து போகின்றார்கள். அவர்கள் வந்து போகும் இந்த நோக்கமே இலங்கையை ஒட்டுமொத்தமாக தங்களுக்கு ஆதரவுடைய நாடாக வைத்திருப்பதற்கான முயற்சியாக இருக்கின்றது. அவர்களுக்குத் தெரியும் தெற்கு முழுவதும் சீனாவின் வசமாக போய்விட்டது. வடக்கில் தான் இப்பொழுது கொஞ்சம் இருக்கின்றது. அதையாவது தக்க வைத்துக் கொள்வதற்காகத்தான் இந்தியா முயற்சிக்கின்றது.

இந்த முயற்சியை முன்னெடுக்கின்ற இந்தியாவின் பிரமுகராக வருகின்ற குஷ்பு அவர்கள் வேண்டுமானால் தெற்குக்கு போய் ஆதரவையும் இலங்கையினுடைய அரவணைப்பையும் கோரலாமே தவிர, புனித வேள்வி நடந்த பூமியிலே அதுவும் யாழ்ப்பாண மண்ணிலே கால் வைக்கக் கூடாது. அப்படி கால் வைத்தால் கண்டிப்பாக அந்த மண் மாசடையும்.



எனவே இலங்கைக்கான விஜயத்தை தெற்கு விஜயமாக மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் இந்தியாவிலிருந்து குஷ்பு இலங்கைக்கு வருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லாமல் அதையும் தாண்டி அவர் இங்கே வருவாராக இருந்தால், குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு வருவாராக இருந்தால் இங்கே உள்ள அன்னையர்கள் கண்டிப்பாக குஷ்பூ அவர்களை எதிர்ப்பார்கள். துடைப்பக் கட்டையால் அவருக்கு ஆசிர்வாதம் செய்வார்கள். அதை விட கழிவு பொருட்களையும் அதிலே கலந்து ஆசீர்வாதம் செய்து திருப்பி அனுப்புவார்கள் என்பது உறுதி.

எனவே குஷ்பு அவர்கள் பகிரங்கமாக தமிழினத்தின் முன் மண்டியிட்டு தான் கூறிய "விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்ற கருத்தை மீளப்பெற வேண்டும். அதற்கு பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையேல் நாங்கள் அவருடைய வாழ்க்கையை அல்லது வரலாற்றின் சில புள்ளிகளை தோலுரித்துக் காட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே மற்றவர்களை கொச்சைப்படுத்தும் பொழுது தாங்கள் சுத்தமானவர்களாக இருக்க வேண்டும். எனவே அந்த பாதிப்பையும் அவர்கள் ஏற்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே இந்த யாழ்ப்பாணம் வருகின்ற வருகையை இரத்து செய்ய வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கட்சிகளை ஒட்டவைக்க மீண்டும் ஒரு முயற்சி?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஒரு குடிமக்கள் சமூகம் ஒரு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழ் கட்சிகள் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்ற தலைப்பில், சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் டான் டிவி குழுமத்தின் பின்னணியோடு செயல்படும் அச்சிவில் சமூகத்துக்கு பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தலைவராக இருக்கிறார். ஏற்கனவே 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரி ஒரு விண்ணப்பத்தை அக்குடிமக்கள் சமூகம், யாழ். இந்தியத் துணைத் தூதரகத்திடம் கொடுத்திருந்ததை இங்கு நினைவுபடுத்த வேண்டும்.

தமிழ் அரசியல் அரங்கில் உள்ள பெரும்பாலான கட்சிகள் அந்த சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தன. கட்சித் தலைவர்கள், இரண்டாம் மூன்றாம் நிலை தலைவர்கள், அனைவரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். இவற்றுடன் சமய தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அது அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமான கூட்டம்.

அன்றைக்கு அந்த மண்டபம் குறிப்பிடத்தக்களவு நிறைந்து. ஆனால் சமயத் தலைவர்கள் வந்திருக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏழு பேர் வந்திருந்தார்கள். கட்சித் தலைவர்களில் எல்லாரும் வந்திருக்கவில்லை. குறிப்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் ஒருவரும் வந்திருக்கவில்லை. விக்னேஸ்வரனின் கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கவில்லை. மணிவண்ணனை போன்றவர்களும்கூட வந்திருக்கவில்லை. குத்துவிளக்குக் கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் ஸ்ரீகாந்தா அணியும் வரவில்லை. மேலும் தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், ஈ.பி.ஆர்.எல்.எ'.ப்பின் சுகு ஆகியோரும் அங்கே வந்திருந்தார்கள்.

நிகழ்ச்சிக்கு பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தலைமை தாங்கினார். அரசியல் விமர்சகர்களான ஜதீந்திரா, நிலாந்தன், பேராசிரியர் கணேசலிங்கன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள் என்று அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பேராசிரியர் கணேசலிங்கன் மிகவும் பிந்தியே, அதாவது கூட்டம் முடிந்த பின்னர்தான் அங்கு வந்தார். அவருக்குப் பதிலாக மூத்த ஊடகவியலாளர் தனபாலசிங்கம் உரை நிகழ்த்தினார். அங்கு கூடியிருந்த கட்சித் தலைவர்களுக்கோ நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அதை ஒழுங்குபடுத்திய சிவில் சமூகம் தொடர்பாக ஏற்கனவே இருந்த முற்கற்பிதங்கள் காரணமாக சில ஊடகவியலாளர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் சமூக வலைத்தளங்களில் அச்சந்திப்பைக் குறித்து ஊகங்களை எழுதத் தொடங்கினார்கள்.

அச்சிவில் சமூகம் ஏற்கனவே 13ஐ வலியுறுத்தி இந்தியாவிடம் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருந்த காரணத்தால், அந்தச் சந்திப்பும் 13வது திருத்தத்தை வலியுறுத்தும் நோக்கிலானது என்ற ஊகம் முதலாவது.

இரண்டாவது, அது இந்தியாவுக்கு வசதியான ஒரு கூட்டை உருவாக்கும் நோக்கத்தை கொண்ட சந்திப்பு என்ற ஊகம்.

மூன்றாவது, ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அவ்வாறு கட்சிகளை டான் டிவி ஒருங்கிணைத்தது என்ற ஒரு ஊகம்.

இந்த ஊகங்களில் பெரும்பாலானவற்றை நிரூபிக்கும் விதத்தில் உரைகள் அமையவில்லை. உரை நிகழ்த்திய இரண்டு அரசியல் விமர்சகர்களும்13 வது திருத்தத்தைத் தொடவே இல்லை. இனப்பிரச்சனைக்கான தீர்வைக் குறித்தும் ஒன்றும் கதைக்கவில்லை. கட்சிகளை நோக்கி நேரடியாக குற்றச்சாட்டுகளை முன்வைக்கவும் இல்லை. ஐக்கியத்தின் தேவை குறித்தும், எப்படிப்பட்ட ஐக்கியம் அவசியம் என்பது குறித்தும், ஒற்றுமைப்பட்டபின் எவ்வாறான கட்டமைப்புகள் தேவை என்பதைக் குறித்தும்தான் அங்கே உரையாடப்பட்டது. தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்தும் யாரும் அழுத்திப் பேசவில்லை. அதாவது கட்சிகளை ஒற்றுமைப்படுத்துவதே உரைகளின் பிரதான நோக்கமாயிருந்தது.

கடந்த 14 ஆண்டுகளில் தமிழ் ஐக்கியம் எனப்படுவது ஒரு கற்பனையாக மாறியிருக்கும் துர்ப்பாக்கியமான ஒரு சூழலில், அந்தச் சந்திப்பு இடம் பெற்றது.தமிழ்க் கட்சிகளை கொள்கைகளின் பெயராலும் ஐக்கியப்படுத்த முடியவில்லை. விவகாரங்களை மையப்படுத்தியும் ஐக்கியப்படுத்த முடியவில்லை. கடந்த 14 ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட எல்லா ஐக்கியப்படுத்தும் முயற்சிகளின் போதும் ஏற்பட்ட தற்காலிக ஐக்கியங்கள் பின்னர் சிதைந்து போயின.

கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியை முதலில் முன்னெடுத்தவர், முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் அடிகளார்தான். கூட்டமைப்பிலிருந்து கஜன் அணி வெளியேறியிருந்த ஒரு பின்னணியில், 2013 ஆம் ஆண்டு மன்னாரில் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. சந்திப்பை ஒழுங்கு படுத்தியது தமிழ் சிவில் சமூக அமையம். ஆயர் அந்த சிவில் சமூகத்தின் ஆயுட்காலத் தலைவராக இருந்தார். சந்திப்பின் முடிவில் சம்பந்தர் ஆயரை பார்த்துச் சொன்னார் "பிஷப் நீங்கள் சொல்லுங்கோ. ஆனால் கடைசியா முடிவெடுக்கிறது நாங்கள்தான்" என்று. ஒரு மறை மாவட்ட ஆயரை நோக்கி, அதிலும் குறிப்பாக 2009க்குப்பின் மிகத் துணிச்சலாக கதைத்த ஒரு மதத் தலைவரை நோக்கி, ஒரு குடிமக்கள் சமூகத்தின் தலைவரை நோக்கி, ஓர் அரசியல் கட்சித் தலைவர் சொன்ன பதில் அது.

அதன் பின் மீண்டும் பல ஐக்கியப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இம்முயற்சிகளில் பெரும்பாலானவை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளரான சிவகரனால் முன்னெடுக்கப்பட்டன. அவர் முன்பு தமிழரசுக் கட்சி இளைஞர் அணித் தலைவராக இருந்து பின்னர் வெளியேற்றப்பட்டவர். கடந்த 14 ஆண்டுகளில் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளில் அதிகம் ஈடுபட்டவர் அவர்தான். கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளுக்கும் மன்னார் மாவட்டத்திற்கும் என்னதான் ஒற்றுமையோ தெரியவில்லை.

இடையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு முயற்சியை முன்னெடுத்தார்கள். அது 13 அம்ச கோரிக்கைகளில் வந்து முடிந்தது. அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் முதலில் இணைந்தது. அம் முயற்சி வெற்றிபெற்ற பொழுது ஒரு கட்சித் தலைவர் பின்வருமாறு சொன்னார் "2009 இக்குமுன் படையணிகளை வைத்திருந்த ஒரு இயக்கம் ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளை செய்தது. ஆனால் இப்பொழுது அவ்வாறு ஓர் ஆயுதங்கூட இல்லாத மாணவர்களாகிய நீங்கள் இப்படி ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்" என்று. அவர் அப்படிச் சொன்னபோது அங்கு அமர்ந்திருந்த கட்சித்தலைவர்கள் அனைவரும் கைதட்டி வரவேற்றார்கள். ஆனால் அந்த 13 அம்ச ஆவணமும் பின்னர் தோற்றுப் போய்விட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிலிருந்து வெளியேறியது.

இப்பொழுது, குறிப்பாக கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கட்சிகளை ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட எந்த ஒரு சிவில் அமைப்பும் முன் வருவதில்லை. சிவகரனும் சோர்ந்து போய்விட்டார். இப்படிப்பட்டதோர் துர்பாக்கியமான அரசியல் வெற்றிடத்தில்தான் டான் டிவி குழுமம் மேற்படி முயற்சியை முன்னெடுத்திருக்கின்றது.

கடந்த 14 ஆண்டுகளில் பெரிய கூட்டமைப்பு உடைந்துடைந்து, சிறிய கூட்டுக்களாக சிதறிப் போய் உள்ளது. இப்பொழுது தமிழ்த் தேசிய அரங்கில் தமிழரசுக்கட்சி, குத்துவிளக்குக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, விக்னேஸ்வரனின் கட்சி ஆகிய நான்கு பிரதான கட்சிகள் உண்டு.

இதில் ஆகப்பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அக்கட்சியின் தலைவர் யார் என்பதை வரும் ஜனவரி மாதம் தீர்மானிக்க வேண்டியிருக்கலாம். மூத்த பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி இதுவரையிலும் தேர்தல்கள் மூலம் தனது தலைவரைத் தெரிவு செய்யவில்லை. ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் இம்முறை அவ்வாறு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைவர் இல்லாத வெற்றிடத்தில், தேர்தலை நடாத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. தேர்தலை வைக்காமல் நிலைமைகளைச் சமாளிக்கலாமா என்று கட்சியின் மிக மூத்த உறுப்பினர்கள் கவலைப்பட்டாலும், தலைமை பலமிழந்து போனதன் விளைவாகவே இப்படி ஒரு போட்டி தோன்றியிருக்கிறது.

அதாவது ஏற்கனவே நான்கு கட்சிகள் பிரிந்து நிற்கும் ஒரு தமிழ்த் தேசியச் சூழலில், உள்ளதில் பெரிய கட்சியும் தலைமைத்துவப் போட்டிக்குள் சிக்கிச் சிதையக்கூடிய ஒரு காலகட்டத்தில், டான் டிவி மேற்படி சந்திப்பை ஒழுங்குப்படுத்தியிருக்கிறது.

கடந்த 14 ஆண்டுகளில் ஒரு கூட்டமைப்பு உடைந்து நான்கு பிரிவுகள் உருவாகியிருக்கின்றன. இந்த நான்கு பிரிவுகளும் தாமாக இணையப் போவதில்லை. அவ்வாறு தாமாக ஐக்கியபடும் அளவுக்கு அந்த நான்கு பிரிவுகளிலும் பரந்த சிந்தனையை கொண்ட பெருந்தலைவர்கள் கிடையாது. கட்சித் தலைவர்கள்தான் உண்டு. இந்த நான்கு பிரிவுகளையும் ஒன்றாக்குவதற்கு பலமான சிவில் சமூகமும் இல்லை. பல கோடி ரூபாய்களை முதலீடு செய்து நாடாளுமன்ற உறுப்பினராக வந்தவர்கள், மோட்டார் சைக்கிளில் வரும் சிவில் சமூகங்களின் சொற்களை மதித்து நடப்பார்கள் என்று எப்படி எடுத்துக் கொள்வது?

சிவில் சமூகங்கள் அரசியல் கட்சிகளின் மீது செல்வாக்கு செலுத்தும் அளவுக்கு பலமாக இல்லை. இந்த வெற்றிடத்தில்தான் டான் டிவி ஒரு முயற்சியைத் தொடங்கியிருக்கிறது. உள்ளூரில் பலமான ஓர் ஊடகம் அது. அந்த ஊடகத்தில் எல்லா அரசியல்வாதிகளும் முகம் காட்ட விரும்புவார்கள். எனவே அந்த ஊடகம் அழைத்தால் எல்லா அரசியல்வாதிகளும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஒரு தொகுதி அரசியல்வாதிகள் வரவில்லை. சமயப் பெரியார்களும் வரவில்லை. அதுமட்டுமல்ல ஏனைய சகோதர ஊடகங்கள் மத்தியிலும் அந்த சந்திப்பை குறித்து ஆக்கபூர்வமான விமர்சனங்கள் குறைந்தளவுக்கே வெளிவந்தன.

இந்நிலையில், தமிழ் அரசியலில் ஊடக அதிகாரம் எந்தளவுக்கு அரசியலில் தாக்கமுடையதாக இருக்கும் என்பதனை அன்றைய தொடக்கத்தின் பின்னரான அடுத்தடுத்த கட்டங்களே தீர்மானிக்கும்.

## வீணாவின் கவிக்கணை

எவரும், எவருக்கும், எதற்கும்
சலித்தவரும் இல்லை,
குறைந்தவரும் இல்லை,
சில பல காரண காரியங்களுக்கு,
அவரவர் நடத்தையே
ஒருவரை உயர்ந்த மனிதனாகவோ
தாழ்ந்த மனிதனாகவோ
காட்டி கொடுக்குமே தவிர,
அவரது ஜாதியோ மதமோ
அந்தஸ்தோ அல்ல!

# இலங்கை மீன் இறக்குமதி செய்யப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு தேசிய மீன்பிடிக் தினக் கொண்டாட்டம்??

**- நடராசா லோகதயாளன்**

இலங்கையின் மொத்தக் கடற்பரப்பு 1,760 கி.மீ. நீளமாக காணப்படும் நிலமையில் இன்றும் கடல் உணவு குறிப்பிட்டளவு இறக்குமதி செய்யும் நாடாகவே இலங்கை இருக்கும் அதே நேரம் இலங்கையின் கடற்பரப்பைவிட சிறிய நாடுகள் பல மொத்த தேவையினையும் பூர்த்தி செய்து ஏற்றுமதி நாடாகவும் உள்ளனர்.

இலங்கையின் மொத்த மீன்பிடியில் 33 வீத உற்பத்தி செய்த யாழ்ப்பாணம் மாவட்டம் இன்று முதல் மூன்று இடங்களிற்குள்ளும் இல்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது.

இலங்கையில் காணப்படும் 15 கடல் மாவட்டங்களில் அதிக கடல் உணவு உற்பத்தி செய்யும் முதலாவது மாவட்டமாக புத்தளம் மாவட்டம் காணப்படுகின்றது. புத்தளம் மாவட்டம் முதலாவது மாவட்டமாக திகழ்வதற்கு இங்கே நீண்ட நாள் விசைப்படகுகள் அதிகமாக காணப்படுவதே காரணமாக விளங்கும் அதே நேரம் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டி பகுதி அதிக பங்களிப்பினை வழங்குகின்றது.

இரண்டாவது மாவட்டமாக கம்பகா மாவட்டத்தின் நீர்கொழும்பு பிரதேசம் காணப்படுகின்றது. கம்பகா இரண்டாவது இடத்தை பிடிக்க மாவட்டத்தின் நிக்கோவிட்ட இறங்குதுறையே முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது. இங்கே அதிக படகுகள் வருவதே இதற்கு காரணம். 1983 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதியை யாழ்ப்பாணக் குடாநாடு மட்டும் உற்பத்தி செய்துள்ளதனை நீரியல் வளத் திணைக்கள தரவுகள் உறுதி செய்கின்றன.

இலங்கையின் மூன்றில் ஒரு பகுதிக் கடல் வடக்கில் உள்ளது. இதில் யாழ்ப்பாணம் மாவட்டம் மட்டும் 33.5 வீத உற்பத்தியை எட்டிய நிலமை காணப்பட்டது. இந்த உற்பத்தி வீழ்ச்சி கண்டதற்கு யுத்தம், தொடராக ஒரு இடத்தில் மீன்பிடித்தமையால் இனப்பெருக்க இடம் அழிவு.

காலநிலை மாற்றம். மீன்பிடி அறிவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியமை போன்றவை காரணமாக இருந்தாலும் மிக முக்கிய காரணமாக இருப்பது அதிக கடல் கலங்கள் அழிக்கப்பட்டதும் பிரதான காரணமாகின்றது.

1983 ஆம் ஆண்டு ஆரம்பமான கடற் கலங்கள் அழிப்பு இறுதி யுத்த காலமான 2009 ஆம் ஆண்டு வரை நீண்டு அதிக கடற்கலங்கள் போரின் காரணமாக அழிக்கப்பட்டன.

1983 ஆம் ஆண்டு கொக்குளாய், கொக்குத்தொடுவாய் முதல் மன்னார் வரையிலும் 1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் காலத்தில் வல்வெட்டித்துறை, திருகோணமலை வரைக்கும் படகுகள் தீயிட்டு கொழுத்தப்பட்டன. அதன் பின்பு 2ஆம் ஈழப்போரின் போது 1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, மன்னார், கிளாலி என எங்குமே கடற்கலங்களை அழிக்கும் இந்த அவலம் இடம்பெற்றதோடு 1995 மற்றும் 1996களில் ஒட்டு மொத்த யாழ்ப்பாண இடப்பெயர்வின்போதும் இதே நிலமையே காணப்பட்டது.

இதற்கும் அப்பால் தமது உயிரைக்காக்க இந்தியாவிற்கு தப்பிச் சென்ற மக்கள் பயணித்த படகுகள் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்டது. அவை இன்றுவரை மீள ஒப்படைக்கப்படவில்லை. கிளாலிப் போக்குவரத்தில் அழிக்கப்பட்ட கடற்கலங்கள் நூற்றுக் கணக்கானவை.

இத்தனையும் தாண்டி 2020 ஆம் ஆண்டு இலங்கையின் கடல் உற்பத்தியின் மொத்த ஏற்றுமதியானது 21 ஆயிரத்து 298 மெற்றிக் தொன்னாக காணப்படும் அதே நேரம் இதன் பெறுமதியானது 39 ஆயிரத்து 874 மில்லியன் ரூபாவாக அதாவது 215 மில்லியன் டொலராக காணப்படுகின்றது. இதேநேரம் 2019ஆம் ஆண்டு 28 ஆயிரத்து 771 மெற்றிக் தொன்னும் 2018ஆம் ஆண்டு 27 ஆயிரத்து 998 மெற்றிக் தொன்னாகவும் காணப்பட்ட அதே நேரம் 2017 ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 593 மெற்றிக் தொன்னாக மட்டுமே காணப்பட்டது.

ஏற்றுமதிகள் இந்த அளவில் என்பதனால் கணல் உற்பத்தியில் தன்னிறைவு எனக் கொள்ளக்கூடாது. ஏனெனில் 2020ஆம் ஆண்டின் இறக்குமதியானது 85 ஆயிரத்து 809 மெற்றிக் தொன்னாகவும் இதன் பெறுமதி 35 ஆயிரத்து 504 மில்லியன் ரூபா அதாவது 191 மில்லியன் டொலராகவும் காணப்படுகின்றது. அதாவது நல்லின மீன், இறால், நண்டு, கடலட்டை



போன்றவை ஏற்றுமதி செய்யப்படும் அதே காலம் அடைக்கப்பட்ட ரின் மீன் மற்றும் நெத்தலிக் கருவாடு போன்றன இறக்குமதி செய்யப்படுகின்றது.

இலங்கையின் வருடாந்த கடல் உற்பத்தியானது 62 கோடியே 50 லட்சம் கிலோ எனப்படுகின்றது. (5 லட்சத்து 25 ஆயிரம் தொன்.) இருப்பினும் இந்த அளவில் சிறு சந்தேகமும் உள்ளது.

இலங்கையில் இருந்து அதிகம் ஏற்றுமதி செய்வது கடலட்டை, அறக்குலா, பாரை, இறால், நண்டு ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அதி உச்ச பசளை வீதியில் வீசப்படுகின்றது.

அன்றாட உணவிற்காக பெறப்படும் இறாலின் கோதானது அதி உச்ச பயனைத் தரும் மிகப்பெரும் பசளையாகும். இந்தியாவில் இறால் கோது தென்னைச் செய்கைக்காக நிலத்தின் கீழ் பயன்படுத்துவது மட்டுமன்றி தென்னை வட்டுக்குள்ளும் வீசப்படுகின்றது. எமது பிரதேசத்தில் கல்வி அறிவு உடையவர்கள்கூட அதனை வீதியில் வீசிவிட்டு இரசாயன உரத்தை வாங்கியே பயன்படுத்தவே முனைகின்றனர்.

ஆயிரம் கிலோ இறாலிற்கு 120 கிலோ ஓடு என்ற அடிப்படையில் ஒரு மாதம் 20 ஆயிரம் தொன் இறால் ஏற்றுமதியில் . கடந்த ஆண்டு பண்ணைகளில் இருந்து 8 ஆயிரம் தொன் இறால் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதாவது 80 லட்சம் கிலோ இறால் இதில் 8 லட்சம் கிலோ கோது வரும். இதனை வெளியில் எடுத்தால் அதிக பசளை. இதில் புத்தளம் பகுதி விவசாயிகள் இதனை நன்கு பயன்படுத்துகின்றனர். வடக்கில் பசளையை அநியாயமாக கை விடப்படுகின்றது.

வடக்கு கடல் பண்ணைகள் என்னும் பெயரில் பங்கிடப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 292 கி.மீற்றர் நீள கடல் உள்ளதோடு, மன்னாரில் 163 கி.மீ. நீளம் கடல் உள்ளதோடு, கிளிநொச்சியில் 125 கி.மீற்றரும், முல்லைத்தீவில் 76 கி.மீற்றருமாகவே வடக்கு மாகாணத்தில் 656 கி.மீற்றர் நீள கடல் உள்ளது. இதன் கரையோரங்களில் அதிக பண்ணைகளை அமைக்க தற்போதைய அரசு திட்டமிடுகின்றது. இதனால் ஏனைய நீண்டகால பாரம்பரிய தொரில்கள் எந்தளவிற்கு பாதுகாக்கப்படும் என்பது ஒரு கேள்விக் குறியாகவும. உள்ளது.

இவற்றில் அதிகமாக தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகள் கடலட்டை, இறால்ப் பண்ணை, பாசி வளர்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் பெயரில் பல ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்படவுள்ளது மட்டுமன்றி கடலும் வழங்கப்படவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணையில் 2 ஆயிரத்து 150 ஏக்கரும், ஊர்காவற்றுறையில் 2 ஆயிரத்து 15 ஏக்கரும், நல்லூரில் 445 ஏக்கரும் வழங்கப்படவுள்ளதோடு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 260 ஏக்கர் பிரதேசம் வழங்கப்படவுள்ளது.

தரைக்கு அப்பால் கடலிலும் இடம் வழங்கப்படவுள்ளது.

நான்கு பிரதேச செயலாளர் பிரிவில் தரையில் இடம் வழங்கினாலும் 5வது பிரதேச செயலாளர் பிரிவான நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடலில் 400 ஏக்கர் பிரதேசம் பாசி வளர்ப்பிற்கு வழங்கக்படுகின்றது. இதன் அடிப்படையில் இரு இடங்களில் 200 மற்றும் 200 ஏக்கர் இடமாக கடலில் இரு இடங்கள் ஒதுக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. அவ்வாறு கடலில் வழங்கப்படும் இரு பிரதேசமும் தரையில் இருந்து 500 மீற்றருக்கும் அப்பால் நடுக் கடலிலேயே இந்த இரு திட்டமும் இடம்பெறவுள்ளது.

50 பில்லியன் வருமானம் கிடைக்கும்.

5 ஆயிரம் ஏக்கருக்கு பண்ணைத்திட்டம் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படுகின்றது. வருமானம் மாகாண சபைக்கு கிட்டும்.

மன்னாரில் தற்போது 56 ஏக்கர் பாமில் ஒரு வருடத்திற்கு 1 பில்லியன் வருவதனால் 60 வீத செலவீனம் வரும். மிகுதி இலபம். கரை வலை பாதிக்காது. கலங்கட்டிக்கு 300 மீற்றர் இடைவெளியிருக்க வேண்டும். அது போதுமானது. பாசி வளர்ப்பை நாடி பெரிய இன மீன் தேடி வரும். மீனவர்களை ஏமாற்றி வாங்கும் தரகர்கள் குழப்பத்தை ஏற்படுத்துவர்.

யாழ். குடாநாட்டில் 1983ல் 48677 மெற்றிக் தொன்னாக இருந்த மொத்த மீனின் உற்பத்தி 2014ல் யுத்தம் நிறைவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்தும் 31767 மெற்றிக் தொன்னைத் தான்ட முடியவில்லை என்பதனை மாவட்ட புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் யுத்தம் வலுப்பெற்ற காலமான 1983ஆம் ஆண்டுயாழ். குடாநாட்டில் அப்போது இருந்த வளங்களை உபயோகித்து 48677 மெற்றக் தொன் மீன் உற்பத்தியை பெற்ற மீனவக் குடும்பங்கள் 2014 ம் ஆண்டில் வெறும் 31767 மெற்றிக் தொன் உற்பத்தியை மட்டுமே பெற்றுள்ளனர் என்பதனை யாழ். மாவட்டத்தின் 2016ம் ஆண்டிற்கான திட்டமிடல் கையேட்டின் புள்ளிவிபரம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதே வேளை யாழ். குடாநாட்டில் மட்டும் 298 கிலோ மீற்றர் நீளமுடைய கடல்ல கரை நீளமும், 21,117 மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 22,119 மீனவர்கள் செயல்படுகின்றனர். குடாநாட்டில் தற்போது 14 மீன் பிடி பரிசோதகர் பிரிவுகள் இயங்கும் அதேவேளையில் 110 மீனவக் கிராமங்கள் உள்ளன. இங்கு 93 மீன்பிடி கிராமிய அமைப்புக்களும், 117 மீனவர் சங்கங்களும் இயங்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு இயங்கும் மீனவர்களிடம் மொத்தம் 8010 படகுகளும், இப் படகுகள் மூலம் தொழில் செய்வதற்கு 06 துறைமுகங்கள் உள்ளன. இதேவேளை குடாநாட்டில் 7 ஐஸ் உற்பத்தி நிலையங்களும், 3 மீன் பதப் படுத்தும் நிலையங்களும் செயற்படுகின்ற போதிலும் குடா நாட்டின் 83 ஆம் ஆண்டின் உற்பத்தியை நெருக்க முடியாத்தாகவே உள்ளமை இப்புள்ளி விபரத்தின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சீனா மற்றும் மலேசியாவிற்கு அதக கடல் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டாலும் சீனா, தாய்வான் நாடுகளல் இருந்து அதிக இறக்குமதியும் இடம்பெறுகின்றது.

இவை அனைத்திற்கும் அப்பால் தற்போது சீனாவில் இருந்து மீன் இறக்குமதிக்கும் ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளதாக மீனவ அமைப்பின் பிரதிநிதிகளில் ஒருவரான அன்னராசா குற்றம் சாட்டுவது தொடர்பில் கடற்றொரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இலங்கையில. பிடிபடாத மீன்வகைகள் இறக்குவதற்கு அனுமதிக் கப்படுகின்றது என்கின்றார். அதேநேரம் இலங்கையில் உள்ள சீனத் தூதுவரோ இலங்கைக்கு சீனாவில் இருந்து எந்தவிதமான கடல் உற்பத்தியும் இறக்குமதி இல்லை என்கின்றார் இதில் எது உண்மை என்பதும் இவர்களிற்கு மட்டுமே தெரியும் உண்மையாகவுள்ள சூழலிலேயே 2023 ஆம் ஆண்டின் சர்வதேச மீன்பிடி தினத்தை இலங்கை அனுஸ்டிக்கின்றது.

இதேநேரம் இலங்கையின் வடக்கு மீனவர்கள் அனுபவிக்கும் மீன்பிடி நெருக்கடியில் ஒன்று இந்திய மீனவரின் அத்துமீறல் இதனை தொடர்ந்தும் மீனவர்கள் சுட்டிக்காட்டிவருகின்றனர். இதனை வலியுறுத்தவோ என்னவோ 2023 ஆம் ஆண்டின் மீன்பிடித் தினக் கொண்டாட்டம் யாழில் உள்ள இந்திய அரசால் கட்டப்பட்ட கலாச்சார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

416 283 6232
இப்பொழுது உங்கள் GEETHAVAANI RADIO வை
தொலைபேசி அழைப்பில் கேளுங்கள் !

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வட்டுக்கோட்டை இளைஞன் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை வேண்டும் என இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் அழுத்தம்




யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இளைஞன் உயிரிழந்த சம்பவம் குறித்து இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் சிறிவொல்ட் கவலை வெளியிட்டுள்ளார்.

அவரது X தளத்தில் இடப்பட்ட பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

மேலும் தனது பதிவில், பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளை இளைஞன் உயிரிழந்தமை குறித்து ஆழ்ந்த கவலையடைகின்றேன் என சிறிவொல்ட் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து இலங்கை அதிகாரிகள் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.





# இன்னும் பத்து வருடங்களில் தேசிய தலைவர் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது – சி.வி.கே.சிவஞானம்



இன்னும் பத்து வருடங்களில் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலைமைதான் இங்கு காணப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் அவை தலைவர் சி.வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்தப்படும் கார்த்திகை வாசம் மலர் கண்காட்சி ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் பத்து வருடங்களில் தேசிய தலைவர் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது.

எங்கள் மக்களிடத்தில் மறதி என்கின்ற பண்பு வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாக மக்கள் பழைய விடயங்களை மறக்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

ஐங்கரநேசன் என்பவர் ஒரு தமிழ்த்தேசிய உணர்வோடு நீண்ட காலமாக பயணித்து வருபவரினால் இந்த மர நடுகை மாதம் ஆண்டுதோறும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது.

மாகாண சபை செயற்பாட்டில் இருந்தபோது ஐங்கரநேசன் விவசாய அமைச்சராக இருந்தபோது இந்த கார்த்திகை மாதத்தினை மர நடுகை மாதமாக பிரகடனப்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

ஆகவே எனக்கு அதில் ஒரு சந்தோஷம் உள்ளது. அதாவது இந்த மரநடுகை மாதத்தை தீர்மானமாக நிறைவேற்றியதில் நானும் பங்காற்றி இருக்கின்றேன்.

முன்னர் வடக்கு மாகாண சபை செயற்பாட்டில் இருந்த காலத்தில் இந்த செயற்திட்டமானது வடக்கு மாகாணத்தில் எல்லா மாவட்டத்திலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறிவிட்டது. மரநடுகை தற்பொழுது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றது. அது ஐங்கரநேசனால் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஐங்கரநேசன் இந்த மண்ணினுடைய மரநடுகை மைந்தனாக அந்த பெருமையோடு மேலும் இந்த கைங்கரியத்தினை முன்னெடுப்பதற்கு இந்த சமூகம் அவரோடு இணைந்து பயணிக்க வேண்டும், ஆதரிக்க வேண்டும்.

இந்த விடயத்தினை தொடர்ச்சியாக அவர் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்த திரண்ட முறிகண்டி மக்கள்!

வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்தும் எதிர்பார்ப்புடன் முறிகண்டி மக்கள் இன்று சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

பிரதான வாய்க்கால்களில் காணப்படும் பற்றைகளினால் உக்கும், உக்காத பொருட்கள் அடைபட்டு வெள்ள நீர் மக்கள் குடியிருப்புகளிற்குள் புகுந்து வருகின்றது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வரும் நிலை ஏற்பட்டதுடன், போக்கு வரத்து செய்வதிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், முறிகண்டி வர்த்தகர் சங்கம், கிராம மட்ட அமைப்புக்கள் பொது மக்களுடன் இணைந்து மாபெரும் சிரமதான பணியை இன்று ஆரம்பித்துள்ளனர்.


இதன் போது, பிரதான வாய்க்கால்களில் காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டுள்ளது. இதன்போது பெரும் தொகையான பிளாஸ்ரிக் போத்தல்கள் அகற்றப்பட்டு பிரதேச சபையினர் ஊடாக வெளியேற்றப்பட்டது.



வெள்ள நீர் தடையின்றி வாய்க்கால்கள் ஊடாக கடந்து செல்லும் வகையில் முன்னெடுக்கப்படும் குறித்த சிரமதான பணி ஊடாக வெள்ள அனர்த்தம் கட்டுப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிடப்படுகிறது.

# பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணத்திற்கு நீதி வேண்டும்

## நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு



பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த இளைஞனின் மரணத்திற்கு நீதி வேண்டும் என இலங்கை நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் எம்.பி நேற்றையதினம் தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வரவுசெலவுத் திட்டம் சம்பந்தமான சில கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு இன்று வட்டுக்கோட்டை பகுதியிலே நடந்திருக்கக் கூடிய இறப்பு தொடர்பான ஒரு விடயத்தை இந்த சபையிலே கூறுவதற்கு நான் விளைகிறேன்.

முதலாவதாக, இந்த மாதம் எட்டாம் திகதி நாகராஜா அலெக்ஸ் என்ற 28வயதான ஒரு இளைஞர் சித்தங்கேணி பகுதியிலே வட்டுக்கோட்டைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

அவரை 8ம் திகதி பிடித்தவர்கள் பின்பு 12ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள். அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்படி நீதிபதி அவர்கள் கட்டளையிட்டு 12ம் திகதி தொடக்கம் 16ம் திகதிவரையும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்பு அவர் வைத்தியசாலையால் விடுவிக்கப்பட்ட பின்பு அவரை யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் கொண்டுபோய் வைத்தார்கள். மீண்டும் அவர் 19ம் திகதி நோய்வாய்ப்பட்டு விட்டார் என்ற காரணத்திற்காக மீண்டும் வைத்தியசாலைக்கு கொண்டுவந்தபோது கொண்டுவந்து ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தில் அவர் இறந்துவிட்டார்.


அவரை பிரேத பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார் அது ஒரு இயற்கை மரணமல்ல, அவருக்கு கிட்னியிலே பிரச்சினை, அடித்த காயத்தால் ஏற்பட்ட வருத்தங்கள் இருக்கின்றது. பல அடிகாயங்கள் இருக்கின்றது ஆகவேதான் அவர் இறந்திருக்கிறார் என்று சொல்லியிருக்கின்றார்.

இதன் காரணமாக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த இடமாற்றம் என்பது, சாதாரணமாக தமிழ் பகுதிகளிலே இப்படியான நிலைமைகள் நடந்துவிட்டால் இடம் மாற்றுவதும் அதை மறந்து விடுவதும் இப்படியான ஒரு நிலைப்பாடே தொடர்ந்து இருந்துகொண்டு வருகின்றது.

இதற்கு ஒரு சரியான விசாரணை வைக்கப்பட்டு அந்த குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலேயொழிய இப்படியான நிலைமைகளை ஒருபோதும் திருத்த முடியாது. நிற்பாட்டவும் முடியாது. இது ஒரு மிகப் பாரதூரமான விசயம் என்பதைக் கருத்திற்கொண்டு அரசாங்கம், முக்கியமாக பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஜனாதிபதி அவர்களும் இதில் தலையிட்டு நிச்சயமாக உடனடியான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த குடும்பம் மிக வறிய குடும்பம். அவரை முதலில் மரம் கடத்துகிறார் என்று பிடிக்கப்பட்டது. இப்போது களவு என்று பொலிசார் சொல்லுகிறார்கள். இப்படியான விசயங்கள் அங்கு நடந்துகொண்டிருகின்றது. இவைகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# சம்பூர் ஆலங்குளத்தில் நினைவேந்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள சிலருக்கு நீதிமன்றத் தடை!



சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு 17 பேருக்கு மட்டும் மூதூர் நீதவான் நீதிமன்றினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பூர் பொலிசாரினால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நகர்த்தல் பத்திரத்துக்கமைய இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை வழங்குவதற்காக சம்பூர் பொலிசார் துயிலுமில்லத்துக்கு வருகைதந்து குறித்த தடையுத்தரவுகளை வழங்க முற்பட்ட போது தடையுத்தரவில் குறிப்பிடப்பட்ட பெயர்களில் தவறாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தம்முடைய பெயர்களை அடையாளப்படுத்தக்கூடிய தரவுகள் எவையும் இல்லாமையினால் பலர் அதனை ஏற்க மறுத்ததுடன் குறித்த தடையுத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுவதாகம் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் க.பண்பரசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

குறித்த தடையுத்தரவு உடைக்கப்படும் எனவும் குறித்த தடையுத்தரவினால் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படாது என்பதனால் யாரும் குழப்பமடையவோ அச்சமடையவோ தேவையில்லை எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# புதிய அரசியல்யாப்பு உருவாக்கப்படும் வரை மாகாண சபை முறையினை நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கம்

## தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் தெரிவிப்பு

புதிய அரசியல்யாப்பு உருவாக்கப்படும் வரை மாகாண சபை முறையினை நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கம் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண அலுவலகத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போ-தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2022ம் ஆண்டு இலங்கை வரலாற்றிலேயே துர்ப்பாக்கிய நிலையாக அமைந்தது 69 லட்சம் வாக்குகளை பெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த இருபதாவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி சகல அதிகாரங்களையும் தம்வசப்படுத்தி கொண்ட பாராளுமன்றத்தில் கூட மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச மாத்திரமல்லாது ராஜபக்சாக்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள்.

அவர்களுடைய நாய்க்குட்டியாக இருந்த நரி குட்டி ஒன்று ஆட்சி பீடத்துக்கு வந்தது இந்த நரி நரித்தனமான நடவடிக்கைகளிலேயே கடந்த 45 வருடமாக ஈடுபடுகின்றது எனினும் அந்த நரியினை ஆட்சிபீடத்தில் இருந்து அகற்றுவதற்கு மக்கள் சக்தியினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டினுடைய தேசிய பிரச்சினை என்பது 75 வருடங்களாக இருக்கின்ற பிரச்சனை யார் என்று பார்த்தால் நாட்டினுடைய ஆட்சியாளர்கள், அதாவது கடந்த கால ஆட்சியாளர்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழ் கட்சிகள் உடந்தையாக இருந்திருக்கின்றார்கள் ஆனால் மக்கள் விடுதலை முன்னணி அல்லது தேசிய மக்கள் சக்தி நாட்டில் ஆட்சி செய்யவில்லை.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு தமிழ் மக்கள் தீர்வினை எதிர்பார்க்கின்றார்கள் தலைநிமிர்ந்து தன்மானம் உள்ள தமிழனாக வாழ வேண்டும் என்ற தேவை தமிழ் மக்களுக்குள்ளது.

அதற்காக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக யுத்தத்திலும் ஈடுபட்டிருந்தார்கள் யுத்தம் தோல்வி அடைந்திருக்கின்றது ஏற்கனவே பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தனர் போராட்டங்களும் தோல்வி அடைந்திருக்கின்றது நாங்களும் இரண்டு தடவைகள் இந்த நாட்டில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டோம் அந்தப் போராட்டத்தில் தோல்வியடைந்தோம்,



எங்களுடைய பத்தாயிரத்துக்கும் அதிகமான எமது இளைஞர்கள் படுகெ-ாலை செய்யப்பட்டார்கள்.

13 வது திருத்தச்சட்டம் என்பது தமிழ் மக்களுடைய பிரச்சனை தமிழ் மக்களுக்கு 13 அல்லது தமிழ் மக்கள் உரிமை உள்ளவர்களாக இந்த நாட்டில் மனிதர்களாக வாழக்கூடிய ஒரு நிலைமையினை உருவாக்க முடியும் என்பதில் தேசிய மக்கள் சக்தி திடமாக உள்ளது.

ஏனென்றால் இந்த நாட்டில் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் ஒரு குடையின் கீழ் அணி திரளா விட்டால் அவர்கள் ஒன்று சேர முடியாவிட்டால் இந்த நாட்டில் விமோசனம் இல்லை என்ற கொள்கை தேசிய மக்கள் சக்தியிடம் தொடர்ந்து உள்ளது.

இந்த பிரச்சனைக்கு நீண்டு நிலைக்க கூடியவாறு தமிழ் சிங்கள முஸ்லிம்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களின் கருத்துக்களும் ஒன்று சேர்ந்து புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்.

மாகாண சபை முறை உருவாக்கப்பட்டு 45 வருடங்களாகும் ஆனால் பிரச்சினை அதே இடத்தில்தான் இருக்கின்றது இருந்த போதிலும் கூட தமிழ் மக்கள் நம்புகின்றார்கள் இந்த மாகாண சபை என்பது 13-வது திருத்தச்சட்டம் என்பது தமிழ் மக்களுக்கான தீர்வு தமிழ் மக்களுக்கென வழங்கப்பட்ட தீர்வு என அதனால் மக்கள் சக்தியாகிய நாங்கள் கூறுகின்றோம்.

முதலில் நீண்டு நிலைக்கக்கூடிய நிரந்தரமான தீர்வுக்காக புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும் வரைக்கும் இந்த மாகாண சபையினை தொடர்ந்து பேண வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும் என தெரிவித்துள்ளார்.

# மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் அமைப்பினால் வயோதிபர்களுக்கான முன்னெடுத்து வரும் செயல் திட்டங்கள் குறித்து ஆராய்வு

**- மன்னார் நிருபர் (23-11-2023)**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் (DEAF LINK) அமைப்பினால் கடந்த வருடம் (2022) மாசி மாதம் முதல் "கௌரவத்துடன் முதியோருக்கான சமூகம் சார் உட்படுத்தல் அபிவிருத்தி" எனும் தொனிப்பொருளில் வயோதிபர்களுக்கான பல்வேறு செயல் திட்டங்களை அமுல் படுத்தி வருகின்றனர்.

குறித்த திட்டம் 39 மாதங்களை கொண்ட ஒரு செயல்திட்டமாக உள்ளது. இந்த நிலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செயல்திட்டம் குறித்து ஊடகவியலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் வி-சேட கலந்துரையாடல் வியாழக்கிழமை (23) காலை 10.30 மணி முதல் மதியம் 1 மணிவரை மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

குறித்த ஊடக கலந்துரையாடல் மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.என். நிமால் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் அமைப்பின் அனுராதபுரம் மற்றும் மன்னார் மாவட்ட திட்ட இணைப்பாளர் செல்வி. ஜெய பியூலா கலந்து கொண்டார்.

மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், வைத்தியர், அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மெதடிஸ்த திருச்சபை



டெவ்லிங் அமைப்பினால் வயோதிபர்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு செயல் திட்டங்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.

குறிப்பாக முதியோர்களுடன் இடம் பெறுகின்ற செயல்திட்டங்கள், முதியே-ார் தொடர்பான விடயங்கள், அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருதல், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விவரிக்கப்பட்டது.

குறிதத் கலந்துரையாடலில் கலந்து கொண்ட வயோதிபர்கள்கள் தமது கருத்துக்களையும் வெளிப்படுத்தியதோடு, மெதடிஸ்த திருச்சபை டெவ்லிங் அமைப்பினால் தாங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகள் குறித்தும் விவரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டை இளைஞர் "கொலை" வழக்கில் அனைத்து சட்டத்தரணிகளையும் ஆஜராகும்படி வேண்டுகோள்

**- நடராசா லோகதயாளன்**

வட்டுக்கோட்டை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு உயிரிழந்த இளைஞனின் வழக்கு நடவடிக்கைக்கு வடக்கின் அனைத்து சட்டத்தரணிகளையும் மன்றில் முன்னிலையாக யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானதனால் உயிரிழந்த்தாக கருதப்படும் நாகராசா அலெக்ஸ்சின் மரணம் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறு இடம்பெறும் வழக்குத் தொடர்பில் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் 4 தீர்மானங்களை வெளியிட்டுள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தின் தீர்மானத்தில்,

1. வழக்கிற்கு யாழ்ப்பாணம் சட்டத்ணிகள் அனைவரும் முன்னிலையாவது.
2. வடக்கு மாகாண சட்டத்தரணிகள் சங்கம் அனைவரும் இந்த வழக்கில் முன்னிலையாக அழைப்பு விடுவது.
3. உயிரிழந்தவரின் மரணத்தோடு சம்பந்தப்பட்டோரை உடன் கைது செய்யுமாறு பொலிசாருக்கு அழுத்தம் கொடுப்பது.
4. இந்த விடயத்தை புலனாய்வுப் பிரிவிடம் கையளிக்க வேண்டும் என கோரிக்கை முன் வைப்பது போன்ற தீர்மானங்களே மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# இராணுவ முகாமிற்கு அருகாமையில் உள்ள மாவீரர் நினைவேந்தல் இடத்தில் கட்டப்பட்டிருந்த கொடிகளை அறுத்த விசமிகள்!

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் இராணுவ முகாம் முன்பாக அமைந்துள்ள மாவீரர் நினைவேந்தல் இடத்தில் கட்டப்பட்டிருந்த மாவீரர் நினைவேந்தல் கொடிகள் 22-11-2023 புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவ-ிசாளரான - ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த செ.மயூரன் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

முன்னாள் உப தவிசாளர் மயூரன் தலைமையிலான குழுவினர் புதன்கிழமை இரவு 8 மணி வரை நினைவேந்தல் இடத்தில் சிரமதானம் மேற்கொண்டு - நினைவுக் கொடிகளை கட்டி விட்டு சென்றிருந்த நிலையில் மேற்படி கொடிகள் அனைத்தும் இனந்தெரியாத நபர்களால் அறுத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.




இருப்பினும் அவ்விடத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் கட்டப்பட்ட நினைவுக் கொடிகள் அறுத்து எறியப்படவில்லை எனவும் எனவே இது தொடர்பாக பொலிஸார் தகுந்த விசாரணை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய வேண்டும் எனவும் முன்னாள் உப தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.


EASY FURNITURE
ஈஸி ஃபர்னிச்சர்
Markham Convention Centre
McNicoll Ave
ARMDALE
Dynamic Dr
Tapscott Rd
ORDER TODAY 416-293-9204
easyfurniture
easyfurnitureca
MON - FRI 11:00AM - 8:00PM
SAT & SUN 11:00AM - 6:00PM
Winter
Special Sale
நம்பி வாங்க!
சந்தோஷமா போங்க...
3 Pcs Sofa Set
Sofa & Love Seat $649
3 Pc Sofa $749
Single Bed $145
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1299
3 Pcs Sofa Set Air Leather Recliners
Sofa & Love Seat $1049
Bunk Bed $449
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1349
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1399
Folding Bed $149
Including Free Ottoman
Sectional Sofa $849
Sofa Bed $649
Queen Size Leather Bed $199
5 Pcs
Dining Table $399
Bunk Bed with Storage $899
7 Pcs
Dining Table $549
5 Pcs
Dining Table $399
Coffee Table $89
L Sectional Sofa $399
Sami Madam
Price Starting from $99
We Can Make Special Order
Free Ottoman Starting From $59
Coffee Table $89
5" Single Foam $59
Dreamopedic Single Mattress $149
Rest-O-Pedic Queen $249
Velvet Rose Queen Mattress $299
Wardrobe Starting From $199
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7
நாங்களே உற்பத்தி செய்து விரும்பிய அளவுகளில் செய்து கொடுக்கிறோம்

# 21ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 - 02 - 1984



ஆண்டவன் அணைப்பில்
23 - 11 - 2002

மாறாத நினைவலைகள்

## செல்வன் சந்திரபோஸ் நிர்மலன் (Shan)



நினைவுகளில் நீங்காது இருக்கும் எமது உறவு நீ
இறப்பும், பிறப்பும் இவ்வுலகில் சகஜமான ஒன்றானாலும்,
பிரிவு என்பது நம்மை எப்பவும் கரையவைப்பது...
21 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மௌனமான
உனது நினைவுகள் மட்டும் நீங்காது உயிர்த்திருக்கின்றது
உன் உறவுகளின் மத்தியில்
இன்பங்கள் சேருமிடத்தில் இன்முகம் காட்டிநின்றாய்
துன்பங்கள் சேருமிடத்தில் துணிவு தந்து துணை நின்றாய்
இன்னோர் விடியலில் உன் ஆத்மா ஜனனமாகி
வாழ்ந்தகொண்டிருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையில்
ஒவ்வொரு ஆண்டின் நினைவஞ்சலியையும்
நாம் அமைதியாக அஞ்சலி செய்கின்றோம்.

என்றும் உன் நீங்காத நினைவுகளுடன் உனது குடும்பம்
(905) 554-2433

இலங்கை செய்திகள் Sri Lanka News



# தந்தை செல்வாநாயகம் அவர்களின் 125 ஆவது ஜனன தினம்!

தந்தை செல்வாநாயகம் அவர்களின் 125 ஆவது ஜனன தினம் 18-11-2023 காலை 10:30 மணியளவொல் ஹட்டன் பழைய கிருஸ்ண பவன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் மலையக உரிமைக்காக போராடியவர்களுக்காக ஈகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டு மலையகத்திற்க்காக முதன்மை குரல் எழுப்பிய தந்தை செல்வநாயகம் அவர்களின் 125 ஆவது நினைவு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்பு உரை, தலைமை உரை என்பவற்றை தொடர்ந்து நினைவுரைகளை தந்தை செல்வா அவர்களது பேரனார் சா.செ.ச. இளங்கோ, மலையக பேராசிரியர் விஜயசந்திரன், மலையக மக்கள் முன்னணி தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், வடக்கு கிழக்கும் மலையகமும் எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கணபதி கனகராஜ் சமூக செயற்பாட்டாளரும் எழுத்தாளருமான இரா. சுப்பிரமணியம், மலையகமும் பெண்களும் எனும் தலைப்பில் திருமதி ஜீவா சதாசிவம் ஆகியோர் நினைவு பேருரைகளை நிகழ்த்தினர்.



இதில் மலையக தொழில் சங்கவாதிகள், சமூக ஆர்வலர்கள், அரசியல் பிரதிகள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பம்

20-11-2023

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் மீள 20-11-2023 அன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்டெம்பர் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டு செப்டெம்பர் 15 வரை அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தது.

இவ் அகழ்வுப் பணியில் 17 எலும்புக் கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையிலும், துப்பாக்கி சின்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்க தகடு, ஆடைகள் உள்ளிட்ட சான்று பொருட்களும் மீட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த அகழ்வு பணியானது இடைநிறுத்தி வைக்கப் பட்டு மீண்டும் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்படுமா என்ற ஐயம் பல்வேறு தரப்பினரிடமும் நிலவிய நிலையில் மீண்டும் 20-11-2023 காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அகழ்வு பணியானது முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க. வாசுதேவ, தடயவியல் பொலிசார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இறுதியாக அகழ்வு பணிகள் நிறைவடைந்ததும் பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகள், உடல் எச்சங்களுக்கு மேல் பகுதியில் காணப்பட்ட மண் போன்றவற்றை அகற்றும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதேவேளை தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் அகழ்வு இடத்திற்கு வருகை தர தாமதம் நிலவி வருவதாக தகவல்கள் தெரியவருகின்றது.

குறித்த சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் தற்பரன் ஆகியோர் குறித்த இடத்தை பார்வையிட்டனர்.

இதேவேளை, சட்டத்தரணிகளான வி.எஸ். நிறஞ்சன், கு. ஆன்சுமங்கலா மற்றும் கொக்குளாய் பொலிஸ் நிலைய பொலிஸார், தடயவியல் பொலிஸ் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்டோரும் தரப்பினர் இடத்தை பார்வையிட்டு கலந்துரையாடியதன் பின்னர் குறித்த அகழ்வு பணியானது ஆரம்பமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.



# யாழ். இளைஞரின் மரணம் இயற்கையானது அல்ல – மருத்துவ அறிக்கை வெளியானது



(20-11-2023)

சித்தங்கேணியில் உயிரிழந்த இளைஞனின் மரணம் தொடர்பான சட்ட மருத்துவ அறிக்கை வெளியாகியுள்ளது.

இந்நிலையில் உடல் முழுவதும் அடிகாயங்கள், இயற்கையான மரணம் இல்லை, உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் இன்று நண்பகல் உடற்கூறு பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்ட நிலையில் இந்த அறிக்கையிடப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்ற உத்தரவில் கட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரே நேற்றைய தினம் உயிரிழந்தார்.

சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (25) என்பவரே உயிரிழந்தார். சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த 8ஆம் திகதி திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரும் நான்கு நாட்களாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்படவுமில்லை விடுவிக்கப்படவும் இல்லை என்பதால் உறவினர்கள் அச்சமடைந்தனர்.

தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார். அதனால் சந்தேக நபர்கள் கடந்த 10ஆம் திகதி மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் ஆட்சேபனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறைக்கவாலரின் காவலுடன் உயிரிந்த சந்தேக நபர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறு பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சவ அறையில் வைக்கப்பட்டிருந்தது. உடற்கூறு பரிசோதனையின் பின்னரே உயிழப்புக்கான காரணம் வெளியிடப்பட்டுள்ளது.

உயிரிழந்த இளைஞன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது, தனக்கு நடந்த சித்திரவதை தொடர்பாக பேசிய காணொளி சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

இந்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது டன், பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு பலத்தப்பட்டுள்ளது.





# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு விசேட அதிரடிப் படை பாதுகாப்பு!





வட்டுக்கோட்டை பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நிலையில் உயிரிழந்த நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன் நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

அவர் உயிரிழக்க முன்னர் வழங்கிய மரண வாக்குமூலத்தில் பொலிஸார் செய்த பல சித்திரவதைகள் அம்பலமாகின.

இந்நிலையில் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு கருதி சுன்னாகம், மானிப்பாய், இளாவாலை, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் இருந்து நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளதுடன் விசேட அதிரடிப் படையினரும் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது.

உயிரிழந்த இளைஞனுக்கு நீதி வழங்காமல் கண்துடைப்பாக சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வெறுமனே இடமாற்றம் வழங்கிவிட்டு பொலிஸார் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

# நாகராசா அலெக்ஸ்: ஒரு மரணம்–பல மர்மங்கள்

## (கனடா உதயனின் சிறப்பு புலனாய்வுக் கட்டுரை)

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் பொலிசாரால் விசாரணைக்கென்று தமிழர் ஒருவர் அழைத்துச் செல்லப்பட்டால், அவர் உயிருடன் வீடு திரும்புவது என்பது நாளுக்கு நாள் கேள்விக்குறியாக மாறி வருகிறது. வீடு திரும்புவதோ அல்லது இறைவனிடம் திரும்புவதோ கைது செய்யப்படுபவரின் கையில் இல்லை என்கிற அச்சம் நாளுக்கு நாள் மேலோங்கி வருகிறது. அதுவே வட்டுகோட்டைப் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவருக்கு இப்போது நேர்ந்துள்ளது. துரதிஷ்டவசமாக அவர் வீடு திரும்பவில்லை. உயிரோடு பொலிசாருடன் சென்றவர் உடலாக வீடு திரும்பியுள்ளது யாழ்ப்பாணத்தில் பெரும் கவலைகளை ஏற்படுத்தி, அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது.

இப்போது, பொலிசாரின் இரு விசேட அணிகள், மனித உரிமை ஆணைக் குழு மற்றும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் துருவித் துருவி ஆராயும் விடயமாக நாகராசா அலெக்ஸ்சின் மரணம் அல்லது கொலை என்று அவர்களது குடும்பம் மற்றும் மற்றவர்களால் கூறப்படும் விடயம் மாறியுள்ளது.

யாழ்ப்பாணம் சித்தங்கேணி வடக்கம்பரைப் பகுதியில் ஓர் வீட்டில் 16 பவுன் நகை மற்றும் 90 ஆயிரம் ரூபா களவுபோன விடயத்தில் சந்தேகத்தின் பெயரிலேயே அலெக்ஸ் கைது செய்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதில் முதல் மர்மம் இந்த களவு தொடர்பில் எவ்வளவு பேர் ஈடுபட்டிருந்தனர் என்பதாகும். அதிலேயே மர்மம் நீடிக்கிறது.

முதலில் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர் கூறியதன் அடிப்படையிலேயே மற்றொருவர் கைது செய்யப்பட்டதாகவே பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது.

கடந்த 2023-11-08 ஆம் திகதி நாகராசா அலெக்ஸ் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்து பொலிஸ் நிலையம் அல்லாத ஓர் தனியான இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதிலும் ஒரு மர்மல் நிலவுகிறது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் ஏன் பொலிஸ் நிலையம் அல்லாத ஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட வேண்டும்?

அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் உள்ள ஓர் நீர்தொட்டியுடன் கூடியதான அறை எனப்படுகின்றது. அதுவும் அந்த இடம் தனியாருக்கு சொந்தமானது என்று கூறப்படுகிறது. இந்த இடம் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதிலும் மர்மம் விலகவில்லை.

அவ்விருவரும் அந்த இடத்திலேயே இம்மாதம் 8 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரையில் தடுத்து வைக்கப்பட்டு சத்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று நம்பத்தகுந்த செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளானோரை 2023-11-11 கைது செய்ததாக பதிவு பொலிஸ் பதிவேட்டில் பதிவு செய்து 2023-11-12 ஆம் திகதி அன்று பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்துவதற்காக முதலில் அதேதினமான 2023-11-12 ஆம் திகதி தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரியிடம் வட்டுக்கோட்டைப் பொலிசார் கொண்டு சென்றுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்ட தினம் எது என்பதிலும் மர்மம் நீடிக்கிறது.

தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரி சந்தேக நபரின் உடலில் வெளித் தெரியும் காயத்தை குறிப்பிட்டு வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு எழுதியுள்ளார். அதன் பின்பு நீதவான் முன்னலையில் ஆஜர் செய்தபோது நீதவான் தடுப்புக் காவலிற்கு அனுமதி வழங்கியதோடு உடன் வைத்தியசாலையில் அனுமதிக்குமாறும் கட்டளையிட்டுள்ளார்.

இதன்பெயரில் 2023-11-12 அன்றே யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 28ஆம் விடுதியில் நாகராசா அலெக்ஸ் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் மருத்துவரினால் கை நரம்புகள் சேதமடைந்துள்ளதாக எழுதப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. அவரது கை நரம்புகள் எப்படி, ஏன் சேதமடைந்தது என்பதும் மர்மமே.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 2023-11-12 அனுமதிக்கப்பட்ட நாகராசா அலெக்ஸ் மற்றும் அவருடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மற்றொருவரும் 2023-11-16 அன்று போதனா வைத்தியசாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு சிறைச்சாலை அதிகாரிகள் அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைத்துள்ளனர். மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்படும் அளவிற்கு அவர்கள் பூரண குணமடைந்துவிட்டார்களா என்பதும் மர்மமாகவே உள்ளது.

2023-11-16 அன்று வைத்தியசாலையில் இருந்து வெளியேறி சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் 2023-11-18 அன்று மாலையில் சிறையிலே தனக்கு இயாலாமல் உள்ளது என்ற தகவலை தெரிவித்தபோது சிறைச்சாலை மருத்துவர் பார்வையிட்டுள்ளார். சிறை திரும்பிய இரு நாட்களில் ஏன் அல்லது எப்படி உடல்நிலை மோசமடைந்தது? அதுவும் மர்மமே.




2013-11-19 ஆம் திகதி காலை நாகராசா அலெக்ஸிற்கு சிறைச்சாலையில் நோய் அதிகரித்ததன் காரணமாக மீண்டும் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் இருந்தபோதும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் முன்னரே அவரது உயிர் பிரிந்துள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். அவர் முதல் நாளே உடல்நிலை சரியில்லை என்று கூறிய நிலையில், அவர் உரிய நேரத்தில் யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாரா, அதற்கு முன்னர் சிறைச்சாலை வைத்தியர் வந்து கவனித்தாரா, அவருக்கு உடல்நலப் பிரச்சனைகள் இருந்தால், ஏன் முன்னதாக அவர் மருத்துவமனையிலிருந்து மீண்டும் சிறைச்சாலைக்கு திருப்பி அழைத்துவரப் பட்டார் என்பதால் விளக்கப்பட வேண்டிய மர்மங்களின் பகுதியாகவே உள்ளது. வைத்தியசாலைக்கு அவர் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அவரது உடலில் இருந்து உயிர் பிரிந்துள்ளதாகவே வைத்தியசாலைத் தரப்பு தெரிவிக்கின்றது.

இதனிடையே உயிரிழந்த இளைஞனையும் அவருடன் இருந்த மற்றையவரும் வட்டுக்கோட்டைப் பொலிசாரின் தடுப்பில் இருந்த சமயம் ஓர் ஆயுள்வேத வைத்தியரிடம் அழைத்துச் சென்றதாக தற்போது கண்டறியப்படுகின்றது. அதற்கு முறையாக குடும்பத்தார் மற்றும் அலோபதி மருத்துவர்களிடம் ஆலோசிக்கப்பட்டதா? மர்மம் நீடிக்கிறது.

பொலிஸ் காவலில் மரணமடைந்த அல்லது கொலை செய்யபட்ட நாகராசா அலெக்ஸை பொலிசார் 2023-11-08 ஆம் திகதி அழைத்துச் சென்றபோதும் 11 ஆம் திகதியென பொலிசாரின் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தாலும் 2023-11-08 அன்றே பிடித்துச் சென்றமைக்கான சி.சி.ரி கமராவின் வீடியோ ஆதாரங்களை தற்போது இரு விசாரணைப் பிரிவி-னர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு என்பன எடுத்துச் சென்றுள்ளனர். அறிவியல் ரீதியான ஆதாரம் இப்போது சிக்கியுள்ள நிலையில், பொலிசார் எப்படி அவர்கள் இருவரும் 11ஆம் திகதி தான் பிடித்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்படுவதில் என்ன மர்மப் பின்னணி உள்ளது?

இதேநேரம் உயிரிழந்த இளைஞனின் உடலை உடற்கூறு ஆய்வு செய்த சட்ட வைத்திய நிபுணர் இது ஓர் இயற்கை மரணம் அல்ல என்று தனது ஆய்வறிக்கையில் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். தனது உடற்கூறாய்வு அறிக்கையில் மரணமடைந்த அலெக்ஸின் உடலில் பட இடங்களில் அடிகாயங்கள் இருந்தன என்றும் தெளிவாக எழுதியுள்ளார். எனினும் இந்த மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறும் என்றும் கூறியுள்ளார். அவரது உடற்பாகங்கள் மேலதிக ஆய்விற்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு மர்மங்களுக்கு மத்தியில் அந்த இளைஞனை கொண்டு சென்று சித்திரவதை மேற்கொண்டதான குற்றச்சாட்டுடனும் 4 பொலிசாரின் விபரங்கள் பிரஸ்தாபக்கப்படும் நிலையில் இளைஞனின் மரணம் கொலையென வழக்கிடப்படுமா இல்லையா எனபதே தற்போதுள்ள கேள்வியாகவுள்ளதனால் நீதிமன்றின் இடைக்கால கட்டளை பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த மரணம் தொடர்பிலான மர்ம முடிச்சுக்கள் அவிழும் போது அது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இந்த மரணம் அல்லது கொலை குறித்த புலனாய்வு அடுத்த வாரமும் தொடரும்....

## கடந்தவையும் கடப்பவையும் - (77)

**இடம் காட்டும் 'தடம்காட்டி' வருவதன்முன்**
**போகுமிட்டம் தெரிந்தவர் பின்தொடர்ந்தே**

**தெரியாத இடத்தைத் தெரிந்திடுவர்**
**புதிதாக எங்கேனும் போகவேண்டியவர்**

**நெடுஞ்சாலையில் புகுந்துவிட்டால் தொடுசாலை - வண்டிகள்**
**இடைஞ்சலாய் வந்துவிடும் இடையிடையே**

**பாதைகாட்டும் வண்டியை கண்ணாலே காணும்வரை**
**பாதையெதுவெனப் பார்க்காது கண்கள் - அவை**

**தேடுவதெல்லாம் வழிகாட்ட வந்த வண்டியையே - அதுபோல**
**ஆலயம் தொழவே வந்தபோதும் - அங்கு**

**கூடிநிற்கும் கூட்ட நெருக்கடிக்குள் - எங்கேனும்**
**மாறிவிடுவோமோ என்ற மனப்பயத்தால்**

**முன்னுக்குப் போபவரின் பின்னுக்கே - வைத்த**
**கண்வாங்காது பின்தொடரும் பிள்ளைகள்**

**வேங்கை நகர் வேலனின் வடிவழகை**
**எங்குநின்றும் பார்க்காது தள்ளுப்பட்டே செல்லுகிறார்**

**தண்டாயுதபாணிக்கு முன்னாலும்கூட - அன்று**
**என்னாளும் இல்லாத சனக்கூட்டம் - அங்கு**

**அடுக்கடுக்காய் படிகள் கொண்ட அழகிய கேணி கூட**
**அடைக்கப்பட்டு இருக்கிறது கம்பிகளால்**

**திறந்திருந்த காலத்துத் தீர்த்தத் திருவிழாவை**
**மறந்திட முடியாது வாழ்நாளில் என நினைத்தவாறு**

**அரோகரா ஒலியெழுப்பும் கூட்டத்துள் நின்றபோது**
**விரைவாக நகர்த்தப்பட்டோம் வெளியாலே - உள்**

**ஆலயத்தின் அழகைக் காண்பதற்கும் - கருவறை**
**வேலனை ஆறுதலாய் வணங்குதற்கும்**

**ஒருரூபா பற்றிச்சீட்டில் உள்ளிருக்கும் சுவாமிகளுக்கு**
**திருப்தியாக அர்ச்சனை செய்வதற்கும்**
**விரும்பிடினும் - இவற்றிற்குத்**

**தகுந்தநாள் இன்றில்லை என உணர்ந்தவராய் - வெளியில்**
**இருப்பதற்கு உகந்ததாய் ஒரு இடத்தைத் தேடுகிறோம்**

**சனக்கூட்டம் இல்லாத இடமொன்று**
**வடக்கு வீதியில் இருந்தபோதும் - நல்ல**

**சொற்பொழிவு நடக்குமிடம் இழுக்கிறது - அங்கு**
**எத்தனை காலத்தின் பின் அப்படி ஒருவாய்ப்பு**

**முன்னரெல்லாம் பட்டிமன்றம் பார்க்கவென**
**பக்கத்து ஊர்களில் இருந்தெல்லாம் படையெடுத்து வந்தவர்கள் - இப்போ**

**வெளிநாடுகளில் இருந்தெல்லாம் வந்துள்ளனர் - வந்தவர்கள்**
**தெரிந்தவர் ஆரேனும் இருக்கிறாரா என்றேதான் தேடுகிறார் - அப்படி**

**அதற்கிடையில் அடுத்தடுத்து எத்தனைபேர்**
**தெரிந்தவர் எனச்சொல்லி நெடுநேரம் பேசுகிறார்**

**பெருவிழாக் காணவென விடுப்பெடுத்து வந்தவரும்**
**திரும்பிச்செல்ல விருப்பமில்லை என்கிறார் - இன்னொருவர்**

**முன்னைய காலத்துத் தொண்டன் போலும்**
**என்னவாய்ச் சொல்லுகிறார் நல்லையூரான் பெருமைகளை**

**புலம்பெயர் நாடொன்றில் படும்பாடு என புலம்புபவராயும் ஒருவர்**

**புலம்பெயர் நாட்டிற்குப் புதிதாகப் போவதற்குத் துடிப்பவராய் இன்னொருவர் என**

**பலரகத்து மக்களையும் சந்தித்த மகிழ்வோடு இருந்த வேளை**
**ஒரு அழைப்பு வருகிறது திருமணமாம் என்றவாறு...**

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# Sri Lanka Police Given a Dressing Down by Supreme Court in Ramzy Razik Case

By Siva Parameswaran

The Supreme Court of Sri Lanka has ruled the imprisonment of a Muslim writer as unlawful and ordered the government to pay him a compensation of one million LKR.

A bench of three judges ruled the fundamental rights of Ramzy Razik was violated by the state by misusing an Act aimed at promoting unity.

Ramzy Razik was arrested by the Criminal Investigation Department (CID) of the Sri Lanka Police on the 9th of April 2020 for a posting on Facebook published earlier that month suggesting an "ideological jihad" (ideological struggle) with a pen and keyboard to put an end to racism that oppresses the Muslim community in Sri Lanka.

In another post two days later, Razik expressed fears about the numerous death threats he received following his post and said his post about the oppression of the Muslim community was 'misinterpreted' accusing him of spreading racist ideas.

Those who allegedly threatened him apparently called for his arrest.

His post on Facebook was during the Covid-19 pandemic when the Gotabaya Rajapaksha regime ordered the bodies of Muslims who died due to the virus attack to be cremated which is against the Muslim belief of burying the dead.

He was detained for over five months before being granted bail.

In their ruling the Supreme Court Judges observed section 3 of the International Covenant on Civil and Political Rights (ICCPR) should not be understood as criminalizing blasphemy.

While ruling the arrest and detention of Ramzy as illegal and ordering compensation, the judges ruled the Chief Inspector of the CID inspector B.M.A.S.K. Senaratne, and former CID director W. Thilakaratne to pay compensation from their personal funds.

The judges in their judgment have strongly emphasized the importance of human rights which includes freedom of speech and expression.

Writing the judgment on behalf of the bench comprising of Justices B.P. Aluwihare and Janak De Siva, Justice Yasantha Kodagoda noted:

"I see nothing inflammatory or obnoxious to the law and in particular any attempt to incite the feelings of either the Muslim community or any other community or incite others to perpetrate violence, particularly because the term 'Jihad' had been prefaced by the term 'ideological' coupled with the weapons the virtual petitioner called upon others to use, namely the 'pen and the keyboard".

In his order which was agreed by his brother judges, Justice Yasantha Kodagoda came down heavily on the actions of government servants and the responsibility of the state.

"The responsibility of the state arises out of the fact that the state shall be responsible for the actions of all the actions of its servants committed using the colour of their office unless it is established that the state had taken all necessary measures to prevent the infringement in issue".

The unanimous judgment warned police officers to exercise great caution while arresting persons and subjecting them to criminal justice measures.

"Police officers must bear in mind the fact that arrest, initiation of criminal proceedings and causing a suspect to be placed in remand custody are by themselves criminal justice measures which have a penal character and a direct bearing on the liberty of persons. The adoption and enforcement of such measures in a manner that infringes the fundamental rights of persons can have a chilling effect on other persons too, who wish to enjoy the exercise of their inalienable fundamental rights. Therefore, such criminal justice measures must be carried out with due diligence, independently, objectively, with great caution, and strictly in the manner provided by law".

Earlier the Colombo High Court while granting him bail after 161 days being incarcerated under the ICCPR strongly observed that the laws of a country are designed to protect the right of individuals to freedom of expression.

Ramzy Razik was arrested from his home in Katugastoda, Plgasdeniya on the 9th of April 2020.

His arrest was strongly condemned by Human Rights organizations within and outside Sri Lanka.

The Human Rights Commission of Sri Lanka also expressed its disapproval of his detention saying the police acted "without proper legal clarity and in a discriminatory manner.

Sri Lanka's misuse of the ICCPR Act has come under severe criticism from international bodies including the UN on numerous occasions.

# Sri Lanka's Economic Crisis Far From Over Warns World Bank

"Sri Lanka's path to recovery remains narrow with limited fiscal and external buffers" the World Bank has warned in its recent report on the economic outlook of the island nation.

Although pointing out the economy of Sri Lanka has shown initial signs of stabilization, in spite of a low-level equilibrium, with moderating inflation, easing foreign exchange liquidity pressure, and progress in debt restructuring, a successful debt restructuring and continued implementation of structural reforms are vital the report has emphasized.

The World Bank has pointed out the longstanding structural weakness which was elevated by several shocks and ultimately plunged the country into an economic crisis.

"Poor governance, a restrictive trade regime, a weak investment climate, episodes of loose monetary policy and an administrated exchange rate contributed to macro-economic imbalances".

The fiscal indiscipline has also come in for criticism from the World Bank.

"Fiscal indiscipline led to high fiscal deficits and large gross financing needs, which, together with risky commercial borrowing, elevated debt vulnerabilities".

Lack of financial vision and the fiscal mismanagement of the Gotabaya Rajapaksha government too led to the serious economic crisis in Sri Lanka points out the report.

"Ill-timed tax cuts in 2019 further eroded weak fiscal buffers and led to a rapid growth in debt to unsustainable levels".

Gotabaya Rajapaksha in his 2019 election campaigned for tax cuts. Securing a big victory over his opponent and present leader of the opposition Sajith Premadasa by close to 1.5 million votes, Gotabaya Rajapaksha started implementing his election promise.

And, that lack of far-sightedness on fiscal management coupled with batting for organic farming without any detailed study or the plan for a phased introduction of natural fertilizers the country's agriculture output took a big hit, and the cost of food went skyrocketing with increased food insecurity.

As promised during his campaign immediately after being elected as President Gotabaya Rajapaksha started implementing tax cuts. As such the taxpayers number dropped by close to a million between 2020 and 2022.

The biggest change to the tax structure was the reduction of the Value Added Tax (VAT) from 15% to 8 %. Along with this, the 2% Nation Building Tax was abolished, while the Ports and Airport Development levy was reduced by 2.5%. Those taxes abolished included the Economic Service Surcharge among others.

Other popular measures introduced took a heavy toll on the country's economy and exacerbated the already struggling economy.

The financial mismanagement and tax cuts led Sri Lanka into losing access to international financial markets in 2020 and official reserves dropped precipitously thereafter, forex liquidity constraint which ultimately led to severe shortage of essential goods in 2022 the World Bank report notes.

This was followed by the external debt service suspension in April 2022, pending debt restructuring the report adds.

"Amid the crisis, half a million jobs were lost, food insecurity and malnutrition increased, poverty doubled and inequality widened".

Construction, manufacturing, real estate, and financial services suffered the most amid shrinking private credit, shortages of inputs, and supply chain disruptions, worsening the negative welfare impacts of income contractions and job losses registered in 2002, according to the statistics of the World Bank.

While noting the overall fiscal deficit increased in the first four months of 2023 has improved overall progressivity, the World Bank has expressed concern that indirect taxes and rising energy prices are placing a disproportionate burden on the poor and vulnerable.

"Unless mitigated with targeted measures, the removal of energy subsidies could lead to further poverty increases".

According to the World Bank report, in Sri Lanka, while recent macroeconomic performance has been better than expected, downside risks remain high, given the narrow path to recovery and limited buffers.

World Bank has also warned that local and international factors like political backlash due to the reforms and a sharper global slowdown are key risks in restoring stability and regaining sustainable growth and bringing Sri Lanka back to pre-crisis rates of poverty.

Meanwhile, the international rating agency Fitch has warned: "Sri Lanka's ambitious budget agenda faces high implementation risks".

In its outlook for Sri Lanka post the nation's budget, Fitch says the targets laid out in Sri Lanka for 2024 will be challenging to meet even with the economic recovery that is expected to continue next year.

"Fitch believes there are significant risks to the government's revenue goal for 2024. Sri Lanka has a record of fiscal slippage, and revenue collections fell 29% short of target in the first nine months in 2023".

The rating agency projects Sri Lanka's economic growth will be very modest in 2024.

"We think the presidential election in late 2024 will incentivise the government to keep its spending plans which include a 14% in spending on salaries and wages" Fitch pointed out in its latest analysis of the post-budget economic analysis for Sri Lanka.

## மாவீரர் நாள்
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

மாவீரர் என்போர் மரணத்தை வென்றோர்.
காவிய நாயகர் கடமையைச் செய்தோர்.
சாவினை நெஞ்சிற் சரமாய்ச் சுமந்தோர்.
ஆவியை எமக்கு அளித்துச் சென்றோர்.
இளமைக் காலத்தை இனத்துக்காய்த் துறந்தோர்.
அழகான வாழ்வை அர்ப்பணம் செய்தோர்.
களமாடி எமக்காய்க் களத்தில் வீழ்ந்தோர்.
வளமான எதிர்காலம் விதையாய்த் தந்தோர்.
தலைவனின் ஆணையை தலைமேல் சுமந்தோர்.
விலையிலா உயிரை வீரமாய்த் துறந்தோர்.
அலைபோல் வந்த அன்னியர் எதிர்த்தோர்.
மலைபோல் நின்று மறித்து அழித்தோர்.
சாதிக்காய்த் துடிக்காமல் சாதிக்கத் துடித்தோர்.
சாதிப்ப தொன்றையே சபதமாய் ஏற்றோர்.
ஆதிக்க அரக்கரை அடியோடு அழித்தோர்.
பாதிப்பு மறந்து புலியாய்ப் பாய்ந்தோர்.
தாயகம் காக்க தானையாய்ச் சென்றோர்.
மாயன் செல்லில் மாண்டு வீழ்ந்தோர்.
தாயவள் பெருமையைத் தரணியிற் பொறித்தோர்.
தூய வாழ்வைத் தந்து சென்றோர்.
விண்ணை நோக்கி விரைந்த போதும்
மண்ணில் நாங்கள் மறப்போமா? உம்மை
கண்ணில் கண்ணீர் கசிந்து வந்தாலும்
அண்டம் முழுவதும் அகல்விளக்(கு) கேற்றுவோமே!

மாயன் – – – – – – வஞ்சகன்

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

Tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...


பனை வெல்லம்


தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்


சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# ERAA PLAZA
5928 FINCH AVE EAST
SCARBOROUGH, M1B5P8
(647) 295-9299

value mobile

NEW TO CANADA?
COME SEE US TODAY FOR AMAZING DEALS ON PHONE & PLANS!

5G
ROGERS INFINITE

$42
PLUS TAX
PER MONTH

தமிழில் உரையாடி உங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

# 30GB DATA

UNLIMITED CANADA-WIDE WITH US CALLING
UNLIMITED CANADA & US TEXT & VIDEO MESSAGING
BRING YOUR OWN DEVICE OR GET A PHONE FROM US

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பொலிஸார்!

வட்டுக்கோட்டை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் பொலிஸ் உத்தியோகத்தர் இருவருக்கு வெறுமனே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு பல பொலிஸ் நிலையங்களில் இருந்து பொலிஸ் உத்தியோகத்தர்களை வரவழைத்தும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை வரவழைத்தும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட பொலிஸார் வீதி மறியல்களை போட்டு பயணிகளின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்துள்ளனர்.

குறித்த வீதியானது 785 வழித்தட பேருந்தின் பிரதான வீதியாக காணப்படுகிறது. இந்நிலையில் போக்குவரத்துக்கு பொலிஸார் இடையூறாக செயற்பட்டு வருகிறனர்.





# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டும் — அங்கஜன் MP சீற்றம்

மனித உரிமைகளை மதிக்காது மிருகத்தனமாக செயற்பட்ட யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலால் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படும் நிலையில் அது தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் தனது அறிக்கையில், சித்தங்கேணியைச் சேர்ந்த 26 வயதான நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறுவது இதுவே முதல் தடவை அல்ல. ஆனால் இதுவே இறுதிச் சம்பவமாக இருக்க வேண்டும்.

சந்தேக நபர்களை தாக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை. இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உண்டு. ஆனால் இங்கு பொலிஸார் சந்தேக நபர்களை வலுக்கட்டாயமாக குற்றவாளிகளாக்கி விடுகின்றார்கள்.

சந்தேக நபர்களை மனிதராக மதிப்பதுமில்லை. மனித உரிமைகளை மதிக்கத் தெரியாத பொலிஸார் எந்தத் தருணத்திலும் பொலிஸாராக இருக்கத் தகுதியற்றவர்கள்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் கைது செய்த இளைஞனை பொலிஸ் காவலரணில் வெளிப்படையாக காட்சிப்படுத்தவில்லை, இளைஞனின் குடும்பத்தாரிடம் இளைஞனை வெளிப்படுத்தவில்லை, எல்லாவற்றுக்கும் மேலாக 24 மணித்தியாளத்திற்குள் நீதிமன்றில் முற்படுத்த வேண்டிய சந்தேக நபரை நான்கு தினங்கள் பிரத்தியேக மறைவிடம் ஒன்றில் வைத்து உணவு கொடுக்காது மிருகத்தனமாக தாக்கியுள்ளனர்.

இளைஞனது மரணத்திற்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சகல பொலிஸாரும் பொறுப்புக் கூற வேண்டும். உடனடியாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இளைஞனது மரணத்துடன் தொடர்புபட்ட பொலிஸார் அனைவரது பதவிகளும் பறிக்கப்பட்டு - கைது செய்யப்பட்டு பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெற்று தண்டனை வழங்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் சந்தேக நபர்களை மறைத்து வைத்து தாக்கி தமது வாக்குமூலங்களை திணிப்பதற்கான பிரத்தியேக இடங்கள் இருப்பதனை அறிய முடிகிறது.

மனித உரிமைகளை பேணும் நிறுவனங்கள் பலவும் செயற்பட்டு வரும் நிலையில் பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. உயிரிழந்த இளைஞனது குடும்பத்திற்கு நீதி கிடைக்க வேண்டிய அதேநேரம் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதனையும் உறுதி செய்ய வேண்டும் என மேலும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# சித்தங்கேணியைச் சேர்ந்த அலெக்ஸ் என்ற இளைஞனின் சடலம் பொலிஸ் பாதுகாப்புடன் வீடு வந்து சேர்ந்தது



வட்டுக்கோட்டை பொலிஸாரின் கொடூர தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த அலெக்ஸ் என்ற இளைஞனின் மரணம் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் குறித்த இளைஞனின் சடலமானது பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வீடு வந்து சேர்ந்தது.

பொலிஸார் 785 வழித்தட வீதியை முற்றாக வீதித்தடை மூலம் பயணிகளின் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறு விளைவித்தனர். இதனால் பயணிகள் சுற்றுப்பாதையை பயன்படுத்தி மிகவும் கடினத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொண்டனர்.

5 பொலிஸ் நிலையங்களில் இருந்து நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடமையில் அமர்த்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையிலும் வீதியால் செல்பவர்கள் வட்டுக்கோட்டை பொலிஸாரை கேவலமாக திட்டி விட்டு, எச்சில் உமிழ்ந்து விட்டு செல்வதை அங்கு அவதானிக்க முடிந்தது.







# அகில இலங்கை தேசிய மட்டத்திலானா பரத நாட்டிய நடனப் போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி மாணவிகள் முதலிடம்

அனுராதபுரத்தில் 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்டத்திலான பெண்களுக்கான தேயிலை கொழுந்து நடனப் போட்டியில் வட்டு இந்து கல்லூரி மாணவிகள் முதலாவது இடத்தை பெற்றுள்ளது அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கிறது. இவர்கள் வலய மட்டம், மாவட்ட, மாகாண மட்டங்களில் தெரிவாகி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவிகளை பல வகையிலும் ஊக்கமளித்து துணை புரிந்த நடன ஆசிரியர் திருமதி. சகிலா சுதாகரன், சங்கீத ஆசிரியர் திருமதி. நித்தியா தவக்குமார், விஞ்ஞான ஆசிரியர் திரு. சின்னப்பு சதீஸ், பக்கவாத்தியக் கலைஞர் திரு. லோ. நிமலன் மற்றும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலைச் சமுகத்தினர் அனைவருக்கும் பாடசாலை சமூகத்தினர் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இத்தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கான போக்குவரத்து மற்றும் அனைத்து செலவீனங்களுக்குமான நிதி உதவிகளை கலாநிதி திரு. இ. நித்தியானந்தன் (Ratnam Foundation, U.K) அவர்கள் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நாளை ஆரம்பம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் கார்த்திகை வாசம் என்ற பெயரில் நடாத்தி வரும் மலர்க்கண்காட்சி இம் முறையும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் (கிட்டு பூங்கா) நடைபெறவுள்ளது. இக் கண்காட்சி நடைபெறும் மலர் முற்றம் காட்சித்திடல் புதன்கிழமை (22.11.2023) பிற்பகல் 2.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் (கிட்டுப் பூங்கா) திறந்துவைக்கப்படவுள்ளது. கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இத் தொடக்க நிகழ்ச்சியில் சிறப்புரைஞர்களாக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், சமூக அரசியற் செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடாத்தும் இக் கண்காட்சி இம் மாதம் 30ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம் முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸாரினால் கொலை செய்யப்பட்ட சித்தங்கேணி இளைஞன் விவகாரம் — பேர்ள் அமைப்பு கவலை

இலங்கையில் காணப்படும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாச்சாரம் முடிவிற்கு கொண்டுவரப்படும் வரை தமிழ் மக்களிற்கான சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கிய ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு சாத்தியமாகும் வரை நிலையான அமைதியோ உறுதித்தன்மையே காணப்படாது என்பதை வட்டுக்கோட்டை இளைஞர் அலெக்சின் மரணம் மீண்டும் உணர்த்தியுள்ளதாக சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் அமைப்பான பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

நாகராஜா அலெக்ஸ் உயிரிழப்பதற்கு முன்னர் தாம் காவல்துறையினரின் பிடியில் அனுபவித்த ஈவிரக்கமற்ற சித்திரவதைகள் குறித்து தெரிவித்த காணொளி சமுக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், சிறிலங்கா அரசாங்கத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் தவறியுள்ளதன் காரணமாக அலெக்சின் மரணம் நிகழ்ந்துள்ளதாக பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழர்களிற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் தொடர்ந்து இழைக்கப்படும் குற்றங்களிற்கு நீதியை வழங்கப்போவதில்லை மற்றும் பொறுப்புக்கூறலில் ஈடுபடப்போவதில்லை என்பதை வெளிப்படுத்துவதில் இலங்கை வலுவான அரசியல் உறுதிப்பாட்டை மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வருவதாக பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.


PEARL Action
@PEARL_Action
Follow

A 25-year-old Tamil man, Nagarasa Alex, described the brutal torture he endured at the hands of the Vaddukoddai Police, hours before he was killed in custody.
The government's first action has been to deploy the Special Task Force (STF), which itself has allegedly commited a wide range of human rights violatons, to provide security to the police station.



# "தாங்கள் தாக்கவில்லை என தாக்குதலுக்கு உள்ளான இளைஞனின் உறவினர்களிடம் கடிதம் கேட்டு மிரட்டிய பொலிஸார்"

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர்தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர்சுகாஷ் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

சட்டவிரோதமாக பொலிஸாரால் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. காட்டுமிராண்டித்தனமான கொலை ஒன்று அரங்கேறியிருப்பதை என்னால் உணர முடிகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் நிலவரங்களை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்த இளைஞனையும் அவரது நண்பரையும் பொலிசார் காரணமில்லாமல் கைது செய்து சட்டத்திற்கு முரணாக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தாக்குதல் நடாத்தியிருக்கிறார்கள்.


அவர்களுக்கு உரிய முறையில் வைத்திய சிகிச்சைகள் அளிக்கப்படவில்லை. பின்னர் இந்த விடயங்களை வெளியே சொல்ல வேண்டாம் என அச்சுறுத்தி உள்ளார்கள். அது மாத்திரமில்லாமல் அந்த அச்சுறுத்தலின் விளைவாக தற்போது இளைஞனின் உயிர் பறிக்கப்பட்டிருக்கின்றது.

அவரோடு கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞரும் சிறைச்சாலையில் இருக்கின்றார். அவருக்கும் காயங்கள் காணப்படுகிறது. அவரது குடும்பத்திடம் சென்று பொலிசார் தாங்கள் அவரை தாக்கவில்லை என கடிதம் தருமாறு அச்சுறுத்தியிருக்கின்றார்கள்.

இந்த விடயங்களை நாங்கள் நாளைய தினம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர இருக்கின்றோம். இந்த இடத்தில் பாரிய ஒரு அச்சுறுத்தல் நிலவுகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பாரிய ஒரு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுகிறது.

இங்கே குற்றம் இழைத்ததும் பொலிசார். அந்த குற்றத்தை விசாரிக்க போவதும் அதே பொலிசார். ஊடகங்கள் இந்த வழக்கிற்கு முழுமையான ஆதரவை தர வேண்டும். அல்லது இந்த வழக்கின் உண்மைகள் குழி தோண்டி புதைக்கப்படலாம் - என்றார்.

# ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கொண்டு செல்லப்படவுள்ள அலெக்ஸின் மரணம் தொடர்பான முறைப்பாடு!




அலெக்சின் மரணத்திற்கு காரணமாக இருந்த பொலிசாருக்கு உடனடியாக உரிய தண்டனை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காது போனால் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு இவ்விடயத்தை உடனடியாக அறியப்படுத்தி, மேலதிக நடடிவக்கைகளை துரிதப்படுத்தி கொலையாளிகளுக்கு எதிராக உரிய நடடிவக்கைகளை எடுப்போம் என ஐரோப்பா வாழ் சித்தங்கேணி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த இளைஞனின் மரணம் குறித்தான கண்ணீர் அஞ்சலி மற்றும் கண்டன அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சித்தங்கேணியைச் சேர்ந்த அமரர் நாகராசா அலெக்ஸின் பிரிவால் மீளாத் துயரில் உறைந்திருக்கும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பொலிசாரின் சித்திரவதையால் பலியான எங்கள் உயிர்தோழன் அலெக்சின் தீர்ப்பு என்ன? கொலை செய்த பொலிசாரின் இடமாற்றம் இவனின் உயிருக்கு ஈடாகுமா? சிறுநீரகம் செயலிழக்கும் நிலை வரும் வரைக்கும் கொடூர தாக்குதலை, கண்மூடித்தமான சித்திரவதையை செய்த பொலிஸாரின் அநீதியை தட்டிக் கேட்க எவரும் இல்லையா?

கொலை செய்யப்பட்ட எங்கள் ஊரைச் சேர்ந்த அலெக்சின் உயிரை மீட்டு தரமுடியுமா? கண் மூடித்தனமாக சித்திரவதை செய்த பொலிசாருக்கு என்ன தண்டனை? கொலை உண்ட எங்கள் ஊரைச் சேர்த்த அலெக்சின் வாக்குமூலத்தை கேட்ட பின்னரும் எதற்காக இந்த மௌனம்?

சட்டத்தை நிலை நாட்ட முடியாத இது என்ன நாடா? இல்லை சுடுகாடா?

அலெக்சின் மரணத்திற்கு காரணமான பொலிசாரை உடனடியாக சட்டதின் முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனை கொடுக்காத காரணம் தான் என்ன?

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இவ்விடயம் தெரியாமல் போனதா? இந்த கொடூரமான சம்பவத்திற்கும் அவருக்கும் சம்மந்தம் இல்லையா? உடனடியாக அவருக்கும் தண்டனை கொடுக்க ஏன் தாமதம்?

உண்மையான களவாளிகளை கண்டுபிடித்து எங்கள் அலெக்ஸ் நிரபராதி எனும் உண்மையினை அனைவருக்கும் அறியத்தர வேண்டும்.

மேலும் அலெக்சின் மரணத்திற்கு காரணமாக இருந்த பொலிசாருக்கு உடனடியாக உரிய தண்டனை கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்காது போனால் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு இவ்விடயத்தை உடனடியாக அறியப்படுத்தி, மேலதிக நடடிவக்கைகளை துரிதப்படுத்தி கொலையாளிகளுக்கு எதிராக உரிய நடடிவக்கைகளை எடுப்போம் - என்பதை உறுதியுடன் அறியத்தருகின்றோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.



# பொலிஸாரின் சித்திரவதையால் சாவடைந்த இளைஞனின் இறப்புக்கு நீதி தேவை — சிறீதரன் எம்.பி

இலங்கை செய்திகள் Sri Lanka News

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடந்த 2023.11.08 ஆம் திகதி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, கலைவாணி வீதி, சித்தன்கேணி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. நாகராசா அலெக்ஸ் என்னும் 26 வயது இளைஞன் பொலிஸாரின் அராஜகமான தாக்குதலால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் 2023.11.19 ஆம் திகதி உயிரிழந்துள்ளமை தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைப் பொலிஸ் மா அதிபருக்கு இன்றையதினம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பொலிசாரின் கைது நடவடிக்கையில் தொடங்கி, மரணம் நிகழ்ந்தது வரையான சம்பவங்களை வரிசைப்படுத்தி, இளைஞனின் சாவுக்கு நீதியை வலியுறுத்திக்கோரும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பப் பின்னணியைச் சேர்ந்த அப்பாவி இளைஞனான அலெக்ஸ், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த போதே வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும், சித்திரவதைகளாலும் உயிரிழந்துள்ளார். எனினும் இதுதொடர்பிலான விசாரணைப் பொறிமுறைகள் எவையும் இதுவரை முறையாகக் கைக்கொள்ளப்படாத நிலையில், விசாரணையின் தீவிரத் தன்மையையும், இறந்துபோன இளைஞனின் உறவுகளது கோபத்தையும் நீர்த்துப் போகச்செய்யும் வகையில், தாக்குதல் மேற்கொண்ட இரு பொலிசாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை அநியாயமாகக் கொல்லப்பட்ட ஒரு அப்பாவி உயிரின் பெறுமதியை மலினப்படுத்துவதோடு, பொலிஸ் அதிகாரத்தனத்தின் வெளிப்பாட்டை மிகக்கோரமானதாகவும் பதிவுசெய்திருக்கிறது.

எனவே இதுவிடயத்தில் தாங்கள் உயரிய கரிசனைகொண்டு, பொலிஸார் மீதான குற்றங்களை மறைத்து விசாரணையை மடைமாற்றும் வழக்கமானதும் நீதிக்குப்புறம்பானதுமான செயற்பாடுகளைத் தவிர்த்து, இறந்துபோன இளைஞனின் உயிரை எந்தப் பிரயத்தனங்களாலும் மீட்டெடுக்க முடியாத கையறு நிலையிலுள்ள அவ் இளைஞனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், உயிரிழந்த இளைஞனின் வாக்குமூலக் காணொலி, சட்ட மருத்துவ நிபுணரின் உடற்கூற்றாய்வு அறிக்கை என்பவற்றை சான்றாதாரங்களாகக் கொண்டு இக்கொலையோடு தொடர்புடைய குற்றவாளிகளை எந்தச் சமரசங்களுமற்றுத் தண்டிப்பதற்கும், இனியொருபோதும் இத்தகைய அசம்பாவிதங்கள் மீளநிகழாமையை உறுதி செய்வதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.



# கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ — து) மூளாயினது உலக நீரிழிவு தினக் கொண்டாட்டம்

உலக நீரிழிவு தினமானது மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் 19.11.2023 அன்று அவர்களது நீரிழிவு நிலையத்தில் திரு. அ. நித்தியானந்தமனுநீதி அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. மேலும் இந்த நிகழ்வில் திரு. கா. பார்த்தீபன், திரு. அ. கிருஸ்ணமூர்த்தி, திரு. செ. கெங்கதாரன், பேராசிரியர் வைத்திய கலாநிதி இ. சுரேந்திரகுமாரன், வைத்திய அத்தியட்சகர் (MS), வைத்திய கலாநிதி S. ஸ்ரீபவானந்தராஜா, வைத்தியப்பணிப்பாளர், Dr. N. ஜெயக்குமார், சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை, Dr. P.K. நவரட்ணராஜா, வைத்திய அதிகாரி, திரு. S. கிரிதரன், தாதியபரிபாலகர், செல்வி. கி. கயறூபி, தாதி மற்றும் ஏனைய தாதிகள், ஏனைய பணியாளர்கள் மற்றும் அவர்களின் நீரிழிவு மையத்தின் நோயாளிகளும் கலந்து கொண்டார்கள்.

திரு. அ. நித்தியானந்தமனுநீதி தலைமை உரையில் மூளாய் நீரிழிவு மையத்தினது சேவைகள் பற்றி கூறினார். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் வைத்திய கலாநிதி இ. சுரேந்திரகுமாரன் உரையில் தெற்றாநோய்களில் ஒன்றான நீரிழிவுநோயின் பரவல் இலங்கையில் 23% அதிகரித்துள்ளது எனவும் இந் நோயானது மனிதனின் கண், சிறுநீரகம், இதயம், நரம்பு மற்றும் கால் ஆகிய அங்கங்களை பாதிப்பதோடு அதன் அறிகுறிகளாக அதிக தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிக களைப்பு, அடிக்கடி பசி ஏற்படுதல், குணமாகாத காயங்கள், கண் பார்வை மங்கலாகுதல் மற்றும் கை, கால்களில் நடுக்கம் என்பன காணப்படுகிறது என்றும் அதனை தடுப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்ட உணவு பழக்கவழக்கங்கள், முறையான உடற்பயிற்சி, மருந்துகள், வைத்திய ஆலோசனைகள் மற்றும் மனோரீதியான ஆரோக்கியம் என்பன முக்கியமானது என கூறியது பயன்மிக்கது.

வைத்தியப்பணிப்பாளர், Dr. N. ஜெயக்குமார், Dr. P.K. நவரட்ணராஜா, திரு. S. கிரிதரன்இ செல்வி. கி. கயறூபி ஆகியோர்கள் அவர்களின் உரையில் நீரிழிவு நோயின் பாதிப்புகள் மற்றும் அதன் முகாமைத்துவம் பற்றி விளக்கி கூறினார்கள் அதனைத் தொடர்ந்து சபதம் எடுக்கும நிகழ்ச்சியில் பிராந்திய சுகாதார பணியகம் வெளியிட்ட ஆரோக்கிய சபதத்தை அனைவரும் எழுந்து நின்று கூறியது விழாவை சிறப்பித்தது மற்றும் நீரிழிவு மையத்தின் துண்டுபிரசுரம் (Leaflets) வழங்கப்பட்டது. அதில் உலக நீரிழிவு தினத் தை முன்னிட்டு கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாயினால் 10% விலைக்கழிவினை (HBA1C, Lipid profile, Serum Creatinine, U.M.A) வழங்கியது மிகையானது. நீரிழிவு நிலையமானது Ratnam Foundation (UK) யின் அனுசரனையுடன் 2005ம் ஆண்டு இருந்து நடைபெற்றுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



கனடிய செய்திகள்
Canadian News

## Ontario Announces Comprehensive Strategy to Boost Child Care Workforce and Protect Children

# ஒன்றாரியோ மாகாணத்தில் குழந்தை பராமரிப்பு பணியாளர்களை அதிகரிக்கவும் குழந்தைகளை பாதுகாக்கவும் விரிவான திட்டம் அறிமுகமாகின்றது



ஒன்ராறியோ அரசாங்கம் மாகாணத்தின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க மற்றும் விரிவான குழந்தை பராமரிப்பு பணியாளர் உத்தியை அறிமுகப்படுத்துகிறது என ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே அவர்கள் புதன்கிழமை அறிவித்தார்.

ஒன்றாரியோ மாகாணத்தில் இயங்கிவரும் பல்லின பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்கள் ஆகியோரோடு நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே இதனை அறிவித்தார்.

கனடா ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள ஆரம்பகால கற்றல் மற்றும் குழந்தை பராமரிப்பு ஒப்பந்தத்தின் மூலம் நிதியுதவியுடன், ஒன்ராறியோவின் இந்தத் திட்டம் பதிவுசெய்யப்பட்ட ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வியாளர்களுக்கு (RECEs) அதிகரித்த ஊதியம் மற்றும் தகுதிவாய்ந்த கல்வியாளர்களை இணைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களை தொடர்ச்சியாகத் தக்கவைத்துக்கொள்வதற்கான பல்முனை உத்தியை வழங்கும். எனது அவர் அறிவித்தார்.

அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்கள் அங்கு இந்த புதிய திட்டம் தொடர்பாக தனது கருத்துக்களை விபரித்தார்.

"ஒன்ராறியோ அரசாங்கம் குழந்தைகளின் பாதுகாப்பை மேலும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. சட்ட பூர்வமான அங்கீகாரத்தைப் பெற்ற அனைத்து குழந்தை பராமரிப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் ஜனவரி 1, 2024 க்குள் பாதுகாப்பான வருகை மற்றும் பணிநீக்கம் கொள்கையை செயல்படுத்த வேண்டும். இது உரிமம் பெற்ற குழந்தையிடம் குழந்தை வராமல் இருப்பதை உறுதி செய்வதற்கு வழிவகுக்கும்.. பராமரிப்பு திட்டம் அல்லது எதிர்பார்த்தபடி எடுக்கப்படவில்லை, ஒன்ராறியோவின் பொது நிதியுதவி பெறும் பாடசாலைகளில் இருக்கும் நெறிமுறைகளுக்கு ஏற்ப பெற்றோருக்குத் தெரிவிக்கப்படும். இது விதிவிலக்கான மற்றும் தடுக்கக்கூடிய நெருக்கடிகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் எனவும் நம்பப்படுகின்றது.

"ஒரு குழந்தையின் இழப்பானது அனைவருக்கு இதயத்தை உடைக்கும் சோகத்தை ஏற்படுத்தும் என்பதும் உண்மையே. எனவே தொடர்ந்து, குழந்தை பராமரிப்பில் எங்கள் பாடசாலைகளில் சிறு வகுப்புகளில் கற்கும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பொறுப்பும் கடமையும் எங்களிடம் உள்ளது" என்று கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் "ஒவ்வொரு நாளும், ஆரம்பக் குழந்தைப் பருவக் கல்வியாளர்கள் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் ஒன்றாரியோ கல்வி அமைச்சு எதிர்பார்க்கின்றது, அதனால்தான் குழந்தைப் பராமரிப்புப் பணியாளர்களைச் சேர்ப்பதற்கும் தக்கவைப்பதற்கும் எங்கள் அரசாங்கம் மிகவும் விரிவான பணியாளர் திட்டத்தை வெளியிட்டு வருகிறது. அதிகமான குழந்தை பராமரிக்கும் பணியாளர்களை பணியமர்த்துவதன் மூலம், பெற்றோருக்கான கட்டணத்தை குறைத்து, பெற்றோருக்கு சுமைகள் அற்ற மற்றும் பாதுகாப்பான குழந்தை பராமரிப்புக்கான அணுகலை அதிகரிப்பதற்கான எங்கள் திட்டத்தை எங்கள் ஒன்றாரியோ அரசாங்கம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவுள்ளது.

"நாடு முழுவதிலும் உள்ள குடும்பங்களுக்கு ஆரம்பகால கற்றல் மற்றும் குழந்தை பராமரிப்பு முறையை உருவாக்குவதில் நாங்கள் வெற்றிபெற வேண்டுமானால், எங்களுக்கு நன்கு ஈடுசெய்யப்பட்ட மற்றும் மதிப்புமிக்க குழந்தை பராமரிப்புப் பணியாளர்கள் தேவை" என்று கனடா மத்திய அரசின் குடும்பங்கள், குழந்தைகள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சர் ஜென்னா சுட்ஸ் கூறினார். "ஆரம்பக் குழந்தைப் பராமரிப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மிகவும் திறமையான தொழில் வல்லுநர்கள், அவர்கள் எங்கள் குழந்தைகளைப் பராமரிப்பதில் சிறப்பான பணிகளை ஆற்றிவருகின்றார்கள். மேலும், அந்த பணி ஒன்ராறியோவிலும் மற்றும் நாடு முழுவதும் மதிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். அறிவிக்கப்பட்ட திட்டமானது, ஒன்ராறியோ இந்த முக்கிய பணியாளர்களை சேவைக்கு இணைத்துக் கொள்ளல் தொடர்ந்து அவர்களை, தக்கவைத்தல் ஆகிய விடயங்கள் இவற்றுள் முக்கியமானவையாகும்.

விரிவான ஆலோசனைகள் மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றுக்குப் பின்னர், இந்த குழந்தை பராமரிப்பு திட்டம் தொடர்பான சிக்கல்கள் மற்றும் முன்னுரிமைகளுக்குப் பதிலளிக்கும் ஒரு பணியாளர் திட்டத்தை ஒன்றாரியோ மாகாணம் உருவாக்கியுள்ளது. எதிர்வரும் 2024ம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த திட்டத்தில் அடங்கவுள்ள முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

கனடா முழுவதிலும் உள்ள ஆரம்பகால கற்றல் மற்றும் குழந்தை பராமரிப்பு (CWELCC) அமைப்பில் பதிவுசெய்யப்பட்ட குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் உரிமையாளர்களால் பணியமர்த்தப்பட்ட ஆரம்ப நிலையில் உள்ள சிறார்கள் கல்வியாளர்களுக்கான ஆரம்ப ஊதியத்தை மணிக்கு $20.00 என்பதிலிருந்து 2024 இல் மணிக்கு $23.86 என்ற உயர்த்துதல் தகுதி உச்சவரம்பை $1/மணி நேரத்திற்கு என்ற அடிப்படையில் நீடிப்பதன் மூலம் அதிகமான ஆரம்ப நிலையில் உள்ள சிறார்கள் கல்வியாளர்களுக் கள் பயனடையலாம்.

தொழிலில் நுழைவதற்கும் தொழில் வளர்ச்சிக்கும் இந்த திட்டம் துணைபுரிகிறது. குழந்தை பராமரிப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு சிவப்பு நாடாவை வெட்டுதல் மற்றும் அவர்களின் திட்டங்களில் பணியமர்த்துவதில் அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்குதல் என்பது அவசியமாகும்.

குழந்தை பராமரிப்புத் தொழிலின் விழிப்புணர்வையும் மதிப்பையும் அதிகரிக்க ஒரு விளம்பரப் பிரச்சாரத்தைத் தொடங்குதல் 2023 இல் தொடங்கும் CWELCC அமைப்பில் பங்கேற்கும் அமைப்புகளில் பணிபுரியும் ஆரம்ப நிலையில் உள்ள சிறார்கள் கல்வியாளர்களுக்கான புதிய ஊதியத் தளத்தை 2022 இல் அறிமுகப்படுத்தியதன் மூலம் மாகாணம் எடுத்த நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்த ஊதிய உயர்வு உருவாக்கப்படுகிறது.

அமைப்பின் கீழ் ஒன்ராறியோ குடும்பங்களுக்கு ஏற்கனவே பல பொறுப்புகளை ஒன்ராறியோவின் முதல்வர் வழங்கியுள்ளார். இதில் குழந்தை பராமரிப்பு கட்டணத்தில் சராசரியாக 50 சதவீதம் குறைப்பு, ஒரு குழந்தைக்கு $6,000 முதல் $10,000 வரையிலான சேமிப்பு.

2024 ஆம் ஆண்டிற்கான குழந்தை பராமரிப்பு மற்றும் ஆரம்ப ஆண்டு அமைப்பில் ஒன்றாரியோ அரசாங்கம் மற்றும் கனடா அரசாங்கத்தின் முதலீடுகள் கிட்டத்தட்ட கூ4 பில்லியன் ஆகும். முன்னர் அறிவிக்கப்பட்ட கட்டணக் குறைப்பு, பணியாளர் ஆதரவு மற்றும் பிற நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு நிதியுதவி உதவும். இந்த முதலீடு 2023 இல் குறிப்பிடத்தக்க $42 மில்லியனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது மற்றும் கனடாவில் உள்ள ஆரம்ப நிலையில் உள்ள சிறார்கள் கல்வியாளர்களுக்கான ஒன்ரா தொடக்க ஊதியத்தை வழங்குவதை உறுதி செய்யும், மேலும் இந்த முக்கியமான பணியாளர்களை மதிப்பிடுவதற்கும் இறுதியில் தக்கவைத்துக்கொள்வதற்கும் தொடர்ச்சியான உத்தரவாதத்தையும் தருகின்றது என ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.




TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# தி.மலை மகா தேரோட்டத்தில் மின்சாரம் தாக்கி 25 பக்தர்கள் காயம்

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகைத் தீபத் திருவிழாவையொட்டிய மகா தேரோட்டத்தின்போது, மின்சாரம் தாக்கி 25 பக்தர்கள் காயம் அடைந்தனர்.பத்து நாள் உற்சவத்தின் முக்கிய நிகழ்வான மகா தேரோட்டம் இன்று (நவம்பர் 23) நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில், திருத்தேரில் விநாயகர் எழுந்தருளினார். பின்னர் காலை 7.41 மணியளவில் விநாயகர் திருத்தேர் புறப்பாடு தொடங்கியது. பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். மாட வீதியில் வலம் வந்து, காலை 11.39 மணியளவில் நிலையை வந்தடைந்தது.

பின்னர், வள்ளி தெய்வானை சமேத முருகரின் திருத்தேர், முற்பகல் 11.55 மணியளவில் புறப்பட்டது. பக்தர்கள் வடம் பிடித்து இழுத்தனர். இத்திருத்தேர் 4.30 மணியளவில் நிலையை வந்தடைந்தது.அண்ணாமலை திருத்தேர் புறப்பட்டு நகர்ந்தபோது, நகர குற்றப்பிரிவு காவல் நிலையம் எதிரே உள்ள கடைகளில் இருந்த





பக்தர்கள் மீது மின்சாரம் பாய்ந்துள்ளது. இதனால் அலறியடித்து, மாடியில் இருந்து சிலர் குதித்தனர். முதல் மாடியில் இருந்த ஒருவர், தனது குழந்தையை கீழே இருந்தவரிடம் தூக்கி வீசினார்.

பலர் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். இதையடுத்து மின்சாரம் துண்டிக்கப்பட்டு, பழக்கடை மற்றும் துணிக்கடைகளில் இருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர். இதில் பாதிக்கப்பட்ட சுமார் 25 பக்தர்களில் சிலர் மட்டும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். 20 நிமிடம் தேரோட்டம் தடைப்பட்டன. இதனால், 30 நிமிடங்கள் பதற்றமான சூழ்நிலை நிலவியது.பின்னர், மாலை 5.06 மணியளவில் அண்ணாமலையார் திருத்தேர் புறப்பட்டது. மாட வீதியில் மெல்ல மெல்ல அசைந்தாடியபடி சென்றபோது, ''ஓம் நமசிவாய, அண்ணாமலையாருக்கு அரோகரா'' என பக்தர்களின் முழக்கம், விண்ணைப் பிளந்தது. மாட வீதியில் வலம் வந்த பெரிய தேரை, ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம்பிடித்து இழுத்து வணங்கினர். பெரியத் தேர், நிலையை வந்தடைய நீண்ட நேரமானது.

இந்திய செய்திகள்

# ஆக்கிரமிப்பை அகற்றச் சென்ற அதிகாரிகள் விரட்டியடிப்பு: 25 கடைகள் அகற்றத்தோடு நின்றுபோன நடவடிக்கை



மதுரையில் வைகை ஆறு ஸ்மார்ட் சிட்டி சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றச்சென்ற அதிகாரிகளை ஆக்கிரமிப் பாளர்கள் விரட்டியடித்ததால் ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கை பாதியிலேயே கைவிடப்பட்டது. விரட்டிய ஆக்கிரமிப்பாளர்கள் மீது போலீஸில் புகார் செய்ய மாநகராட்சி ஆணையர் உத்தர விட்டுள்ளார்.மதுரை மாநகரின் போக்கு வரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் வைகையின் வடகரை, தென்கரை மக்கள் தடையின்றி நகரின் 2 பகுதிகளுக்கும் வந்து செல்லும் வகையில் ஆற்றின் இரு கரைகளிலும் ‘ஸ்மார்ட் சிட்டி’ சாலை அமைக்கப்பட்டது.

இதில், நகருக்கு வெளியே புறநகரில் நெடுஞ் சாலைத் துறை அமைத்த சாலை சிறப்பாகவும், தரமாகவும் முழுமையாகவும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், மாநகராட்சி சார்பில் அமைத்த சாலை தரமற்றதாக இருப்பதோடு அது முழுமையாகவும் அமைக்கப்படவில்லை.இதனால், இந்தச் சாலையை வாகன ஓட்டுநர்கள் முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் நகர் பகுதியில் போக்கு வரத்து நெரிசல் எந்த வகையிலும் குறையவில்லை. இந்நிலையில், நகர் பகுதியில் வைகை ஆற்றின் இரு கரைகளிலும் முழுமையாக அமைக்கப்படாத இந்தச் சாலைகளில் வாகனப் போக்குவரத்து குறைந்ததால் தனியார் ஆக்கிரமிப்புகள் அதி கரித்தன.

கார், ஆட்டோக்கள், வேன்கள், லாரிகள் என தனியார் வாகனங்கள் நிறுத்து மிடமாக மாறியதோடு சாலையோரங்களில் கடை வைத்திருப்போர் தங்கள் பொருட்களை இந்தச் சாலையில் பரப்பி வியாபாரம் செய்கின்றனர்.மீன் கடைகள் ஆக்கிரமிப்பும் அதிகரித்தன. மாட்டுத் தொழு வங்கள் சாலையில் இருந்தன. இதனால், ஸ்மார்ட் சிட்டி சாலை சுமாரான சாலையாகக் கூட இல்லை. அதுவும் இரவு நேரங்களில் மின் விளக்கு வசதியும் இந்தச் சாலையில் பல இடங்களில் இல்லை.

இரவு நேரங்களில் வழிப்பறியில் சிக்கிவிடுவோமோ என்ற அச்சத்தில் மக்கள் இந்தச் சாலையில் செல்லவே தயங்குகினறனர். இந்நிலையில், நேற்று இந்தச் சாலையின் தென்கரையில் ஓபுளாப் படித்துறை சந்திப்பு முதல் குருவிக்காரன் சாலை சந்திப்பு வரை இருந்த தனியார் ஆக்கிரமிப்புகளை போலீஸாருடன் நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் குழுவினர் அகற்றச் சென்றனர்.

பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக இருந்த 25 கடைகளின் பழைய மரக் கட்டைகள், கதவு, ஜன்னல்கள், மரச்சாமான்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் 8 டிராக்டர்கள் கொண்டு மாநகராட்சிப் பணி யாளர்கள் மூலம் அகற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. கடைகளின் முன்புறம் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள படிகள், சிமென்ட் சிலாப்புகள், மேற்கூரைகள் அப்புறப்படுத்தப்பட்டன. இதற்கு அப்பகுதி ஆக்கிரமிப்பாளர்கள், மாநகராட்சி நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தனர்.

அப்போது சிலர், நகரமைப்புப் பிரிவு செயற்பொறியாளர் (திட்டம்) மாலதியை தகாத வார்த்தையால் திட்டினர். பாதுகாப்புக்கு 3 போலீஸார் மட்டுமே சென்றதால் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்து அப்பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற விடாமல் தடுத்தனர். அதனால், அதற்கு மேல் மாநகராட்சி அதிகாரிகளால் ஆக்கிரமிப்பாளர் களை மீறி சாலையில் இருந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற முடியவில்லை. மாநகராட்சி கேட்டுக் கொண்டும் கூடுதல் போலீஸாரை மாநகர் காவல்துறை அனுப்பி வைக்காததால் ஆக்கிரமிப்பாளர்கள், மாநகராட்சி நகரமைப்பு அதி காரிகளை விரட்டி அடித்தனர்.

ஆக்கிரமிப்பாளர்கள் தகாத வார்த்தைகளால் பேசியதால் அதிருப்தியடைந்த நகரமைப்பு அதிகாரி மாலதி மாநகராட்சி ஆணையர் லி.மது பாலனிடம் புகார் செய்தார். அவர், அப்பகுதி மண்டல உதவி ஆணையர் மூலம், தகாத வார்த்தையால் பேசிய ஆக்கிரமிப் பாளர்கள் மீது போலீஸில் புகார் செய்ய உத்தரவிட்டார்.

மேலும், அடுத்தடுத்த நாட்களில் கூடுதல் போலீஸார், வருவாய்த் துறை அதிகாரிகளுடன் வைகை ஆறு ஸ்மார்ட் சிட்டி சாலையில் நீடிக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் உத்தரவிட்டார். இந்த ஸ்மார்ட் சிட்டி சாலையை முழுமையாக அமைத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றும் பட்சத்தில் மாநகரின் 50 சதவீத போக்குவரத்தைக் குறைக்கலாம் என மாநகராட்சி அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

# செந்தில் பாலாஜிக்கு டிச.4 வரை நீதிமன்ற காவல்: 11வது முறையாக நீட்டித்து நீதிமன்றம் உத்தரவு



அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை 11வது முறையாக டிச.4 வரை நீட்டித்து சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறையினர் கடந்த ஜூன் 14ல் கைது செய்தனர்.

இந்த வழக்கில் அவருக்கு எதிராக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் வழங்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் மறுப்பு தெரிவித்த நிலையில், அவரது உடல் நிலையைக் காரணம் காட்டி உச்ச நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி வழக்கு தொடரப்பட்டுள்ளது.

புழல் சிறையில் இருந்த செந்தில் பாலாஜியின் உடல்நிலை பாதிக்கப்பட்டதால் தற்போது அவர் ஓமந்தூரார் அரசு சிறப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருடைய நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், காணொலி வாயிலாக சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.அல்லி முன்பாக நேற்று அவர் ஆஜர்படுத்தப்பட்டார்.

அதையடுத்து, அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்றக் காவலை 11வது முறையாக டிச.4 வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இதனிடையே செந்தில் பாலாஜி கைதான போது அமலாக்கத் துறை எடுத்துச் சென்று, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக் கோரி செந்தில் பாலாஜி தரப்பில் கடந்த விசாரணையின் போது மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவுக்கு அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ரமேஷ் பதில் மனு தாக்கல் செய்தார்.அதில், இந்த வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, குற்றம்சாட்டப்பட்ட செந்தில் பாலாஜிக்கு வழங்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து செந்தில் பாலாஜி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையையும் டிச.4 க்கு நீதிபதி எஸ்.அல்லி தள்ளிவைத்துள்ளார்.

இதற்கிடையே, கடந்த 15ம் தேதி ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு, கணையத்தில் இருக்கும் கொழுப்பு கட்டி, மன அழுத்தம், கால் வலி போன்றவற்றுக்காக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.தொடர்ந்து அவருக்கு பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பதில் சிரமம், மார்பு வலி உள்ளிட்ட பாதிப்புகள் இருப்பதால், அவருக்கு சிகிச்சை அளிக்க தனியார் மருத்துவக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர், அவரை 24 மணி நேரமும் கண்காணித்து தேவையான சிகிச்சைகளை அளித்து வருகின்றனர். அவரது உடல்நிலை குறித்து பகிரக்கூடாது என்று மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜிக்கு சிகிச்சை தர தனியார் மருத்துவக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, அவரை 24 மணி நேரமும் கண்காணித்து சிகிச்சை அளித்து வருகிறது.

# இவ்வார ராசிபலன்

## 24-11-2023 வெள்ளி தொடக்கம் 30-11-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றமும், மாற்றமும் நிறைந்த வாரம். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. வீண் செலவுகள் தவிர்க்கவும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். அபார சம்பத்துக்கள் சேரும். இல்லத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் அதிகரிக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். அரசியல்வாதிகள் ஏற்றம் பெறுவார்கள். புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். ஒரு சிலருக்குக் கௌரவ பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். திருமண பாக்கியம் கைகூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை பலப்படும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வசூலாகும். பொருளாதாரம் உயரும். தொட்டது துலங்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையை அடி எடுத்து வைப்பீர்கள். தீர்த்த யாத்திரை உண்டு. வழக்குகள் சாதகமாகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. புதிய எண்ணங்கள் நிறைவேறும். நிதி பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு குறையும். சுயநலம் கூடும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3*

*அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* P,X




**ரிஷபம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கும் வாரம். விரும்பிய ஆசையும் விரும்பிய காதலும் நிறைவேறும். பூமியால் லாபம் அடைவீர்கள். பிள்ளைகளால் இருந்து வந்து துன்பம் விலகும். பதவி வாய்ப்பு தேடி வரும். பங்குத்தொழில் பெரிய முன்னேற்றத்தைத் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வருமானத்திற்கேற்ற செலவு ஏற்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். குதூகலமான நிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மையுண்டு. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும். பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும். ஆக்கப்பூர்வமான எண்ணம் மனதில் உதயமாகும். பணியாட்களின் ஆதரவு அதிக அளவு பெருகும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை சேர்க்கும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு உருவாகும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனைகள் முடிவுக்கு வரும். அடுத்த வீட்டார்களின் ஆதரவு கிட்டும். பெருமிதத்தோடு காணப்படுவீர்கள். பிள்ளைகள் தேவைகள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஆடை, அணிகலன் சேர்க்கை உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்தி தரும். வணிகத்தொழில் லாபம் தரும். திருஷ்டிகள் விலகும். மற்றவர்களால் மேன்மை உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,5,9,1*

*அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Z,R




**மிதுனம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். பட்டம் தேடி வரும். நினைத்த காரியம் நிறைவேறும். தொல்லைகள் ஒழியும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் ஒன்று தாமதமாகக் கூடிய காலம். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உடல்பொலிவு கூடும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். முன்னேற்றங்கள் அதிகரிக்கும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணம் உதயமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். ஸ்டேஷ்னரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். வம்ச விருத்தியாகக் கூடிய காலம். கலகலப்பான வாரமாக அமையும். பெண்களுக்கு யோகம் கூடி வரும். உறவினர் உதவி செய்ய முன் வருவர். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். அரசமரப் பிரார்த்தனையால் ஆயுள் விருத்தி கிடைக்கும். பணமும், தனமும் பக்குவமாக கிடைக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாலம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,3,1*

*அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* D,S




**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் கூடும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மகான்களின் சந்திப்புக் கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். வாசனை திரவியத்தில் ஆர்வம் கொண்டவர் நீங்கள். தெரியாத நபர்கள் மூலம் உங்களுக்கு ஆதாயம் வரும். மங்களச் செய்தி வரும். பெருமையாக நிகழ்வுகளை அருமையாகச் சந்திப்பீர்கள். மன சந்தோஷம் கூடும். உடல்நலம் கவனம் தேவை. வாழ்த்துக்கள் வந்து சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வெளிநாட்டுப் பயணம் திருப்தி தரும். பேச்சில் துணிவு ஏற்படும். நிதி நிலைமை சீராகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். தீய எண்ணங்கள் விலகும். கலைத்தொழில் உயர்வு உண்டு. விவசாயம் விளைச்சல் தரும். அனுகூலமானப் போக்கு நிலவும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பிரார்த்தனையால் பலன் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். பணவரவு அதிகரிக்கும். சகோதரியால் நன்மை உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் அதிக மதிப்பெண்கள் எடுப்பார்கள். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். சுபகாரியம் கூடி வரும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான தீர்வு வரும். உடல் உபாதை நீங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 8,9,2,6*

*அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* C,W



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் ‘ராஜயோகம்’

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** சாதகமான சூழ்நிலை அமையும் வாரம். தொலைதூரப் பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபாரத்தில் மந்த நிலை அகலும். சொந்த தொழிலமையும். கவலைகள் அடியோடு விலகும். யோகப் பலன்கள் கிடைக்கும். கிள்ளிக் கிடைக்கும் யோகத்தால் துள்ளிக் குதிப்பீர்கள். புதிய சொத்துக்கள் சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். வெளியூர் பயணம் லாபம் தரும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்தக் காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவுகள் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். இனிய செய்தியால் மனம் மகிழும். சோதனைகள் விலகி, சாதனையான எண்ணம் நிறைவேறும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. உஷ்ண நோய் ஏற்பட்டு மறையும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. நிதிப்பற்றாக்குறை நீங்கும். கலைத்தொழில் லாபம் தரும். பொறுமையுள்ள பெண்களுக்கு பெருமை சேரும் அருமையான காலம். அமைதியாக இருப்பது நல்லது. உடல் உபாதைகள் ஏற்பட்டு மறையும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். போட்டி, பொறாமைகள் விலகும். புத்திரர் வழியில் கவலை ஏற்படலாம். புதிய நட்பை தவிர்க்கவும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவுகள் உண்டாகும். உத்தியோக மாற்றம் உண்டு. காலணிகள் காணாமல் போகும். காதல் எண்ணம் உருவாகும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மறைமுக தொல்லை நீங்கும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,3,4*

*அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* B,Y




**கன்னி:** ஆசைப்பட்ட பொருட்கள் வாங்கும் வாரம். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. கால்நடைகளால் மேன்மை உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. வேண்டாத நபர்கள் விலகிடுவர். விவேகமான காலமாக அமையும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நண்பரால் பண விரயம் உண்டு. புதிய சிந்தனைகள் உருவாகும். கலையார்வம் கூடும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரியத்தடை அகலும். இல்லத்தில் மகிழ்ச்சியுண்டு. போட்டிகள் உருவாகி மறையும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். நல்ல வாய்ப்புக்கள் தேடி வரும். வருமான வரித்தொல்லை உண்டு. பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் பிரச்சனை முற்றிலும் தீரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பாராட்டுக்கள் உயரும். வெளியூர் பயணம் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் கூடும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப்பொலிவு கூடும். நேரம் காலம் பார்க்காமல் உழைப்பீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாளைய பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,9,5,7*

*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* E,V




**துலாம்:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரம் லாபம் தரும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். உருண்டு பிரண்டாலும் கிடைக்காத செல்வம் இன்று கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். அரசு வழி ஆதாயம் கிட்டும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். எதிரிகள் உதிரியாவார்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். முடியாத வி'யங்களைக் கூட தெளிவாகச் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். கடல் கடந்த பயணம் லாபம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். கமிஷன் தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களின் கல்வியில் உற்சாகம் அடைவார்கள். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் கூடும். வியாபாரம் லாபம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9*

*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* W,L




**விருச்சிகம்:** வறுமைகள் விலகும் வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மரியாதை உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை திறன் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கிடைக்கும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் கூடும். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டுவார்கள். அணிகலன் சேர்க்கையுண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். அறிமுகம் இல்லாதவர் மூலம் ஆதாயம் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். செல்வமும், புகழும் சேரும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும்.

*வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,9,3*

*அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* J,R

**(தொடர்ச்சி 25 பக்கம்)**

## இவ்வார ராசிபலன்

(24 பக்கம் தொடர்ச்சி)





**தனுசு:** புதுமைகள் நிறைந்த வாரம். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வேலைப்பளு குறையும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு உண்டு. மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். உடன் பிறப்பால் உதவி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடி வரும். சொத்துச் சேர்க்கை உண்டு. தனித்து நின்று ஜெயித்துக் காட்டுவீர்கள். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் கூடும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். எண்ணிய காரியம் கைக்கூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் கூடும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். குதூகல எண்ணம் அதிகரிக்கும். செயலில் துணிவு கூடும். வாகனச் செலவு ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். விருப்பமான தொழிலமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மகரம்:** பயணம் லாபம் தரும் வாரம். பக்கத்து வீட்டுப் பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் பளிச்சிடும். உறவினர் வருகை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கண்ணாடித் தொழில் ஏற்றம் தரும். திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். கனவு பலிதமாகும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டாகும். தொல்லை தந்தவர் விலகிடுவர். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். நடுத்தரமான நன்மைகள் கிடைக்கும் காலம். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். சேமிப்பு உயரும். விவாத முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாகும். ஆசைகள் பூர்த்தியாகும். பெண்களின் கௌரவம் உயரும். இயந்திர பணியில் நிதானம் தேவை. சொல்லில் கவனம் தேவை. ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இனியச் செய்தியால் மனம் மகிழும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 4,3,2,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:




**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் வாரம். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத் திறமை கூடும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழ்த்தும் காலம். தாய் வழி உறவால் நன்மைகள் உண்டாகும். வியாபாரத்தில் விரயங்கள் கூடும். கடன் தொல்லை குறையும். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். தொழில் வழி தொல்லை குறையும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொருளாதார வளர்ச்சி பெருகும். மகிழ்வான நிகழ்வுகளை சந்திப்பீர்கள். கலை ஆர்வம் பெருகும். விபரீதப் போக்கு மாறும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பாராட்டுக்கள் தேடி வரும். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். செயல்திறமை வெளிப்படும். வருமானம் உயரும். காதலில் கண்ணியம் கூடும். நெருக்கடிகள் நீங்கும். அரசியலில் புகழ் சேரும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கர்ஜனையோடு வலம் வருவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 5,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,J




**மீனம்:** போட்டிகள் உருவாகி மறையும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத் திருப்பம் ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி உருவாகும். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கக் கூடிய காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படை தேவைகள் நிறைவேறும். ஆரோக்கியம் கூடும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. சுபகாரிய செய்தி வரும். தகுதியோடும், மிகுதியோடும் வலம் வரக்கூடிய ஜெயமான காலம். அனுகூலமான போக்கு நிலவி வரும். மன சந்தோஷம் கூடும். சினத்தைத் தவிர்ப்பது நல்லது. புத்தாடை ஆபரணச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். கடனால் பிரச்சனை வரும். வெற்றிகள் குவியும். ஆன்றோர் வாழ்த்துக் கிட்டும். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். சாதனை நிகழும் காலம். உடல் உபாதை தீரும். வேற்று மதத்தினரால் உதவிகள் கிட்டும். மாற்று எண்ணங்கள் உதயமாகும். தோற்றம் பொலிவு கூடும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். உறவினர்கள் பாராட்டுக் கிட்டும். பழைய நட்புத் தொல்லை தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 4,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம் (சிகப்பு), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P

## கனடாவில் மற்றுமொரு "நம்மவர்" திரைப்படம். திரையரங்கிற்குச் சென்று பார்த்து மகிழ்வோம். ஆதரவை அள்ளி வழங்குவோம்!

யா/விக்ரோறியா கல்லூரி சுழிபுரம் பழைய மாணவர் சங்கம் கனடா ஆதரவில் "சொப்பன சுந்தரி" திரைப்படம் சிறப்புக் காட்சியாக டிசம்பர் 3ம் திகதி பிற்பகல் 1 மணிக்கு Woodside Square Cinemas, 1571 Sandhurst Circle, Scarborough, ON M1V 1V2 இல் திரையிடப்படும்.

இந்நிகழ்வு நமது கலைஞர்களை நாமே வளர்த்தெடுக்கும் நோக்கோடும் எமது பாடசாலைக்கு நிதி திரட்டும் நோக்கத்தோடும் நடாத்தப்படுகிறது. அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.

தொடர்புகளுக்கு:
(416) 801-3863
(416) 627-4335
(416) 880-8314




## வன்னிமண்ணின் புதுக்குடியிருப்பு இஷானியா கலாமன்றம் நடத்திய கல்வி நிலையக் கால்கோள் விழா, சாதனையாளர் மதிப்பளிப்பு, உணவுப்பொருட்கள் வழங்கல் ஆகியன




ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள இஷானியா கலாமன்றத்தில் கடந்த 02.09.2023 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மேற்படி நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலாளர் சி. ஜெயக்காந்தும். சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் ம.ந. கடம்பேசுவரனும் கலந்து கொண்டனர். இஷானியா கலாமன்ற நிறுவுநர் வை. கமலராஜா ஒழுங்கமைப்பில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடக்க நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். சுடர் ஏற்றல் அகவணக்கம் என்பன இடம்பெற்றதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை ஆசிரியர் பாஸ்கரன் வழங்கினார். ஆசியுரையினை சிவஸ்ரீ நவரத்தினம் வழங்கினார்.

பிரதம அதிதி உரையினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி. ஜெயகாந்த் நிகழ்த்தினார். தொடர்ந்து சாதனையாளர் மதிப்பளிப்பு இடம் பெற்றது. விளையாட்டுச் சாதனையாளர் ம. அகிலத்திருநாயகி, மனிதநேயச் செயற்பாட்டாளர் ச. சுந்தரலிங்கம், அறநெறிச் செயற்பாட்டாளர் மா. பற்றிமா இராஜேஸ்வரி, குத்துச்சண்டை வீராங்கனை யோ. டிலைக்சனா, மாற்றுத்திறனாளி பெண் முயற்சியாளர் அ.வதனா ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியை கவிஞர் ஜெயம் ஜெகன் ஒழுங்கமைத்தார். மதிப்பளிப்பு பெற்றோருக்கு பொற்கிழி வழங்கலும் இடம்பெற்றது.

தொடர்ந்து இஷானியா கலாமன்றம் நிறுவுநர் வை. கமலராஜா உரை நிகழ்த்தினார். சிறப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் நிகழ்த்தினார். இஷானியா கலாமன்றத்தில் பாடங்களை நடாத்தவுள்ள ஆசியர்களுக்கான வாழ்த்தளிப்பு இடம்பெற்றதோடு, முல்லைத்தீவு ஊடக அமையத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து 50 குடும்பங்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கப்பெற்றன.

பிற்பகல் 02.00 மணிக்கு மாணவர்களுக்கான கற்கைகள் ஆரம்பித்தல் நிகழ்வு இடம்பெற்றது. 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு, அவர்களுக்கான ஆரம்ப பாடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. செய்யப்பட்டுள்ளன தமிழ், கணிதம், ஆங்கிலம், புல்லாங்குழல், கராத்தே, யோகா உள்ளிட்ட பாடங்களின் நேர அட்டவணை வழங்கப்பட்டது. நிகழ்வில் நூற்றுக்கணக்கான பெரியோர்களும் சிறியோர்களும் கலந்து கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1075

## அனலைதீவு அரிஉறுரபுத்திரஐயனார் ஆலயம் அனலைதீவு, யாழ்ப்பாணம

அண்மையில் இறைவனடி சேர்ந்த எனது அன்புக் கணவர் திரு. நடராசன் அவர்கள் அனலைதீவை பிறப்பிடமானவர். அனலைதீவு அரிஉறுரபுத்திர ஐயனார்மீது ஆராத பக்தி கொண்டவர். 20 வருடங்களுக்கு மேலாக, ஈழத்துத் திருக்கோயில்கள் தொடரா எழுதுவதற்கு அருந்துணை புரிந்தவர். அனலைதீவு அரிஉறுரபுத்திரஐயனார் ஆலயத் தொடரை, எனது அன்புக்கணவருக்கு, ஆத்மசமர்ப்பணாகச் சமர்ப்பிக்கின்றேன். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும். ஓம் சாந்தி.

*“ ஓதக் கடல்சூழ் அனலைப் பதியி லுறையுமருட்
போதக் கடலைப் புரிகுழற் பூரணை புட்கலைக்கு
நாதக் கடவுளை நாங்கள் பணிய நமைப்பணிந்து
காதக் கடல்கடந் தோடிய தீவினைக் கட்டுக்களே. ”*

ஐயனார் பதினாறு பேதங்களை உடையவர் என்று தியான ரத்னாவளி என்ற ஆகம பத்ததியில் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் மலைகளில் பிரதிஷ்டை செய்யப்படும்போது பதினாறு கைகளை உடையவராகவும், காட்டில் பிரதிஷ்டை செய்யும்போது, பத்துக் கைகள் உடையவராகவும், நகரங்களில் பிரதிஷ்டை செய்யும்பொழுது, எட்டுக் கைகள் உடையவராகவும், கிராமங்களிலே பிரதிஷ்டை செய்யும்பொழுது, இரு கைகளை உடையவராகவும் பிரதிஷ்டை செய்ய வேண்டுமெனச் சிவாகமத்திலே கூறப்பட்டுள்ளது. ஐயனாரின் வாகனங்களாகக் குதிரையும், யானையும் காணப்படுகின்றன. இவருடைய கொடியாக யானைக் கொடியும், கோழிக்கொடியும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான அரிஉறுரபுத்திர ஐயனார், அனலையம்பதியின் அருள்மிகு தெய்வமாக விளங்கி வருகின்றார். ஆரம்பத்தில் சிறு குடிலாக இருந்த இக்கோவில் வளர்ச்சியிலும் இவரது அற்புதங்களும் பரிணமிக்கின்றன. ஆலயத்திற்கு அருகேயுள்ள தீர்த்தக்கரையில், ஐயனார் அருளால் இரு பெரிய தேக்குமரங்கள் வந்தடைந்தனவென்றும், அவற்றைப் பயன்படுத்தி ஆலயத்தைப் பெரிதாக விரிவுபடுத்தினர் என்றும் கூறுவர். பின்னர் இவ்வாலயம், இவ்வூர் மக்களின் பேரார்வத்தால், காலத்திற்குக் காலம் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. நாளடைவில் ஆகம முறைகளுக்கேற்ப அழகுற அமைக்கப்பட்டு, வைரக்கற்திருப்பணியும் நடைபெற்று, நித்திய, நைமித்திக பூசைகள் நடைபெறும் ஆலயமாக விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் அருகிலுள்ள பரந்த செழிப்பான மிகப்பெரிய கூழாமரம், ஐயனார் ஆலயத்தின் தலவிருட்சமாகக் காணப்படுகின்றது. இவ்விருட்சம் யாரால், எப்போது உண்டாக்கப்பட்டதென்பதை அறியமுடியவில்லை. ஐயனார் கூழா மரத்தடியில் அமர்ந்தருள் செய்வதை,

“ திருத்து நல் நயினார்குள நற்பதி
சிறந்த கூழா மரநிழல் தங்கியே ”

என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது. ஐயனாருக்கு ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில், பூர்வபக்கச் சஷ்டித் திதியில் திருவிழா ஆரம்பமாகி, பூரணை வரை பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். ஐயனார் தீர்த்தம், ஆலயத்தின் மேற்கு வீதிக்குச் சமீபமாகவுள்ள சமுத்திரத்தில் சங்கமதீர்த்தமாகவுள்ளது. இது சேது தீர்த்தம் வந்து கலக்கும் சிறப்புடையது. இத்தீர்த்தம், பாவ வினைகளையும், தீராத உடல்நோய்களையும் தீர்க்கவல்லதாகக் காணப்படும் புனித சங்கம தீர்த்தமாகும்.

ஐயனாரின் திருவிழாக்காலத்தில், பிற இடங்களிலுள்ள மக்கள் இங்கு திரண்டுவந்து, தங்கிச் செல்வது வழக்கமாகும். இவ்வாறு வருவோர்க்கு அன்னதானப்பணி திருவிழா முழுநாட்களும் நிகழும். இதற்கென அன்னதானச் சபையாரால் மிகப் பெரிய மடமொன்றும் கட்டப்பட்டுள்ளது. மேற்கூறிய உற்சவத்தைவிட, சித்திரை மாதம் முதல் திங்களில் வரும் பொங்கல் விழாவும் மிகச் சிறப்புடையது. இக்காலத்திலும் பிறவூர் மக்கள் இங்கு வந்து பொங்கித் தமது நேர்த்திகளை நிறைவேற்றிச் செல்வர். ஐயனார் ஆலயத்தில் இருந்த பழையதேர் பழுதடைந்ததால், புதியதேரொன்று 1980 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. இலங்கையிலுள்ள சிறந்த, பெரிய தேர்களுள் இதுவும் ஒன்று. மிக அழகிய சித்திரத் தேரென இதனை வர்ணிப்பர். பூதப்பார் முதல் சிம்மாசனம் வரை 27 அடுக்குக்களை உடைய இந்த மகாரதத்தின் சில்லு, வாகை மரத்தாலும், அடுக்குகள் முதிரை மரத்தாலும், சிற்பங்கள் இலுப்பை மரத்தாலும் செய்யப்பட்டுள்ளன. இச்சித்திரத்தேர் 800 ஆண்டுகள் வரை நிலைத்து நிற்கும் தன்மை கொண்டது. இத்தகைய அற்புதமான தேர், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இலட்சுமண ஸ்தபதி அவர்களால் அமைக்கப்பட்டது. இத்தேரிலுள்ள சிற்பங்கள் உயிர்புள்ளவையாகக் காணப்படுகின்றன. பல கோடிரூபா செலவில் செய்யப்பட்ட இத்தேரில் ஐயனாரோடு தொடர்புடைய புராணக் கதைகள் பலவும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

தேர்த்திருவிழா பல்வேறு தத்துவக் கருத்துக்களைக் கொண்டது. தேரின் அமைப்பை உற்று நோக்கின், அதன் முழுத்தோற்றமும் கொழுந்து விட்டெரியும் அக்கினியின் அமைப்பிலே காணப்படும். இக்கருத்தை விளக்கவே “சாற்றிடும் அங்கியிலே சங்காரம்” எனக் கூறப்பட்டுள்ளது. இறைவனுடைய கரத்திலுள்ள அக்கினியும், சங்காரத்தைக் குறிப்பதாகும். தீமை செய்த மூன்று அரக்கர்கள் வாழ்ந்த முப்புரத்தை அழிக்க, இறைவன் தேரிலேறிச் சென்று, தமது திருவருட் பார்வையால் முப்புரங்களைப் பார்த்துப் புன்னகை செய்யத் திரிபுரங்கள் வெந்து மறைந்தன, என்பதே புராண வரலாறு. இதனையே திரிபுரதகனம் என்பர். இங்கு முப்புரம் என்பது மனிதனிடமுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குணங்களை இறைவன் தன் அருட்பார்வையால் நீக்கி, மூவகை ஆன்மாக்களாகிய சகலர், பிரளாயாகலர், விஞ்ஞானகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் அருள்புரிந்து,

பேரானந்தப் பெருவாழ்வைக் கொடுக்கின்றார் என்பதே தத்துவமாகக் கூறப்பட்டுள்ளது. பிரபஞ்சம் முழுவதும் பீடசக்தியாகவும், அவற்றுள் மறைந்திருப்பதே சிவசொரூபம் என்ற எண்ணத்துடன் இரதத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தரிசிப்போர், திரிபுரதகனம் பெற்று, நல்வாழ்வு பெறுவர்.

இதனையே திருமூலர்,
அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரம் சென்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர்அறி வாரே

என மிகத் தெளிவாகத் தேர்த்திருவிழாவின் கருத்தை விளக்கியுள்ளார். இத்தத்துவவடிவான தேர், நடமாடுகின்ற ஆலயமாகக் காணப்படுகின்றது. ஈடிணையற்ற கலைப்படைப்புக்களைத் தேரிலே காணலாம். அத்தோடு ஒன்று சேர்ந்து வடம் பிடித்து இழுப்பது, சமூக ஐக்கியத்தையும், சமரச சன்மார்க்க ஐக்கியத்தின் மூலம் இலகுவில் இறைவனைப் பெறலாம் என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

ஐயனாரோடு தொடர்பான பல கதைகள் பக்தி இலக்கியங்களிலே காணப்படுகின்றன. ஐயனார், அபயம் வேண்டி ஓலமிட்ட, இந்திரன் மனைவியான இந்திராணியைக் காத்த வரலாறு, கந்தப்புராணத்திலே கூறப்பட்டுள்ளது. அசுரர்களினால் துன்பமுற்ற இந்திரன், தன் மனைவியைக் காத்தருளுமாறு, ஐயனாரிடம் அடைக்கலம் கோரினான். ஐயனாரும் இந்திரன் கோரிக்கையை ஏற்று, தனது வீரருள் மாகாளர் என்பவரை இந்திராணிக்குக் காவலாக வைத்தார். சூரபன்மனின் தங்கையாகிய அசமுகி என்பவள், இந்திராணியின் அழகைக் கண்டு மயங்கி, அவளைக் கவர்ந்து செல்ல விரும்பிக் கையைப் பிடித்து இழுத்தாள். அப்பொழுது இந்திராணி ஐயனாரை நோக்கித் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினாள். அவ்வாறே ஐயனாருடைய கருணை அவள்மீது பட்டு இந்திராணியும் காப்பாற்றப்பட்டாள். ஐயனாரின் கருணையைக் கந்தப்புராணவரிகள் அழகாகவே சித்தரித்துள்ளன.

ஆரணச் சுருதியோர் அடலுருத் திரன் என்றேத்தும்
காரணக் கடவுள் ஓலம்: கடல் நிறத்து எந்தாய் ஓலம்:
பூரணைக்கு இறைவா ஓலம்: புட்கலை கணவா ஓலம்:
வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான் ஓலம் ஓலம்:

என்று பக்திச் சுவையுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

- தொடரும்...

---

**இங்கே பதிவு செய்யப்படும் பதிவு ஓர் காதல் கதை. இது 1985-1990 ம் இடையிலான காலகட்டத்தை சார்ந்த ஓர் கற்பனைக் கதை. இச்சிறு கதையின் மூலம் பெற்றோரிற்கான அருமையான தகவல் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் எக்காலத்திற்கும் பொருத்தமானதே. இதனை ஓர் நாடக ரூபத்தில் தருகிறேன். ஆரம்பத்தில் சிறுது சலிப்பாக இருந்தாலும் போகப்போக சுவாரஸ்யமாக இருக்கும். இதோ நீங்கள் ஆவலுடன் காத்திருக்கும்,**

# “நின்னை சரணடைந்தேன்”

*(சென்ற வார தொடர்ச்சி...)*

**கதாபாத்திரம்:**

| | |
|---|---|
| கதாநாயகன் | - கணேஷ் |
| கதாநாயகி | - மதுமிதா |
| கணேஷின் தந்தை | - சரவணமுத்து |
| தாயார் | - தருமவதி |
| மதுமிதாவின் தந்தை | - வேலாயுதம் |
| தாயார் | - சுசீலா |
| மதுமிதாவின் நண்பிகள் | - தாரணி, வாசுகி |
| மதுமிதாவின் வில்லி | - பொன்மதி |
| அதிபர் | - மிஸ் சோமசுந்தரம் |
| கனடா மாப்பிள்ளை | - பிரபா |

---------------
**காட்சி - 15**
---------------

[ஒருவாறு மது கனடா வந்து சேர்ந்துவிட்டாள் .... பிரபா காத்து நிக்க மது வருகிறாள்...]

பிரபா: ஹாய் மது ...எப்படி ட்ராவலின்க் எல்லாம் போச்சுது? பிளேனில சாப்பாடெல்லாம் சாப்பிடக்கூடியதா இருந்திச்சா? சரி நீங்க சரியா களைத்துப்போய் இருக்கிறீங்க...சூட்கேசை என்னிடம் தாங்கோ.

[இருவரும் கனடாவில் உள்ள பிரபா வீடு வந்து சேர்ந்தனர். இருவருடைய வாழ்க்கையும் தனிமையில் ஆரம்பித்தது. காலங்கள் கடந்தன... மதுமிதா மௌனத்துக்கு ஆளானாள். அவள் யாருடனும் பேசுவதில்லை. சொல்லப்போனால் பிரபாவுடன்கூட சரியாகப் பேசுவதில்லை. இனி இவர்களுக்கிடையே என்ன நடக்கப் போகின்றது என்று இருந்துதான் பார்ப்போமே!]

[மது தனிமையில் இருக்கிறாள் .... பிரபா வேலையால் வருகிறான் ....]

ஹாய் மது...என்ன மது ....வந்த நாள்முதலா இப்படியே இருந்தா எப்படி? I know you miss your parents ...I mean அம்மா அப்பா எல்லாரையும் விட்டு வந்தது உங்களுக்கு கவலையாகத்தான் இருக்கும். அதுக்காக இப்படியே இருந்தா எப்படி. come on ....come on ...get up ...இண்டைக்காவது சமைச்ச சாப்பாட்டை சாப்பிடுங்க. ப்ளீஸ்....

மது: சாரி பிரபா எனக்கு .....எனக்கு பசிக்கேல ...நீங்க சாப்பிடுங்கோ

பிரபா: இல்லை மது நீங்க கட்டாயம் சாப்பிட வேணும் .....ப்ளீஸ் ....

மது: தயவுசெய்து என்னை வற்புறுத்த வேண்டாம்....ப்ளீஸ் ...

[இதுதான் இவர்கள் வாழும் வாழ்க்கை. மதுவும் பிரபாவும் தாமரைமேல் நீர்த்துளிபோல் இன்னும் நண்பர்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.]

பிரபா: மது நீங்க இப்படி இருந்தா வெடிங் அலுவல் எல்லாம் யார் செய்யிறது? ப்ளீஸ் இதிலிருந்து நீங்கள் வெளியில் வரவேணும் .....யு மஸ்ட் காம் அவுட் ஒப் இட்!

மது: ப்ளீஸ் பிரபா வெடிங் அது இது எண்டு சொல்லி என்னை பாதர் பண்ண வேண்டாம். நான் இன்னும் ஊரை விட்டு வந்த கவலையில் இருந்து விடுபடவில்லை.

[மதுவும் பிரபாவும் வாழவில்லை என்பதை தாராணியும் வாசுகியும் மதுவின் கடிதம் மூலம் அறிகின்றனர். இந்த விசையம் கணேீன் காதுக்கு எப்படியோ எட்டியது. மது எப்படியாவது தன்னிடம் வந்துவிடுவாள் என்று இலவு காத்த கிளிபோல காத்திருக்கிறான். நாட்கள் ஓடின....]

---------------
**காட்சி - 16**
---------------

தருமவதி: ஐயா அந்தப்பிள்ளையை மறந்திடு... அவள் இனி உன்னிட்டை வரமாட்டாள். அந்தப்பிள்ளை உன்னைவிட்டு எங்கோ தொலை தூரத்தில் இருக்கு. வானத்தில இருக்கிற நிலவை பாத்து வா வா எண்டு நீ கூப்பிட்டால் நிலா வந்திடுமா ஐயா! திரும்ப திரும்ப சொல்லுறன் அந்தப்பிள்ளையை மறந்திடு தம்பி.

சரவணமுத்து: உன்னைப்பார் அப்பன் ... எலும்பும் தோலுமா இருக்கிற. அம்மா சொல்லுறதை கேள். அந்தப்பிள்ளை திரும்பி வருவாள் எண்டு கனவிலேயும் நினைக்காதே.

[இப்படி இருக்க நாட்டு நிலைமையும் மோசமாகிக்கொண்டே போனது. மதுவுக்காக காத்திருந்த கணேஷ் தோல்வி அடைகிறான். சரி இனி ஏதாவது வழியில் தன்னை பிரயோசனமாக்கிக்கொள்ள வேண்டும் எண்டு தீவிரமாக யோசிக்கிறான். கணேஷ் தன்னை ஓர் மாவீரன் ஆக்கி கொள்கிறான். கடும் போரில் களத்தில் குதிக்கிறான். பாவம் கணேஷ் ...காலம் செய்த கோலம் ....மரணத்தை தழுவிக் கொண்டான்.]

[கணேஷ் மரணச்செய்தியை கேள்விப்பட்ட மது மன நோய்க்கு ஆளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகிறாள். மேலும் மதுவின் செய்தி கேட்டு தந்தை நோய்வாய்ப்படுகிறார். பிரபா மதுவின் நிலை கண்டு வேதனைக்குள்ளாகிறான். செல்ல மகன் கணேஷின் முடிவு கண்டு சரவணமுத்து தருமவதி நிலை எப்படி இருக்கும் எண்டு சொல்லியா தெரியவேண்டும்!]

**முற்றும்!**

“ஆகவே தயவு செய்து பெற்றோர்களே பிள்ளைகளின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுங்கள். எமக்குள் இருக்கும் ஆசைகளை அவர்கள்மீது திணிப்பது தவறு. மேலும் ஏனைய பிள்ளைகளுடன் எமது பிள்ளைகளை ஒப்பிட்டு பார்த்தல் போன்ற தவறான மனோபாவங்களினால் நாமும் பாதிக்கப்பட்டு மற்றவர்களுடைய வாழ்க்கையையும் சீர் குலைக்க காரணிகளாக உள்ளோம் என்பதே இச்சிறு கதையின் கருவாகும்.”

**நன்றி!**

அன்புடன் திருமகள், ரமேஷ்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND



## Contact Me Today

**NESAN** Subramaniam **416-908-5656**

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

## WE DEAL WITH ALL BANKS

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
BAD CREDIT !!
பணப்பிரச்சனையா !
கவலை வேண்டாம்
-$ Loans
-$ Cash
-$ Debt Consolidation
-$ 1st and 2nd Mortgage
-$ Home Renovation Loan
-$ Equity Loans
கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
~ No Credit Check
~ Next Day Approval
~ Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்..
Call now: 647-812-6350




26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1442 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 24, 2023

# 'Heritage Beyond Boarders', Multicultural Organization awarded Ravi Atchuthan as 'Pioneer Canadian Tamil Filmmaker'

# 'Heritage Beyond Boarders' பல்கலாச்சார அமைப்பு ரவி அச்சுதன் அவர்களுக்கு "கனடிய தமிழ் திரைப்படத்துறை முன்னோடி" விருது வழங்கியது





கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் **Heritage Beyond Boarders'** என்னும் பல்கலாச்சார அமைப்பு 18-11-2023 சனிக்கிழமையன்று ரொறன்ரோ மாநகரில் நடத்திய 16வது ஆண்டு விருதுகள் வழங்கும் நிகழ்வில் முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் தொலைகாட்சி நிறுவனங்களின் உரிமையாளர் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார. கனடா-வில் உள்ள பல்லின மக்கள் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் என பலவற்றை பிரதிநிதித்துவம் செய்யும் சாதனையாளர்கள் அங்கு விருதுகள் வழங்கப்பெற்றார்கள்.

கனடாவின் மத்திய அரசின் முன்னாள் குடிவரவு மற்றும் பிரஜாஉரிமைகள் அமைச்சர் ஜோ வொல்பே உட்பட பல பிரமுகர்கள் விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்கள். அத்துடன் ஒன்றாரியோ மாகாணத்தின் முன்னாள் உறுப்பினரும் முன்னாள் அமைச்சரும் எழுத்தாளருமான ரொனி ரூபட் அவர்களும் சிறப்புத் தொகுப்பாளராக விழாவிற்கு மேன்மையினைத் தந்தார்.

இந்த விழாவில் கனடிய தமிழ்ச் சமூகத்தில் கலை மற்றும் ஊடகத்துறையில் பணியாற்றுகின்றவர்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற ஒருவராக திரைப்பட ஒளிப்பதிவாளரும் தயாரிப்பாளருமான ரவி அச்சுதன் அவர்களுக்கு "கனடிய தமிழ்த் திரைப்படத்துறை முன்னோடி" என்னும் விருது வழங்கப்பெற்றது. இங்கே காணப்படும் படங்களில் ரவி அச்சுதன் அவர்களின் துணைவியார் உட்பட நண்பர்கள் நிற்பதைக் காணலாம். **(Ganesh - LJI /** படங்கள் சத்தியன்)

# நீங்கள் தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்கத் தயாரில்லை என்றால் தொடர்ந்தும் அவர்களது உரிமைகளைப் பறித்து வைத்திருக்கப் போகிறீர்களா?

## பாதுகாப்பு அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தில் , கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரை

23-11-2023 அன்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சு தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு, நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரையின் சாராம்சம்.

இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் காசாவுக்கும் இடையில் நடைபெறுகின்ற மோதல் தொடர்பாக இரண்டு கிழமைகளுக்கு முன்பதாக இதே பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் ஒரு போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் பலஸ்தீன மக்களுடைய பிரச்சினை பேச்சுவார்த்தை ஊடாக தீர்க்கப்படவேண்டும் என்றும் நிறைவேற்றப்பட்டது. பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களோடு ஐ.நா. வுடைய செயலாளர் நாயகத்துக்கும் கடிதம் ஒன்று எழுதப்பட்டது. அந்தக் கடிதத்திலும் இங்கு நடைபெற்ற விவாதத்திலும் மிகத் தெளிவாக காசாவில் நடைபெறுவது பலஸ்தீன மக்களின் இனப்படுகொலை என்ற விடயம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அங்கு நடைபெறுவது இனப்படுகொலை என்பதை நியாயப்படுத்துவதற்குரிய பல அம்சங்கள் பட்டியலிடப்பட்டிருந்தது. அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் இலங்கையில் வடக்கு கிழக்கில் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தவையாகும்.



# 50வது ஆண்டில் கால்பதிக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் உத்தியோகபூர்வமான பதிவுகளோடு கனடாவில் இயங்கிவரும் நிலையில் சட்டவிரோதமாக இயக்கத்தின் பெயரையும் சின்னத்தையும் துஸ்பிரயோகம் செய்யும் "குழப்பவாதிகள்" தமிழ்நாட்டையும் ஏமாற்றுகின்றனரா?

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்றதும் எதிர்வரும் 2024ம் ஆண்டில் தனது 50ம் ஆண்டில் கால்பதிக்கும் உன்னத இயக்கமாகவும் மேலும் உலகின் பல நாடுகளிலும் தலைமைகத்தின் அங்கீகாரத்தோடு கிளைகளைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் உத்தியோகபூர்வமான பதிவுகளோடு கனடாவில் இயங்கிவருவதை உலகெங்கும் பரந்து வாழும் கல்வியாளர்களும் அரசியல் தலைவர்களும் தமிழர் பண்பாட்டை அதன் மேமை-யையும் வளர்ச்சியையும் நேசிக்கும் ஆயிரக்கணக்கானவர்களும் நன்கு அறிவார்கள். கடந்த பல ஆண்டுகளாக கனடிய மத்திய அரசின் அமைச்சகம் ஒன்றினால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பெற்று தொடர்ச்சியாக உலகின் பல நாடுகளிலும் பண்பாட்டு மாநாடுகளை நடத்திய பெருமையும் மகத்துவமும் கனடாவை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அதன் செயற்குழுவிற்கு மட்டுமே உரியது என்பதையும் பலரும் அறிவார்கள். (உள்ளே செய்தி 3ம் பக்கத்தில்)

# இன்னும் பத்து வருடங்களில் தேசிய தலைவர் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது — சி.வி.கே.சிவஞானம்



இன்னும் பத்து வருடங்களில் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலைமைதான் இங்கு காணப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் அவை தலைவர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்தப்படும் கார்த்திகை வாசம் மலர் கண்காட்சி ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்னும் பத்து வருடங்களில் தேசிய தலைவர் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது. எங்கள் மக்களிடத்தில் மறதி என்கின்ற பண்பு வளர்ந்து வருகின்றது. இதன் காரணமாக மக்கள் பழைய விடயங்களை மறக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. (தொடர்சி 12ம் பக்கம்)

# வன்னிமண்ணின் புதுக்குடியிருப்பு இஷானியா கலாமன்றம் நடத்திய கல்வி நிலையக் கால்கோள் விழா, சாதனையாளர் மதிப்பளிப்பு, உணவுப்பொருட்கள் வழங்கல் ஆகியன



ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள இஷானியா கலா-மன்றத்தில் கடந்த 02.09.2023 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு மேற்படி நிகழ்வு ஆரம்ப-மானது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலாளர் சி.ஜெயக்காந்தும். சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் ம.ந. கடம்பேசுவரனும் கலந்து கொண்டனர். இ'ானியா கலாமன்ற நிறுவுநர் வை.கமலராஜா ஒழுங்கமைப்பில் நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடக்க நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவி-க்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். சுடர் ஏற்றல் அகவணக்கம் என்பன இடம்பெற்ற-தனைத் தொடர்ந்து வரவேற்புரையினை ஆசிரியர் பாஸ்கரன் வழங்கினார். ஆசி-யுரையினை சிவஸ்ரீ நவரத்தினம் வழங்கினார். (உள்ளே செய்தி 25ம் பக்கத்தில்)